# வெற்றிமணி

London

Vettimaniy

மணி 64 | Free Circulation | சித்திரை. April 2014


**Rathy**
JEWELLERS LTD
London's Largest Selections
லண்டனில் முன்னணி நகைமாளிகை!
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்

28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063

209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233


## தமிழ் மரபுத்திங்கள் தீர்மானம் ஒன்ராறியோ சட்டமன்றத்தில் நிறைவேறியது!

## யேர்மனியில் தோட்டாக்கள் மாயம்!




## இந்தியத்தேர்தலும் அதன் வெளியுறவுக் கொள்கையும்!

- அ.நிக்ஸன்-







அனைவருக்கும் எங்கள் இனிய
தமிழ்ப் புத்தாண்டு மற்றும்
ஈஸ்ரர் பெருநாள்
வாழ்த்துக்கள்





To advertise here call
Sanje: 078 24 61 83 83

Vettimani London
To advertise here call
Sanje: 078 24 61 83 83
Vettimaniy@hotmail.com

தாயகத்தில் வெற்றிமணி கல்விப்பணி



Vishnu Cash & Carry Wembley
உங்கள் இல்லத்திற்கு வேண்டிய அனைத்து
மளிகைப்பொருட்களும் ஒரே இடத்தில்
உடனுக்குடன் இறக்கு மதி செய்யப்பட்ட
பசுமையான மரக்கறிவகைகள்
மற்றும் கடல் உணவுப் பொருட்கள்
(மீன் நண்டு இறால் கணவாய்) அனைத்தும்
நியாயவிலையில்
பெற்றுப் பயன் அடையுங்கள்
29-33 Ealing Road / Wembley HA0 4YA


LA PORCELLANA
CHINA GLASS CUTLERY
www.laporcellana.co.uk

Suppliers of
Tableware & Kitchen Equipment
to the
SRI LANKAN
Restaurant Industry
Contact
07940 465 323

ஐங்கரன்
தொலைபேசி இல. 0044 208 543 43 22
உலகத் தமிழர்களின்
உள்ளங்களிலும்,
இல்லங்களிலும்
Ayngaran
Unit 19,Riverside Business park
lyon Road ,Wimbledon
London, SW19 2RL, U.K




**GANESA Restaurant**

(Annamma Spices)
சுவைமிக்க இலங்கை
தென் இந்திய உணவுகள்
சுடச்சுடப் பரிமாறப்படும்

Party / Function Hall
Available for hire
Hall up to 60 seats

Tel 02086618777
Mobile: 075 39 00 22 68

Opening hours:
Monday to Sunday 12.00 to -23.00





# காலத்தால் கரைந்தவை!

மாதங்கி



1949 ஆண்டு வெற்றிமணி ஸ்தாபகர்
மு.க.சுப்பிரமணியம் அவர்களது திருமணம்

## கறுப்பு வெள்ளைப் படம் போலே! மனத்திரையில் ஓடுதே!

இன்று ஐம்பது அறுபது வயதினைத் தாண்டியவர்கள் நிச்சயமாக இந்த காட்சிப் பெட்டியைத் தாண்டித்தான் வந்திருக்கவேண்டும். திருமணவீடுகளில் படம்பிடிப்பவர், படம்பிடிக்கும்போது ஒரு வெளிச்சம் பாயும். அது மின்னல் அடித்தால்போல் இருக்கும். ஒரு மின்னல்வெளிச்சத்துடன் அந்த பல்பு சுட்டுப்போகும். அதனை கழட்டி எறிவார்.





நாம் அதனை ஓடிப்போய் எடுத்து கையைச் சுட்டுக்கொண்டதும் உண்டு.

அன்று படங்கள் எல்லாம் கறுப்பு வெள்ளைப்படம்தான்( நாம் அதற்கு கலர்கொடுத்து வண்ணப் படங்களாக் குவோம்)
ஆனால் அவை எமக்கு கறுப்பு வெள்ளைப்படம் போலே மனத்திரையில் ஓடும் படங்கள்.

கமாரவுக்குள் பிலிம் இருக்கும். அதனை ஒவ்வொருபடம் எடுத்ததும், சுற்றி அடுத்த படத்துக்குரிய நிலையில் விட்டு படம் பிடிக்கவேண்டும். அப்போது நாம் இருவேடங்களில் எல்லாம் படம் பிடிப்போம். பிலிமை அரைவாசி சுற்றிவிட்டு, ஒரு படம். பின்பு அரைவாசி சுற்றிவிட்டு மறுபடம். முதல் எடுத்த பகுதியை கறுப்பு காகிதத்தால் மூடிப்பிடிக்க வேண்டும். பின்பு மறுபாதியை, இப்படி பல விளை யாட்டுக்கள் இந்தக்கமராவில் காட்டிய எமக்கு இன்று வந்திருப்பது எல்லாம் தன்னிச்சையாக இயங்கும் கமரா. அதில் விஷேடமாகப்படம் எடுக்கவேண்டும் என்றால் அதிகமாகப்படிக்கவேண்டும். ஆனால் அதற்கு எங்கு நேரம்.

பிலிம்ரோலும் இல்லை, பல்பும் இல்லை, எடுத்துத்தள்ள வேண்டியதுதான். வேடிக்கை என்னவென்றால் 1000 படம் எடுத்தாலும் பார்ப்பதற்கு ஒரு படம் கிடைக்காது. எங்கு எதிலோ பதிஞ்சு வைத்தனான் காணவில்லை. அந்தப் பதிவு காணமல் போய்விடும். மற்றும் 1000 படத்திலும் 100 படம் தேறாது.
இன்று வீடுகளில் லாச்சி எங்கும் பழைய படங்கள் பிள்ளைகளையும், நாம் வந்த புதிதில் எடுத்தபடங்களுமாக ஏராளம் குவிந்து கிடக்கின்றது. எமக்கு எமது படம் முக்கியம். பிள்ளைகளுக்கு அவர்களது படம் முக்கி மில்லை. காரணம் ஒரு இடைப்பட்ட வயதில் அவர்கள் அழகு கம்மியாக இருப்பதாக அவர்களுக்கு ஒரு நினைப்பு. அதனால் அப்படங்களை எவருக்கும் காட்ட விரும்பார்கள். இது யதார்த்தமான உண்மை. ஆனால் பெற்றோருக்கு அந்தப்படங்கள் யாவும் அன்றலர்ந்த தாமரைபோல் மனத்திரையில் வாசம்பொங்க என்றும் நிற்கும்.




அன்று எடுத்த படங்கள் கண்ணுக்குத் தெரியும் படங்களாக, காலம் காலமாக நிலைத்து நிற்கின்றது.
படங்கள் ஒரு புறம் என்றால் அதன் நெக்கற்றீவுகள் ஏராளம். ஏன் இதனை, இனி இவற்றைப்பயன்படுத்தவும் முடியாது, என்று எண்ணி எடுத்து வெளிச்சத்தில் பிடித்துப்பார்த்தால் அந்த நெக்கற்றீவ் மறக்கமுடியாத பல வெளிச்சங்களைக் காட்டும். பின்பு எப்படி எறிவது. அதனை யாரிடமும் கொடுத்து இப்போது வந்துள்ள ஸ்கனரில் அதனைமாற்றி படமாக்கி எடுத்து, அந்த ஆயிரம் படங்களுடன் சோத்துவைக்கின்றோம்.

உண்மையில் வெளிநாட்டவர்கள் படங்கள் ஒரு காலத்தின் சரித்திரத்தைக்கூறுவதாக கருதுபவர்கள். நாம் அதனை அப்படி எண்ணுவது குறைவு. எம்மிடம் பழைய படங்களின் களஞ்சியம் என்று ஒன்று இல்லை. திரைப்படங்களின் பழையபடங்கள், பாடல்கள் என்று சேர்த்த அளவிற்கு இந்தப்படங்களை நாம் சேர்க்கவில்லை. ஊரிலும் படங்கள் இல்லை. அங்கு நடந்த வேதனையான யுத்த அனர்த்தங்கள் அதற்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. புலம்பெயர் நாடுகளிலும் எமது சரித்திரத்தை காட்டவல்ல புகைப்படங்களை முடிந்தவரை பாதுகாக்கவேண்டும்.

காலத்தால் கரைந்துபோன இந்த கமாராக்கள் காட்சிப் படுத்தித் தந்தவை எமது வாழ்வின் பலகட்டமாக அமைந்த வாழ்வினை என்பதனை மறுக்கமுடியாது. உங்கள் லாச்சிகளுக்குள் இருக்கும் படங்களை ஒவ்வொன்றாக எடுத்து தரம் பிரியுங்கள். அதற்குள் நம் வாழ்வோடு இணைந்த பல ஜீவன்கள் வாழ்ந்துகொண்டிருப்பது தெரியும்.


**LAKSHAN'S**

லக்ஷன்ஸ் தமிழ்க்கடை

உங்கள் இல்லத்திற்கு வேண்டிய அனைத்து
மளிகைப்பொருட்களும் ஒரே இடத்தில்
உடனுக்குடன் இறக்கு மதி செய்யப்பட்ட
பசுமையான மரக்கறிவகைகள்
மற்றும் கடல் உணவுப் பொருட்கள்
(மீன் நண்டு இறால் கணவாய்)
அனைத்தும் நியாயவிலையில்
பெற்றுப் பயன் அடையுங்கள்




தரம் நிரந்தரம் கணேசா நகையகம் Finest 22ct Gold Diamond White Gold Jewellery and Repair

**GANESHA JEWELS** Eastham

நவீன டிசைன்களில் புதிய சிந்தனையுடன் வடிவமைப்பவர்கள்
திருமணத்திற்கு ‘பொன்னுருக்குதல்’ இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.
வைரத்தாலிக்கொடி நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
திருத்தல் வேலைகள் உடனுக்குடன் செய்து தரப்படும்.
பழைய நகைகளை மாற்றி, புதிய சிங்கப்பூர் நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

Finest 22 ct
Gold Diamond
White Gold Jewellery and Repair

330 High Street North - Eastham/ E12 6PH - Tel: 0208 470 7844 / e.mail:ganeshajewels@hotmail.co.uk





அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## வெற்றிமணி

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**
—கவிஞர்.வி.க

**ஓசை 211**



**ஆரம்பம்:**1950

ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

**பிரதம ஆசிரியர்**
“ஓவியக்கலைவேள்”
**கலாநிதி**
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



**Brinker Höhe.13**
**58507 Lüdenscheid**
**Germany**
**Tel: 02351/45 88 62**
**0157 88 77 31 56**

e-mail: vettimaniy@hotmail.com


**“வெற்றிமணிமொழி”**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
**சிவகுமாரன் சஞ்ஜீவன்.**B .Eng (Hons)
Vettimaniy Ltd
Company No: 8876276





# தேர்தல் காலங்களில் நம்பிக்கைகள்! ஏமாற்றங்கள் வந்துபோவது இயல்பானதுதான்.

## இந்தியத்தேர்தலும் அதன் வெளியுறவுக் கொள்கையும்!

**எழுதப்பட்ட மாற்றமுடியாத வெளியுறவுக் கொள்கைக்கு மாறாக கருத்துக்களை கூறி தமிழ்நாட்டு மக்களையும் இலங்கைத் தமிழர்களையும் அரசியல் மலடுகளாக்க முற்படுவது நேர்மையற்ற அரசியல். அன்று மீட்பர்களாக கருதப்பட்ட பி.வி.சிங்-வாஜ்பாய் ஆகியோர் இலங்கை தமிழர்களுக்காக எதுவும் செய்யமுடியாத கையறு நிலையில் ஆட்சிபுரிந்தனர். ஜெனீவா பிரேரணை தொடர்பாக நரேந்திரமோடி இன்னமும் தனது சொந்தக் கருத்தைக்கூட வெளியிடவில்லை. ஏனெனில் இலங்கை அரசாங்கத்தை பகைத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை.**

**-அ.நிக்ஸன்-**



இந்திய தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி வெற்றிபெற்றால் இலங்கை தொடர்பான இந்திய நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுமா என்பதுதான் இன்று பலரின் கேள்வியாகவுள்ளது. சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெற்றால் மாற்றமில்லை என்றும் ஆனால் நரேந்திரமோடி தலைமையிலான பா.ஜ.க வெற்றிபெற்றால் இலங்கை தமிழர்களுக்கு ஏதேனும் விடிவு கிடைக்கும் என்றும் பலர் நம்புகின்றனர். தேர்தல் காலங்களில் மக்கள் மத்தியில் இவ்வாறான நம்பிக்கைகள்- ஏமாற்றங்கள் வந்துபோவது இயல்பானதுதான்.

### இந்திய வெளியுறவுக் கொள்கை

இந்தியாவை பொறுத்தவரை அதன் வெளியுறவுக் கொள்கை என்பது எழுதப்பட்ட மாற்றமடையாத ஒன்று. காலத்தின் தேவைக்கேற்ப சில மாற்றங்கள் செய்யப்படும். அத்துடன் பிராந்திய நலன் கருதி சில விட்டுக் கொடுப்புகளுக்கும் இந்திய வெளியுறவுக் கொள்கையில் இடமுண்டு. ஆனால் எந்த கட்சி ஆட்சியமைத்தாலும் இந்திய வெளியுறவுக்கொள்கை என்பதில் மாற்றம் செய்யமுடியாது. அது இந்திய கொள்கை வகுப்பாளர்கள்- இந்திய தேசிய நலன்கருதி தீர்மானம் எடுப்பவர்களின் கைகளில்தான் உள்ளது. ஆகவே எந்தக் கட்சி ஆட்சியமைத்தாலும் இந்திய வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களை எடுத்தவுடன் செய்யமுடியாது என்பது கண்கூடு. இந்திய அரசியலமைப்பு எழுதப்பட்ட நெகிழாத யாப்பு. அதற்கேற்பவே இந்திய வெளியுறவுக் கொள்கை யும் தீர்மானிக்கப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை கட்சி அரசியல் செயற்பாடுகளை மையப் புள்ளியாக வைத்துக்கொண்டு வெளியுறவுக் கொள்கையை தீர்மானிக்கும் பண்பு கிடையாது. கட்சிக் கொள்கைக்கு ஏற்ப வெளியுறவுக் கொள்கையை வகுக்கும் பண்பு இலங்கை அரசாங்கத் திடம் மாத்திரமே உண்டு. ஏனெனில் அது சிறியநாடு என்பதுடன் பிராந்தியத்தில் அதன் முக்கியத்துவம் குறைவு என்பதால் இலங்கை வெளியுறவுக் கொள்கையில் சர்வதேசநாடுகள் பெரியளவு கவனம் செலுத்துவதி இல்லை. ஆனால் போர் நடைபெற்ற காலத்தில் புலிகளை அழிப்பதற்கான அல்லது தமிழ் மக்களின் அரசியல் முக்கியத்துவத்தை குறைப்பதற்கு ஏற்றமுறையில் அனைத்து நாடுகளுடனும் உறவை பேணுகின்ற ஒரு இராஜதந்திரமுறையை முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர். ஜயவர்த்தன உருவாக்கிக்கொடுத்தார்.

### மஹிந்த சிந்தனை கொள்கையல்ல

அந்த கொள்கைகளைத்தான் இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் பின் பற்றுகின்றார். இந்தியாவை அணைத்துக்கொண்டு சீனாவிடம் முழுமையான உதவி பெறுகின்ற கொள்கை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் இருந்தாலும் ஜே.ஆர் ஜயவர்த்தன உருவாக்கிய அனைத்து நாடுகளையும் சமாளித்துச் செல்லுகின்ற கொள்கைதான் இலங்கை அரசாங்கத்துக்கு 2009இல் போரை அழிக்க உதவியது எனலாம். இந்த இடத்தில் புலிகளை அழிப்பதுதான் இந்திய வெளியுறவுக் கொள்கையும் என்ற முடிவுக்கு வரலாம். இந்திய வெளியுறவுக் கொள்கையில் இலங்கை தொடர்பான பகுதி எவ்வாறு அமைந்துள்ளது என்று யாருக்கும் புரியாது. ஆனால் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டமையும் தமிழர்களுடைய அரசியல் கோரிக்கைகள் இந்திய மாநில அரசுகளுக்குரிய அதிகாரங்களை ஒத்ததாக அல்லது அதனைவிடவும் குறைவாகவே அமையவேண்டும் என்பது இந்திய வெளியுறவுக் கொள்கையில் எழுதப்படாத ஒரு அம்சமாக உள்ளதாக கூறமுடியும்.

2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதுதான் இலங்கையின் கொள்கை என்றும் அவர் கூறியிருந்தார். இலங்கை தொடர்பான இந்திய வெளியுறவுக் கொள்கையில் உள்ள சில அம்சங்களை மஹிந்த சிந்தனையில் இணைத்திருப்பதாகவும் மஹிந்த ராஜபக்ச அன்று கூறியிருந்தார். இந்தியாவை பொறுத்த வரை தேர்தல் காலத்தில் வெளியிடப்படுகின்ற விஞ்ஞாபனங்கள்- ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு எவ்வாறு சேவையாற்றுவது என்பது தொடர்பாக மாத்திரமே அமைந்திருக்கும். ஆனால் இலங்கையை பொறுத்தவரை அவ்வாறு இல்லை. ஆட்சிக்கு வந்ததும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டவைதான் அரசின் கொள்கை யாகவும் மாறிவிடும். அதுவே வெளியுறவுக் கொள்கை யாகவும் அவ்வப்போது பயன்படுத்தப்படும். ஆனால் இந்தியாவில் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்கள் என்ற இரண்டு சக்திகளின் முடிவுகள்தான் முக்கியமானதாக அமையும். கட்சி அரசியல் கொள்கை களுக்குஅங்கு இடமில்லை.

**தொடர்ச்சி 6ம் பக்கம்**






அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்




## எதிர்பார்த்த மாற்றம் வராது

3ம் பக்கத் தொடர்ச்சி....

ஆகவே இந்தியத் தேர்தல் முடிவுகளில் தமிழர்களுக்கு எதிர்பார்த்த மாற்றம் ஏற்படாது. அவ்வாறு இந்திய வெளியுறவுக் கொள்கை இலங்கையின் வெளியுறவுக் கொள்கை போன்று கட்சி அரசியலுக்கேற்ப மாறுவதாக அமைந்திருக்குமானால் காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக போட்டியிட்டு 1990 ஆம் ஆண்டு பி.வி.சிங் ஆட்சியமைத்தபோதும் அதன் பின்னர் வாஜ்பாய் ஆட்சியமைத்தபோதும் இலங்கைத் தமிழர்களுக்காக எதுவும் செய்யமுடியாமல் போனது ஏன்? ஜோர்ஜ் பெர்ணான்டோஸ் பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் புலிகளுக்கு சார்பான ஒரு நிலைப்பாட்டை முன்வைத்திருந்தார். ஆனால் அவர் அங்கம் வகித்த அரசாங்கத்தினால்கூட இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்ற ஒரு அரசியல் தீர்வை முன்வைக்க முடியவில்லை. புலிகள் மீதான தடையைக்கூட நீக்கமுடியவில்லை.

ஆக- கட்சி அரசியல் ஊடாக இலங்கைத் தமிழர்களுக்காக குரல்கொடுத்து இந்தியாவெங்கும் பேசலாம் என்ற ஒரு சுதந்திரத்தைத் தவிர யார் ஆட்சியமைத்தாலும் இந்தியாவின் எழுதப்பட்ட வெளியுறவுக் கொள்கைகளை தாண்டி இலங்கைத் தமிழர் விடயத்தில் அரசியல் தீர்வை முன்வைக்கவோ அல்லது உதவிகூட செய்யவோ முடியாது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம். ஆகவே பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்ற நம்பிக்கைகள் ஊட்டப்படுவது மற்றுமொரு ஏமாற்று முயற்சி. வேண்டுமானால் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு சிறியளவில் சில இடையூறுகள் வரலாம். ஆனாலும் இரு நாட்டு இராஜதந்திர உறவின் அடிப்படையில் அந்தத் தடைகள்கூட விலகுவதற்கான வாய்ப்புகள்தான் அதிகம் காணப்படுகின்றன.

### தமிழக அரசியல் கட்சிகள்

தமிழக அரசியல் கட்சிகளை பொறுத்தவரை குறிப்பாக ஜெயலலிதா- கருணாநிதி தலைமையிலான அரசியல் கட்சிகள் இந்திய வெளியுறவுக் கொள்கை என்பதை தெரிந்தும் வாக்குகளை மாத்திரம் பெறும் நோக்கில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் புதுடில்லியில் உள்ள கட்சிகளுடன் கூட்டுச் சேரும்போது பொய்யான வாக்குறுதிகளை வீசுகின்றனர். நரேந்திரமோடி தலைமையிலான பா.ஜ.க தொடர்பாக தமிழ்நாட்டில் தற்போது பேசப்படுகின்ற நம்பிக்கையான விடயங்கள் எதுவும் சாத்தியப்படக்கூடியவை அல்ல. குறைந்தபட்சம் காவேரி நீரை தமிழ்நாட்டுக்கு தொடர்ச்சியாக கொண்டுவருகின்ற திட்டத்தில்கூட பா.ஜ.கவிடம் உருப்படியான யோசனைகள் இல்லை. ஏனெனில் அதுகூட இந்திய தேசிய பாதுகாப்பு அல்லது தேசிய உற்பத்தித் திட்டம் என்ற கொள்கையில் உள்ளடங்கியுள்ளது. இந்த நிலையில் தமிழக அரசியல் கட்சிகள் குறிப்பாக வைகோ- பழநெடுமாறன்- சீமான் போன்றவர்கள் சோனியாகாந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கத்தை கவிழ்க்கவேண்டும் என்பதற்காக பா.ஜ.க தொடர்பாக கூறுகின்ற கற்பனையான கதைகள் இலங்கைத் தமிழர்களை பொறுத்தவரை மீண்டும் ஒரு முள்ளிவாய்க்காலாகவே அமையும்.

தேர்தலுக்காக கூட்டுச் சேருவதென்பது வேறு. ஆனால் இந்திய அரசியல் யாப்பில் உள்ள மாற்றமுடியாத வெளியுறவுக் கொள்கைக்கு மாறாக கருத்துக்களை கூறி தமிழ்நாட்டு மக்களையும் இலங்கைத் தமிழர்களையும் அரசியல் மலடுகளாக்க முற்படுவது நேர்மையான அரசியல் அல்ல. கடந்தகால பட்டறிவுகள் இந்திய வெளியுறவுக் கொள்கை எது என்பதையும் மீட்பர்களாக கருதப்பட்ட பி.வி.சிங்- வாஜ்பாய் ஆகியோர் எதுவும் செய்யமுடியாத கையறுநிலையில் ஆட்சி புரிந்தமையும் தெரிந்த வரலாறுகள்தான். இவை எல்லாமே இலங்கைத் தமிழர்களுக்கு ஞாபகத்தில் உள்ளன. ஆனால் தமிழக அரசியல்வாதிகள் அதனை மறந்துவிட்டார்கள் போலும். ஜெனீவா பிரேரணை தொடர்பாக நரேந்திரமோடி இன்னமும் தனது சொந்தக் கருத்தைக்கூட வெளியிடவில்லை. ஏனெனில் இலங்கை அரசாங்கத்தை பகைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. இதுதான் உண்மை.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயகம் **குரும்பசிட்டியைப்** பிறப்பிட மாகவும் Switzerland / Wangen ஐ வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் பாஸ்கரன் இராசேந்திரம்.**

**திதி:27.04.2014**



பத்து ஆண்டுகளாய்...
உருவம் மட்டுமே எமை விட்டு நீங்கியது
அருவமாய் எமது உயிர்ப்பூவுக்குள்
நிறைந்து , உறைந்து, வியாபித்து
எமை இயக்கும் அன்பின் உருவே!!
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
நம் இனிய வாழ்வின் தடங்கள்
நீங்கா நினைவுகளாய்......

ஆன்மா சாந்திக்காய்..
.இறையருள் வேண்டி.....
என்றும் உங்கள் நினைவுடன்
**அன்பு மனைவி, பிள்ளைகள்....**

**அமரர் இராசேந்திரம் பாஸ்கரன்**
அன்னையின் மடியில் 09.04.1950
ஆண்டவர் மடியில் 17.04.2004
**தகவல்:** Ravindran sasikala
Switzerland, Tel:062 961 6964




புவனம் தர்மரட்ணம்

# முட்டை கட்லட்

### தேவைவான பொருட்கள்

முட்டை-4
ரின்மீன் 100கிராம்
உருயைக்கிழங்கு 150கிராம்
மிளகு தூள் அரை தேக்கரண்டி
இஞ்சி, பூண்டு விழுது அரை தேக்கரண்டி
புச்சை மிளகாய் 4
பெரும் வெங்காயம் 1
உப்பு, கறிவேப்பிலை தேவைக்கேற்ப
கலரிங்- சிவப்பு, பச்சை ஒரு துளி- அலங்கரிக்க

செய்யும் முறை

உருளைக் கிழங்கையும் மூன்று முட்டையையும் வேக வைத்து மேல் தோலை நீக்கிவைக்கவும், மீனையும் (முள்இல்லாமல் சுத்தம் செய்த பின்) ஒரு கடாயில் வெங்காயம், பச்சை மிளகாய்இ காரிவேப்பிலையை சிறிதாக வெட்டி ஒரு மேசக் கரண்டி எண்ணெய் வட்டு லேசாக வறுத்து இறக்கி ஆறவிடவும். பின் உருளைக் கிழங்கை பிசைந்து அதனுடன் உப்பு, தேவையான புளி, மிளகு தூளையும் சேர்த்து கட்லட் பதம் போல் சேர்க்கவும். பின்னர் அவித்து வைத்த முட்டை மேல் இதை மூடி நன்றாகக் அழுத்திப் பிடிக்கவும். ஒரு முட்டையை நன்கு அடித்து அதில் ஒவ்வொன்றாக தோய்த்து, றக்ஸ் தூளில பிரட்டவும். அரை மணி நேரம் கழித்து பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். ஆறிய பின் பாதியாக வெட்டி, கலரிங்கை மாறி மாறி மஞ்சள் கருவின் மேல் பொட்டு போல வைக்கவும். இளஞ் சூட்டுடன் பரிமாறவும், சாப்பாட்டையும் அலங்கரித்தது போல் இருக்கும்.




அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்




11 வயது நிரம்பிய கரனை பார்ப்பவர்கள் எட்டு வயதே மதிப்பார்கள். ஆனால் அவனோ அந்த 18 ,19 வயது இழைஞர்கள் மூவரின் பின்னால் கையில் ஒரு தடியை பாதையெங்கும் இழுத்து கோடு போட்ட படி நடந்துகொண்டு இருந்தான். முதல் தடவையாக வேலைக்குப் புறப்பட்டு இருக்கிறான். பெரிதாக ஒன்றும் வெட்டிப் புடுங்கும் வேலை இல்லை இது ஒரு எட்டிப் புடுங்கும் வேலை. புடுங்குவதும் தேங்காய் மாய்காய் இல்லை வெறும் பூ. அவன் இந்த வேலைக்கு போக பல காரணங்கள் உண்டு ஆனால் ஒரு தகுதியும் இல்லை. ஊரில் இருக்கும் போது அவனது தந்தை வாழை நாட்டுவதற்காக ஆழமான கிடங்கு வெட்டி நடுவே வாழைக் குட்டியை வைத்து இவனை பிடித்துக் கொள்ளும் படி கூறி மண்ணை போட்டு மூடுவார் . வாழைக் குருத்து அவனது வண்டியோடு முண்டிக்கொண்டு நிற்கும் புதிதாக வரும் குருதுக்களை விரியமுன் கிழித்து விடுவதில் பேரானந்தம் அடைவான் . ஒரு நாள்

" ஏனப்பா இவ்வளவு ஆழமாக கிடங்கு வெட்டி நடுகிறீர்கள் சின்ன சின்ன கிடங்கு வெட்டி நடலாமே ?" என்று கேட்டதற்கு " வாழை ஆழ நடு தொன்னை தொரிய நடு" என்று தந்தை கூறிய வேத வாக்கை நம்பி இந்த வாழைப் பொத்தி பிடுங்கும் வேலைக்கு சேர்ந்து கொண்டான். ஆனாலும் வாழையை நினைக்க வயிற்றை கலக்கிக் கொண்டு வந்தது . அப்பாவிற்கு தொரிந்தது இங்குள்ளவர்களுக்கும் தெரிந்து இவர்களும் வாழையை ஆழ நாட்டிருந்தால் மட்டுமே வாழைப் பொத்தி இவனுக்கு எட்டும்.

"ஒரு வேளை எட்டாவிட்டால் என்ன செய்வது எதற்கும் முன்னே போகும் ஒருவரிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டால் என்ன.' என்று எண்ணுகையில் தம்பி ரமாவின் வாடிய முகம் கண்முன் தோன்றியது.

'பெரிதாக என்ன வந்து விடப்போகிறது ஒன்றில " சீ..... நீ இந்த வேலைக்கு சரி வர மாட்டாய் போய் கொஞ்சம் வளர்ந்தாப்பிறகு வா " என்று சொல்லுவார்கள். அல்லது "இந்த சின்னப் பயலை ஏனடா கூட்டிவந்த நீங்கள் " என்று இதோ முன்னுக்குப் போகிறார்களே இவர்களுக்கு பேச்சு விழும் அவ்வளவுதான். ஆனால் அவர்களோ அதுபற்றி எந்த கவலையும் கொண்டதாக தெரியவில்லை. நானாக ஏன் குட்டையை குழப்புவான்' என்று மௌனமாக இருந்து விட்டான்.கரனுடன் கூட விழையாடுவதற்கு வீட்டில் யாரும் இல்லை. சில சமயங்களில் மூன்று வயதான தம்பியையும் நாயைக்குட்டியையும் சேர்த்து விழையாடுவான். நாய் இவனை திரத்தும் பின் இடை நடுவில் நாய்குட்டி தம்பியை திரத்த அவன் விழுந்து எழும்பி வீரிட்டுக் கத்தி இறுதியில் அம்மா தடியோடு இவனை திரத்தி வருவதுடன் அந்த விழையாட்டு முடிவுக்கு வரும். ஒரு வருடத்திற்கு முன் வவுனியா பூவரசங்குளத்தில் இருந்து நாட்டுப் பிரச்சனையால் இடம் பெயர்ந்து ஓமந்தை பாடசாலைக்கு வந்த போது கரனின் சந்தோசத்திற்கு அளவே இல்லை.

எத்தனை நண்பர்கள் . பூவரங்குளம் கிராமமே அந்த பாடசாலையில் தானே தஞ்சமடைந்து இருந்தது.

பாடசாலை , வீட்டுப்பாடம் , சாப்பாடு , கொஞ்ச நேரம் விழையாட்டு என்ற வழக்கம் அகதி முகாமிற்கு வந்ததும் தலை கீழாக மாறி : விழையாட்டின் நடுவிலே ஓடிப்போய் சாப்பிட்டு விட்டு வந்து மீண்டும் விழையாட்டை முழுநேரமாக செய்து கொண்டு இருந்தான். இவ்வளவு ஏன் அம்மா அப்பா கூட அரை வாசி நேரம் வகுப்பறை வாசலில் இருந்தபடி இவர்களின் விழையாட்டைத்தானே பார்த்தக்கொண்டு இருந்தார்கள். ஆனால் அந்த வாழ்க்கையும் அப்பா பூவரங்குளத்தில் இருந்த அவர்களது வீட்டை பார்க்கப்போய் திரும்பி வராமல் காணாமல் போனதில் இருந்து தொலைந்நு போனது.

அன்றில் இருந்து அம்மாவும் அடிக்கடி நோயில் படுத்தார். தம்பியை இடுப்பில் வைத்தபடி மற்றவர்கள் விழையாடுவதை அவ்வப்போது எட்டிப் பார்ப்பான். ஓமந்தையிலும் இருக்கமுடியாமல் மீண்டும் இடம் பெயர்வு. இடம் பெயர இடம் பெயர இருக்கம் பொருட்களும் ஒவ்வொன்றாக அவர்களை விட்டு இடம் பெயர்ந்தது. தந்தை தூக்கி வந்த சில பாரமான பொருட்களை தாயால் கொண்டு வர முடியாமல் போக அங்கேயே விட்டு விட்டு கிளிநொச்சியில் உள்ள -கோணாவில் காந்திக் கிராமம் - எனப்படடும் இந்த அகதி முகாமிற்கு வந்து சேர்ந்து இரண்டு மாதம் ஆகிறது. இங்கே அகதி சாமான் என்று அரிசியும் பருப்புமே தருவார்கள் மீதி எல்லாம் கடையிலேயே வாங்க வேண்டும் . வீட்டில் ஆம்பிளை உள்ளவர்கள் அயல் அட்டையில் வேலைக்கு போவார்கள். அம்மாவும் அவ்வப்போது எதாவது வேலைக்குப் போய் வருவார். கடந்த ஒரு மாதமாக அவரால் முற்றாக முடியாமல் போய் விட்டது.

அம்மாவிற்கு அம்மாள் வருத்தம் (சின்ன முத்து ) உடல் நிலை மோசமாகியது. தம்பி அம்மாவிற்கு கிட்டையும் போக முடியாது வருத்தம் தொத்தி விடுமாம். அவரால் எழுந்திருக்கவே முடியவில்லை இதில் சமைப்பது எப்படி. வீட்டில் அரிசி சேடம் இழுக்க பருப்பு உயிரை விட்டிருந்தது. அதனால் அம்மா சொல்லச் சொல்ல இவனே கஞ்சி காச்சுவான். அந்த வெறும் கஞ்சியிலேயே மூவரின் உயிரும் தங்கி நின்றது. கஞ்சி என்றால் தம்பி நல்லா குடிப்பான். ஆனால் ஒருக்கா மூத்திரம் போய் வந்து விட்டால் அழ ஆரம்பித்து விடுவான் . அம்மாவும் அந்த கஞ்சியோடயே நாள் முழுக்க பாயில் கிடக்கிறார். சில சமயம் காச்சல் வாய்க்கு குடித்த கஞ்சியையும் சத்தி எடுத்து விடுவார்.ஒவ்வொரு நாளும் அம்மாவின் அம்மை வருத்தத்திற்கு முத்து மாரியம்மன் தாலாட்டு பாட வரும் நாலாம் கொட்டிலில் வசிக்கும் அருமைநாயகம் ஐயா 'ஏதாவது நல்ல சாப்பாடாய் சாப்பிடு பிள்ளை' என்று சொல்லி விட்டுப் போகிறார். ஆனால் அதற்கு கையில் காசு இருக்க வேண்டுமே. முகாமிற்கு முன்னால் இருக்கிற கொட்டில் கடையில் பாண்,பணிஸ்,இடியப்பம் என பல வகை வகையான சாப்பாடுகள் வரும் அம்மாவையும் தம்பியையும் நினைத்த படி அவற்றை பார்த்துக் கொண்டு நின்று விட்டு வருவான் .தம்பிக்கு பணிஸ் என்றால் கொள்ளை பிரியம் யாரும் வேண்டிச் சாப்படுவதை கண்டு விட்டால் காட்டிக் காட்டி அழுவான். பணிசுக்குப் பதிலாக காக்கா ,குருவி ,அணில் போன்ற வற்றை தேடித் தேடிக் காட்டுவான் கரன். ஓடும் அணிலைப் பார்த்தால் சிரிப்பான் அது ஒரு இடத்தில் நின்று விட்டால் அழுவான் .இந்த நிலையில் தான் கரன் தானும் வேலைக்கு வருவதாக சேர்ந்து கொண்டான் . மண்ணில் வேலை என்றால் செய்யலாம் இது மரத்தில் வேலை அதுவும் கொப்பில்லாத மரத்தில் . இழுத்துக்கொண்டு வந்த தடியை மீண்டும் ஒருமுறை தூக்கிப் பார்த்துக்கொண்டான் . ஒரு வேளை இவன் பயந்தது போல வாழைப் பொத்தி எட்டாது போனால் இந்த தடியால் தட்டிப்பிடுங்கி விட வேண்டும் என்பது அவனது இன்னொரு திட்டம்.

கோணாவில் செழிப்பான கிராமம் இந்த மண்ணில் எவ்வளவுதான் விழுந்து புரண்டாலும் உடலில் அழுக்கு பிரளாது வெள்ளை வெளேரென்ற மணல் மண். தோட்டத்திற்கு உகந்த மண் . அக்கராயன் குளத்து நீர் கோணாவில் கிராமத்தையும் சோலையாக்கிக் கொண்டு இருந்தது. நாலா புறமும் தென்னை ,பாக்கு, மா ,பிலா போன்றவற்றோடு வாழைத்தோட்டங்களும் வயல்களுமாக பச்சைப் பசேல் என்று இருக்கம். அவ்வப்போது அங்குள்ள வாழைதோட்டங்களில் பொத்தி , வாழைக்குலை , வாழையிலை பிடுங்கி சந்தையில் விற்பதற்கு என அகதி முகாமில் உள்ளவர்களை வேலைக்கு அழைப்பது வழக்கம். அப்படி நாலு போர் வேண்டும் என்று கேட்டதாலேயே கரன் தானும் வருவதாக கூறி வந்து விட்டான். முருகன் கோயில் தாண்டி இருந்த பெரிய வாழைத் தோட்ட சோலைக்குள் மூவரும் நுழைந்தார்கள். கரனும் நுழைந்து படலையை சாத்திக் கொண்டான். உரப்பையை எடுத்துக்கொண்டு வாழை மரங்களை அண்ணாந்து பார்த்தபடி ஆளுக்கு ஒரு திசையில் நடந்தார்கள். எந்த வாழை மரமும் அவனை வாழ வைப்பதாக தெரிய வில்லை. எட்டாத உயரத்தில் பொத்திகள் தொங்கின. ஒரு சில பொத்திகள் எட்டிய போதும் அவை பல காலங்களாக முறிக்காமல் விட்டு பூத்துக் கொட்டி பொத்தி சூம்பி வாழைக்காய் அளவிலேயே இருந்தது. அவற்றை முறித்து எறிய வேண்டுமே தவிர சந்தைக்கு கொண்டு செல்ல முடியாது.

தொடர்ச்சி 6ம் பக்கம்

திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி




சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery

தங்க நகைகள் நீங்கள்
விரும்பும் இரகங்களில் பெற்றுக்
கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள்
மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும்
நாடுங்கள்.

Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059



அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## ஆழ நட்டவாழை...

5ம் பக்கத் தொடர்ச்சி

அப்பா சொன்னது போல் - இங்கே எந்த வாழையையும் ஆழ கிடங்கு வெட்டி நட்டதாக தொரிய வில்லை . கொண்டு வந்த தடியால் பொத்தியை குத்தி முறிக்கப் பார்த்தான் . பொத்தி மாட்டேன் என்று குலையோடு சேர்ந்து தலையை ஆட்டியது . வாழைக்குலையில் தடி குத்தி காய் கண்ணீர் விட்டு அழுதது. சற்றே சரிந்து நின்ற ஒரு மரத்தில் இருந்து பகீரதப்பிரயத்தனத்தின் பின் ஒரு பொத்தி பிடுங்கி விட்டான். குறைந்தது 20 பொத்தி பிடுங்கினால் தான் அந்த பை நிறையும்.

அந்த ஒரு பொத்தியுடன் பையை இழுத்துக்கொண்டு எட்டாத பொத்திகளுக்கு கொட்டாவி விட்டபடி எட்டும் உயரத்தில் பொத்தி தேடி அலைந்தான். ஆனால் மற்றைய மூவரும் அரை வாசி பையை நிரப்பிவிட்டார்கள். இந்த ஒரு பொத்திக்கு என்ன கூலி தருவார்கள் அதைக்கொண்டு ஒரு பணிசாவது வாங்கிவிட முடியுமா என எண்ணியபடி நடந்தான். ஒருவன் அவனிடம் வந்து பையை பார்த்து சிரித்து விட்டு“ எத்தனை பொத்தி புடுங்கினாய் கரன் ? ” என்றான். “கனக்க பொத்தி கண்டு வச்சிருக் கிறேன் ஆனா ஒண்டுதான் புடுங்கினனான்” என்றான் தலையை பையினுள் ஓட்டி அந்த பொத்தியை பார்த்தபடி. வந்தவன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தான்.

பின் “இனி என்ன செய்யப்போகிறாய் ? ” என்றான். “ என்னை தூக்கிப் பிடிச்சால் மள மளவென்று பிடுங்குவேன் “ என்றான். அப்பா தூக்கிப் பிடிக்க பப்பாப்பழம் பிடுங்கிய ஞாபகத்தில். வந்தவன் ஓடியே விட்டான் . பையை கீழே போட்டு விட்டு அதன்மேல் இருந்தபடி 'என்னண்டு இந்த பொத்திகளை புடுங்கலாம்' என ஒரு அழகிய பொத்தியை பார்த்துக் கொண்டு யோசித்தான். அந்த பொத்தியின் ஒரு இதழ் மெல்ல விரிந்து இருந்தது. உள்ளே வாழைப்பூவில் இருந்த தேனை குடிக்க முடியாமல் ஒரு வண்டு சற்றிச் சுற்றிப் பறந்தது கொண்டிருந்தது . ஏதோ சிந்தனையில் தோன்ற திடீரென எழுந்து அந்த மூவரையும் தேடி ஓடினான். அவர்கள் மூட்டையை சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு நடந்தார்கள். “உங்கள் மூவரினின் பைகளையும் ஓர் இடத்தில் வைத்துவிட்டு பொத்தியை பிடுங்கி என்னிடம் தாருங்கள் நான் ஓடி ஓடி அவரவர் பையில் போட்டு விட்டு வருகிறேன் நீங்கள் சுமக்க வேண்டிய அவசியம் இல்லை “ என்றான் மூச்சு வாங்கியபடி .அவர்களுக்கும் அது நல்ல யோசனையாகவே பட்டது ஆனால் அதற்காக இவனுக்கு என்ன கூலி கொடுப்பது என்று யோசித்தார்கள். இறுதியில் எந்த முடிவிற்கும் வராமலே அவனிடம் பொத்திகளை முறித்து கொடுத்தார்கள் அவனும் ஓடி ஓடி அவரவர் பையில் போட்டுவிட்டு வந்தான். கூடவே வழியில் கண்ட பொத்திகளை அவர்களுக்கு கூப்பிட்டுக் காட்டினான் . சற்று நேரத்திலேயே மூவரினதும் அந்த உரப் பை நிரம்பி விட்டது. அவனது பை மட்டும் அந்த ஒரு பொத்தியுடன் தவம் கிடந்தது. மூவரில் ஒருவன்“இனி முறிக்கும் பொத்திகளை உன் பையில் போடு” என்றான் ஒருவன். அவர்கள் முறித்து தந்த பொத்திகளை தனது பையினுள் போட்டான். இருந்தும் என்ன பயன் தோட்டத்தில் இருந்த பொத்திகள் முழுவதும் பறிக்கப்பட்டு விட்டது. “ இவ்வளவுதான் இனி இல்லை வாங்கோ தோட்டக்காறர் வரும் வரைக்கும் அதில போய் இருப்போம்”என ஒருவன் காவற்கொட்டிலை நோக்கி நடந்தான் . மற்றவர்களும் அவனை பின் தொடர்ந்து சென்றனர். ஒவ்வெருவரும் தத்தம் மூட்டைகளோடு முதலாளிக்காக காத்திருந்தார்கள். கரனின் பையில் ஆக எட்டு பொத்திகளே இருந்தது .தோட்டக்காரரும் வந்தார். “எத்தனை மூட்டை ? ” என்று கேட்டார். அந்தக் குழுவின் தலைவன் “ மூன்று மூட்டை “ என்றான். “அந்தப் பையில் எத்தனை ? ” என்று கரனை பார்த்துக் கேட்டார். உற்சாகமான குரலில் “ எட்டு பொத்திகள் ஐயா ” என்றான் கரன்.

எல்லோருக்கும் பொதுவாக முப்பது ரூபாயை ஒருவனிடம் கொடுத்து விட்டு கரனின் பையில் இருந்த எட்டு பொத்திகளையும் ஆளுக்கு இவ்விரண்டாக பிரித்து எடுக்குமாறு கூறி தோட்டக்காரர் சென்று விட்டார். கரன் மாறி மாறி மூவரின் முகத்தையும் பார்த்தபடி நின்றான்.“இந்த மூன்று மூட்டைக்கும் தான் முப்பது ரூபாய் தந்திருக்கிறார் . கரன் அந்த எட்டுப் பொத்தியையும் நீயே எடுத்துக் கொள் எங்களுக்கு வேண்டாம் நாங்கள் காசை பிரித்து எடுத்துக்கொள்கிறோம் ” என்றான் ஒருவன். கரனின் பணிஸ் கனவு கரைய ஆரம்பித்தது கண்கள் நீரரும்ப தொண்டை வரை துக்கம் முட்டியது ஓ என்று அழுது விட வேண்டும் போல் இருந்தது . எதையும் காட்டிக் கொள்ளாமல் சரி என தலையை ஆட்டி விட்டு அந்த எட்டுப் பொத்தியோடு வீடு வந்தான். களி மண் உடலெங்கும் புரண்டபடி வாழைப் பொத்தியுடன் வந்த மகனைப் பார்த்து படுக்கையில் கிடந்தபடியே கண்ணீர் வடித்தார் அம்மா. அன்று முளுவதும் தம்பியை பார்த்துக்கொண்டு இருந்த பக்கத்து வீட்டு அக்காவிடம் ஒரு பொத்தியை கொடுத்தான். அம்மாவுக்காக மாரியம்மன் தாலாட்டு பாட வரும் ஐயாவுக்கும் ஒரு பொத்தியை கொடுத்தான் . இரண்டு பொத்திகளை வீட்டில் வைத்து விட்டு . மீதி நான்கு பொத்திகளுடனும் அந்த பெட்டிக் கடையை நோக்கி ஓடினான் .

கடையில் அந்த கண்ணாடிப் பெட்டியில் இன்னமும் மூன்று பணிஸ் மீதியாக இருந்தது . அந்த பெட்டியையும் தன் கையில் இருந்த பொத்தியையும் கடை முதலாளியையும் மாறி மாறி பார்த்தபடி நின்றான். “என்னடா வேணும் ? ” என்றார் முதலாளி. எதுவும் பேசாது ஊமையாக நின்றான். மீண்டும் சற்று உரத்த தொனியில் “என்னடா வேணும் ? ” என்றார் முதலாளி. அவரது பெறுமாத வண்டியை பார்த்த படியே “ உங்களுக்கு வாழைப்பொத்தி வேணுமா ? ” என்று கேட்டான். “ எங்க காட்டு பாப்பம் “ என்றார். பையை எட்டிக் கொடுத்தான் . “பறவாய் இல்லையே பொத்தி வாடாம நல்லாத்தான் இருக்கு இப்பதான் புடுங்கி இருக்குப்போல சரி என்ன விலை ? “ என்றார். அவன் அந்த கண்ணாடிப் பெட்டி பணிஸையே பார்த்தபடி நின்றான். நான்கு பொத்திகளையும் எடுத்து முட்டைக்கோவாவிற்கு அருகில் வைத்தது விட்டு பையை அவனிடம் கொடுத்தார். பின் ஒரு பொத்திக்கு இரண்டு ரூபா வீதம் எட்டு ரூபா காசை மடித்து அவனின் உள்ளங் கையில் வைத்தார். அவனின் கண்கள் அந்த கண்ணாடிப் பெட்டியை விட்டு அகலவில்லை காசோடு கையை மேசையில் வைத்தபடி சிலையாய் நின்றான். முதலாளி அந்த மூன்று பணிசையும் ஒரு சரையில் சுத்தி அவனிடம் கொடுத்து விட்டு.

“ உன் பொத்திக்கு இதை விட நல்ல விலை யாரும் தர மாட்டார்கள் ” என்று கூறினார். பையை கமக்கட்டில் வைத்துக் கொண்டு இரு கையிலும் இருந்த பணிசையும் காசையும் மாறி மாறி பார்த்தபடி வீடு நோக்கி ஓடினான். முற்றும் .



# தமிழ் மரபுத்திங்கள் தீர்மானம்
# ஒன்ராறியோ சட்டமன்றத்தில் நிறைவேறியது!












தமிழ் மரபுத் திங்கள் இன்று17.03.2014 ஒன்றாரியோ மாநில அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது!

கனடாவின் ஒன்ராறியோப் பாராளுமன்றத்தில் இன்று பிற்பகல் தமிழ் மரபுத் திங்கள் மூன்று கட்சிகளாலும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மூன்றாவது தடவையாகவும் தமிழ் மரபுரிமைத் திங்களை சட்மூலமாக்கும் தனி நபர் பிரேரணையை முற்போக்கு பழமைவாதக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் Tod Smmith இன்று (17.03.2014) முன்வைத்த போது லிபரல் கட்சியும் புதிய ஜனநாயக் கட்சியும் தமது ஆதரவை வழங்கி அதனை சட்டமூலமாக்குவதற்கு உதவியுள்ளன.

இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதானது கனடியத் தமிழரோடு உலகெங்கும் வாழும் தமிழர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. மாநில அரசொன்று தமிழ் மரபுத் திங்களை அரசுமுறையில் ஏற்றுக்கொண்டது இதுவே முதற் முறையாகும்.
கனடியத் தமிழர் குமுகம் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட இணைந்து பல செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தது.

இத் தீர்மானமானது சட்டமாகச் செயற்படுத்தபட மாநில ஆளுனரின் கையொப்பம் அவசியாமானதாகும். அவரது கையொப்பத்தை விரைவிற் பெற்று தமிழ் மரபுத் திங்கள் தீர்மானத்தை விரைவிற் சட்டமூலமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
.உலகிலேயே அதிகூடிய எண்ணிக்கையில், ஏறக்குறைய 300,000 புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் கனடா நாட்டில், அவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் வாழும் ரொரன்ரோ நகரே ஒன்ராரியோ மாநிலத்தின் தலைநகர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒன்ராரியோ மக்களவையின் (Provincial Parliment) பொதுவான நடைமுறையின் படி, முன்மொழியப்படும் ஒரு பிரேரணையின் மீது முதல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, அதில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் இரண்டாவது வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு, அதிலும் அது வெற்றி பெற்ற பின் மூன்றாவது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதிலும் அந்த பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டாலே, ஒரு முன்மொழிவு மக்களவையில் முழுமையாகவும் நிரந்தரமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

ஆனால், அதே வேளையில், மக்களவையில் உறுப்பினர்களைக் கொண்டுள்ள மூன்று கட்சிகளும் ஒருமித்து தமக்குள் முடிவெடுத்து ஏதாவது ஒரு முன்மொழிவை ஏகமனதாக ஏற்றுக்கொள்ள முன்வந்தால் ஒன்றன் பின் ஒன்றாக சில மாத இடைவெளிகளில் நடத்தப்படும் மூன்று வாக்கெடுப்புக்களிற்கும் பதிலாக ஒரே நாளில் ஒரே வாக்கெடுப்பினை மட்டும் நடத்தி அந்த முன்மொழிவை அங்கீகரிக்கும் அதிகாரமும் கனேடிய மாநில மக்களவைகளுக்கு உண்டு.
அந்த வகையில், "இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான மிகக் கடினமான முயற்சிகளின் பலனாக, மூன்று கட்சிகளினதும் ஆதரவினைத் திரட்டி, "தமிழ் மரபுத் திங்கள்" முன்மொழிவை மக்களவையில் ஒரே வாக்கெடுப்பின் மூலம் ஏகமனதாக நிறைவேற வைத்த நிகழ்வு கனேடிய தமிழ்த் சமூகத்திற்கு ஒரு வரலாற்று வெற்றி.முதன்முதலில் 2012 ஜூன் 12 ஆம் திகதி, அப்போது மாநில அரசின் ஆட்சியில் இருந்த லிபரல் கட்சியைச் சேர்ந்த மக்களவை உறுப்பினர் மைக்கல் கூட்ரோவினால் இந்த முன்மொழிவு வைக்கப்பட்டு, அதன் மீது நடந்த முதலாவது வாக்கெடுப்பிலும் அது வெற்றி பெற்றிருந்தது.

ஆனால், அப்போதைய மக்களவை ஆட்சி பின்னர் கலைந்து போனதால், அந்த முதல் வாக்கெடுப்பின் முடிவும் செல்லுபடியற்றதாகப் போய்விட்டது. பின்னர், மாநில ஆட்சி லிபரல் கட்சியினால் மீள அமைக்கப்பட்டதன் பின்னர், இந்த ஆண்டு, 2014 பெப்ரவரி 18 ஆம் திகதி, எதிர்க் கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சியின் மக்கள் அவை உறுப்பினர் டொட் ஸ்மித் (Todd Smith) இந்த முன்மொழிவை அவையில் மீண்டும் சமர்ப்பித்தார். டொட் ஸ்மித் அதன் பின்னர், மூன்று வாக்கெடுப்புகளினூடாக இந்தப் பிரேரணையை எடுத்துச் செல்லாமல், ஒரே வாக்கெடுப்பில் அதனை நிறைவேற்றச் செய்யும் முயற்சிகள் கனேடிய தமிழர்களால் பல முனைகளில் முன்னெடுக்கப்பட்டன.


அந்த முயற்சிகளின் பயனாகவே இன்று ஒன்ராரியோ மக்கள் அவை "தமிழ்மரபுத் திங்கள் தீர்மானத்தை அங்கரித்துள்ளது. மாநில மக்கள் அவையில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானம் இனி முழுமையான சட்ட அங்கீகாரத்தைப் பெற்று நடைமுறைக்கு வருவதற்கு, ஒன்ராரியோ மாநில துணை ஆளுநரின் (Lieutenant Governor) சம்பிரதாய பூர்வ கையெழுத்து அதில் இடப்படும். கனடா நாடு, இப்போதும், சம்பிரதாயபூர்வமாகப் பிரித்தானிய காலனித்துவ நடைமுறைக்குள் இருப்பதால், மாநில மக்கள் அவைகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் அந்தந்த மாநிலங்களின் துணை ஆளுநர்களின் கையெழுத்துடனேயே உரிய அங்கீகாரத்தைப் பெறும் நடைமுறை அங்கு உள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு அமைய, ஒன்ராரியோ மாநிலத்தில், ஜனவரி மாதம் "தமிழ் மரபுத் திங்கள; (Tamil Heritage Month) என்ற மகிமையைப் பெறும்.

இதே வேளையில், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசனும் இதே போன்ற ஒரு முன்மொழிவை கனேடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலையில் இடம்பெற அமர்வில் கொன்சவேடிவ் கட்சியைசேர்ந்த தமிழ் அரசியல்வாதிகளான ஷன் தயாபரன் , கென் கிருபா உற்பட தமிழ் ஆர்வலர்களும் மதியம் இடம்பெற்ற அமர்வில் தமிழ் மரபுத்திங்களில் முக்கிய பங்கு வகிக்கும் நீதன் சான் உற்பட பல தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தமிழ் மக்களும் கலந்து கொண்டனர்.
நன்றி. e .குருவி

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de
அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்





# மனிதனுக்குள் இருக்கும் மூன்று குணங்கள்

உலகில் தோன்றிய மகான்கள் பலரும் மக்கள் பயன்பெறும் வகையில் பல நீதிக்கதைகளையும், வழிகாட்டும் கதைகளையும் கூறிச் சென்றுள்ளனர். அதில் ராமகிருஷ்ண பரமஹம்சரின் அர்த்தம் பொதிந்த, ஆழமான கருத்துக்கள் அடங்கிய கதைகள் என்றும் மக்களை நல்வழிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பவை. அவற்றில் ஒன்றை இங்கு பார்க்கலாம்.

அடர்ந்த காட்டின் வழியாக செல்வந்தன் ஒருவன் சென்று கொண்டிருந்தான். அவனிடம் நிறைய விலைமதிப்பற்ற பொருட்கள் இருந்தன. காட்டிற்குள் இருந்த மூன்று திருடர்கள், திடீரென செல்வந்தனை வழிமறித்து அவனிடம் இருந்த பொருட்கள் அனைத்தையும் பறித்துக் கொண்டனர்.

மூன்று பேர்களில் ஒருவன், 'இவனை உயிருடன் விட்டோம் என்றால், நம்மைப் பற்றி நாட்டுக்குள் போய் கூறிவிடுவான். பின்னர் மன்னனின் பெரும் படைகள் வந்து நம்மை பிடித்துச் சென்று விடுவார்கள்' என்று கூறி செல்வந்தனை கொல்வதற்காக கத்தியை ஓங்கினான். அவனை மற்றொரு திருடன் தடுத்து நிறுத்தினான். செல்வந்தனை கொலை செய்வதில் அந்தத் திருடனுக்கு உடன்பாடு இல்லை. அதனால்தான் தடுத்து நிறுத்தினான்.

எதற்காக தடுத்தாய் என்று முதலாவது திருடன் கேட்டதற்கு, 'இவனைக் கொல்வதால் நமக்கு என்ன பயன் இருக்கிறது?. கொலைப் பழிதான் வந்து சேரும். எனவே இவனது கை, கால்களைக் கட்டி இங்கேயே போட்டு விட்டு நாம் நம் வேலையைக் கவனிக்கச் செல்வோம்' என்று கூறினான். அதன்படியே மூவரும் சேர்ந்து செல்வந்தனை அங்கிருந்த பெரிய மரத்தில் கயிற்றால் கட்டிப் போட்டு விட்டு அங்கிருந்து அகன்றனர். செல்வந்தன் தன் நிலையை எண்ணி மனம் வருந்தியபடி புலம்பிக்கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் மூன்றாவது திருடன் அங்கு வந்தான். அவன் செல்வந்தனிடம், 'உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. கொஞ்சம் பொறுமையாக இரு, உன்னுடைய கட்டுக்களை அவிழ்த்து விடுகிறேன்' என்று கூறியபடி, செல்வந்தனை விடுவித்தான். மேலும், 'இந்தக் காட்டில் இருந்து உன்னால் வெளியே செல்ல முடியாது. நான் உன்னோடு துணைக்கு வந்து வழிகாட்டுகிறேன்' என்று கூறி, செல்வந்தனை சரியான பாதையில் அழைத்துச் சென்றான். பின்னர் காட்டில் வெளிப்பகுதிக்கு வந்ததும் ஒரு பாதையைக் காட்டி, 'இந்த வழியாக சென்றால் நீ உன் இருப்பிடம் சென்று விடலாம்' என்று வழிகாட்டினான்.

தன் மீது இவ்வளவு கருணை காட்டிய அந்த திருடனிடம் அன்பு கொண்ட செல்வந்தன், தன் வீடு அருகில்தான் இருப்பதாகவும், உடன் வந்து உணவருந்த வேண்டும் என்று அழைத்தான். ஆனால் திருடன், 'உன் அன்பை மதிக்கிறேன். ஆனால் என்னால் வர இயலாத சூழ்நிலை. அதுவும் தவிர நான் ஊருக்குள் வந்தால் காவலர்கள் என்னை கைது செய்து விடுவார்கள்' என்று கூறியபடி காட்டிற்குள் சென்று மறைந்தான். இந்த கதைக்குள் பெரும் அர்த்தம் பொதிந்துள்ளது. மேலோட்டமாகப் பார்த்தால் அது தெரியாது.

மனித வாழ்க்கை என்பது அடர்ந்த காடு போன்றது. அந்தக் காட்டில் சத்துவ குணம், ரஜோ குணம், தமோ குணம் என்ற மூன்று திருடர்கள் இருக்கிறார்கள். காட்டு வழியில் செல்லும் செல்வந்தன் ஜீவாத்மாவாகும். அவனிடம் ஆத்ம ஞானம் என்னும் பெரிய செல்வம் இருக்கிறது. அதை மூன்று திருடர்களாகிய மூன்று குணங்களும் பறித்துக் கொள்கின்றன.

தமோ குணம் என்னும் திருடன், செல்வந்தனாகிய ஜீவாத்மாவை அழித்துவிடப் பார்க்கிறது. ரஜோ குணம் என்னும் இரண்டாவது திருடன் அவனை உலக வாழ்க்கையில் பிணைக்கிறது. பந்தங்கள் என்னும் சங்கிலியால் கட்டப்பட்டு, இறைவனும் திருடனும் நமக்குள்ளேயே இருக்கிறார்கள். ரஜோ, தமோ குணங்களின் கொடுமையான உடும்புப் பிடியில் இருந்து சத்துவ குணம் காப்பாற்றுகிறது. தமோ குணத்தின் இயல்பான காமம், குரோதம் போன்ற கீழ்நிலையில் இருந்து நாம் சத்துவ குணத்தால் காப்பாற்றப்படுகிறோம்.

சத்துவ குணத்தை சரணடையும்போது, உலக ஆசைகளாகிய பந்தங்களில் இருந்தும், மாயையில் இருந்தும் அது விடுவிக்கிறது. அவ்வாறு விடுவித்து கரை சேர்க்கும் வல்லமை சத்துவ குணத்திற்கு உண்டு. சத்துவ குணமும் ஒரு திருடன் தான். அது நம்மை இறைவனிடம் கொண்டுபோய் சேர்க்காது. ஆனால் இறைவனை அடைய வேண்டிய வழியை காட்டும். பற்றில்லாத நிலையில் உலக நலனுக்காக செய்யப்படும் கர்மம், தயை, நேர்மை, பக்தி போன்றவற்றைத் தோற்றுவிப்பது சத்துவ குணமாகும். மூன்று குணங்களையும் கடந்தால் இருப்பது பரபிரம்மம் என்னும் அழகான மாளிகை. மனிதனின் உண்மை இருப்பிடம் அதுவே.

தாயகத்தில் கல்விச் சேவை!













அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்





# யேர்மனியில் மின் கம்பத்தில் பாதணிகள் ! அவை அதிஷ்டத்தை கொண்டுவருமாம்!

நம்பிக்கை பின் மூட நம்பிக்கை வரவு செலவு மகிழ்சி துயரம் அதிஷ்டம் துர்அதிஷ்டம் இப்படி எதற்கு எடுத்தாலும் எதிர்மறை ஒன்று இருக்கும்.

அது கீழைத்தேசத்தவராக இருந்தாலென்ன, மேலைத்தேசத்தவராக இருந்தால் என்ன, அது ஒன்று பொதுவானதே!

நமது ஊர்களில் குழந்தைகள் இல்லை என்றால் மரத்தில் தொட்டில்கட்டி நேத்திக்கடன் வைப்பது. காதலர்கள் தமது காதல் நிறைவேறவேண்டும் என்று மரத்தில் நினைவுக்கொடி கட்டுவது. (மரத்தில் பெயர்பொறிப்பது பஸ்வண்டி யின் சீட்டின்பின் பக்கத்தில் சில்லறைக்காசால் இதயம் வரைவது அதற்குள் காதலா் பெயரை முழுதாகவோ முதல் எழுத்தாகவோ பொறிப்பது இவை அந்த நேர்த்திக் கடனுக்குள் அடங்காது.)

மரத்தைச்சுற்றி நம்பிக்கைகளை வளா்ப்பதில் இலங்கையைவிட இந்தியவே முன்னிலையில் உள்ளது.

மதத்தின் மீது உள்ள பற்றும், பந்தமும் மரங்களையும் இறைவனாகவே எண்ணவைக்கின்றது.

மரம் மட்டுமா இறைவன்? இயற்கை யாவுமே அவனுள் அடக்கம் அல்லவா!

சரி விடயத்திற்கு வருவோம். நமது நாடுகளில் மட்டும்தான் இந்த நம்பிக்கைகளும், நேர்த்திக்கடன்களும் என்று எண்ணினால்! அதற்கு ஆப்புவைத்தால் போல் யோ்மனியில் அதுவும் தலைநகரில், பேர்லினில் உள்ள ஒரு மின்கம்பத்தைப் பாருங்கள்.

மின் கம்பத்தில் பாதணிகளை எறிந்து கொழுவினால் அதிஷ்டம் வரும் என்பது இவா்களது நம்பிக்கை. அதனால் பல மின்கம்பங்கள் பாதணிகளால் நிரம்பியுள்ளன.

இது நாட்டுக்கும் தெரு அழகுக்கும் ஏன் பாதுகாப்புக்கும் உகந்தது அல்ல என்பதனை உணா்ந்த யோ்மன் அரசு. இப்படி எறிபவா்கள் பிடிபட்டால் 30 யூரோ அபராதம் விதிக்கப்படும் என அறிவித்துள்ளது.

நமது நாட்டில் மட்டுமல்ல மனிதா்வாழும் இடம் எங்கும், நம்பிக்கைகளும் மூடநம்பிக்கைகளும் கைகோர்த்துதே நடக்கின்றன.

# முருகதாஸ் : விஜய் படத்துக்கு தலைப்பு!.
## வாள்! தீரன் !! இப்போ இறுதியாகக் "கத்தி"!!!




விஜய் நடிப்பில் ஏ ஆர் முருகதாஸ் இயக்கும் புதிய படத்துக்கு கத்தி என்று தலைப்பு வைத்துள்ளனர். இதனை இயக்குநர் முருகதாஸும் உறுதிப்படுத்தியுள்ளார். ஐங்கரன் ஃபிலிம்ஸ் நிறுவனமும், லைகா புரொடக்ஷனும் இணைந்து இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்கள்.

இந்தப் படத்தின் தலைப்பு குறித்து பல்வேறு செய்திகள் வந்தன. “வாள்“, “அடிதடி“, “தீரன்“ என்று படத்துக்கு பல்வேறு தலைப்புக்கள் வைத்ததாக தகவல் கிளம்புவதும், பின் அதை முருகதாஸ் மறுப்பதுமாக இருந்தது.

முருகதாஸ் - விஜய் படத்துக்கு தலைப்பு.. தீரன்!

ஆனால், இப்போது படத்தின் தலைப்பு “கத்தி“ என்று அதிகாரப்பூர்வமாக அறிவித் துள்ளனர்.

இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் இதை தன் ட்விட்டர் தளத்தில் உறுதிப்படுத்தியுள்ளார். “கத்தி“ படத்தின் படப்பிடிப்பு படுவேக வேகத்தில் நடைபெற்று வருகிறது. இன்னும் நான்கே மாதங்களில் படத்தை முடித்துவிட வேண்டுமென்று வெகுவேகமாக இயங்கிக்கொண்டிருக்கிறது படக்குழு.


படத்தை தீபாவளிக்கு ரிலீஸ் செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

நடிகர் விஜயுடன் அவரது கத்தி படத்தில் நான் நடிக்கிறேன். ஹைதாராபத்தில் படம் சூட்டிங் நடைபெற்று வருகிறது. அதில் நடிகர் விஜயுடன் ஒரு பாடலில் நான் நடனமாடினேன்.

அவருடன் நடனமாடும்போது எனக்கே வியப்பாக இருக்கிறது.
அவரின் நடனம் எனக்கு உற்சாகத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியது. படத்தில் வேகமான துடிப்புடன் நடனம் ஆடியுள்ளார் நடிகர் விஜய் என்று தனது டிவிட்டரி நடிகை சமந்தா தெரிவித்துள்ளார்.



# ஜெர்மனியில் விமான பயிற்சிக்கு விண்ணப்பித்துள்ள- குக்கூ மாளவிகா


இனி சினிமாவில் நடிக்க மாட்டேன்
விமானியாகப் போகிறேன்!

சமீபத்தில் பத்திரிகையாளர் ராஜுமுருகன் இயக்கத்தில் வெளிவந்த குக்கூ திரைப்படம் இரண்டு பார்வை இல்லாதவர்களின் காதலை சொல்லும் படம். இது ரசிகர்ளிடம் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த படத்தில் கேரளத்தைச் சேர்ந்த புதுமுகம் மாளவிகா பார்வையற்ற பெண்ணாக அட்டகத்தி தினேசுடன் இணைந்து நடித்துள்ளார். இவரது நடிப்பு வெகுவாக பாராட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் மாளவிகா இனி தான் சினிமாவில் நடிக்கும் உத்தேசம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் நான்  பைலட் ஆகவேண்டும் என்று தான் விரும்புகிறேன். சினிமாவில் நடிக்க வேண்டும் என்று என்றுமே நான் நினைத்தது கிடையாது. ஒரு பொழுதுபோக்கிற்காக ராஜுமுருகன் அவர்களின் படத்தில் சவாலான கதாபத்திரத்தில் நடித்தேன். இனி சினிமாவில் நடிக்க விரும்பவில்லை.

ஜெர்மனியில் பயணிகள் விமான பயிற்சி கல்விக்கு விண்ணப்பித்துள்ளேன். கிடைத்தவுடன் சென்றுவிடுவேன். என்றார். அதேநேரத்தில் போய்விடுவேன். இடையில தனக்கு கிடைக்கும் இடைவெளியில் குக்கூ மாதிரி சவாலான காதாபத்திரம் கிடைத்தால் நடிப்பது பற்றி யோசிப்பேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் தமிழ்

**தமிழ்“ சில பேர் வாயில் “டாமில்“ ஆகிவிடும் அவலமும் உண்டு!**

## தமிழகத்தில் இருந்து நிலா



தமிழ்மொழியை நாகரீகம் அற்றது என எண்ணுகிறார்களா?
வந்தாரை வாழ வைக்கும் தமிழகத்தில் தமிழுக்கு பஞ்சம்! எங்கு பார்த்தாலும் மேற்கத்திய உடைகள், பழக்க வழக்கங்கள், நுனிநாக்கு ஆங்கிலம் என்று ஊரே உருமாறி இருக்கிறது. தமிழ் பேசும் மக்களை இங்கு ஏற இறங்க பார்ப்பவர்கள் ஏராளம். அதனாலோ் என்னவோ தமிழ் தெரிந்தாலும் யாரும் பேசுவதில்லை!

தமிழுக்கே உரித்தான 'ழ", “ள' வை சரியாக உச்சரிப்பவ்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அதை சரியாக உச்சரித்தால் எங்கே தான் தனித்து விடப்படுவோமோ என்ற அச்சம் சில பேருக்கு! “மொக்க”, “கலாசல்”, “சப்ப மேட்டர்” என்று பேசினாலும் அவர்கள் தமிழ் தெரியாதவர்கள் தான்!

தமிழ் பத்திரிக்கைகளை, தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பிள்ளைகள் பார்ப்பதற்கு சில வீடுகளில் தடா! அம்மா-அப்பா ஆனார்கள் 'மம்மி', 'டாடி'!

'தமிழ்' சில பேர் வாயில் 'டாமில்' ஆகிவிடும் அவலமும் உண்டு. இதில் கொடுமை என்ன வென்றால் சிலர் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்துவிட்டு, இரண்டு ஆண்டுகள் வெளிநாட்டில் வேலை செய்து திரும்பும்போது செய்யும் அளப்பறை இருக்கிறதே.. அப்பப்பா… ”ஹேய், pumpkin க்கு தமிழல் என்ன?”, ”வணக்கத்துக்கு 2 சுழி 'ன' வா? 3 சுழி 'ண' வா? தமிழ் எழுதறதே இல்லியா..எல்லாம் மறந்து போச்சு..” என்று தனக்கு தமிழுடனான உறவு முறிந்ததை ஜம்பமாக விளம்பரம் செய்வார்கள்.

தமிழ் மொழியில் படித்ததை வெளியே சொல்ல வெட்கப்படும் மாணவர்களும், அதை சொன்னால் அவர்களை தள்ளி வைக்கும் நண்பர்களும் கூட உண்டு. இன்னும் வேடிக்கை என்னவென்றால் IT நிறுவனத்தில் பணிபுறியும் “பத்மநாபன்”- “சந்தான லட்சுமி”, '“Paddy” - “Sandy” ஆகிவிடுவார்கள்!
இது ஒரு பக்கம் இருக்க, மற்றொரு பக்கம் தமிழர்கள் பண்டிகையான பொங்கலும், ஜல்லிக்கட்டும் விமர்சையாக நடந்து கொண்டுதான் இருக்கிறது! US, UK எங்கு பணிபுரிந்தாலும் விடுமுறைக்கு ஊருக்கு வரும் போது அம்மாவிடம் “மேங்கோ பிக்கிள் போடுங்க மதர்”- ன்னு சொல்லாம இருந்தா சரி!!





அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# சிந்தனையும், செயலும் புனிதமடையும் போது நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பில் இணைந்தோம் என்று பொருள்

**உயிர்ப்பு திருநாள் சிந்தனைகள்..... சேவியர்**





**இது இயேசு உயிர்த்த போது நடந்தது. இயேசுவின் கல்லறை திறந்திருப்பதையும், வானதூதர் இயேசு உயிர்த்து விட்டதை சீடர்களுக்கு அறிவிப்பதையும் குறிக்கிறது.**

கிறிஸ்தவ ஆன்மீகத்தின் அடிப்படை இயேசுவின் உயிர்ப்பிலிருந்து தான் துவங்குகிறது. உயிர்ப்பு இல்லாவிடில் இயேசு ஒரு தத்துவ ஞானியாகவோ, ஒரு புரட்சியாளராகவோ, அல்லது அன்பைப் போதித்த ஒரு அடியாராகவோ வரலாற்றில் இடம் பிடித்திருப்பார். உயிர்ப்பு தான் அவரை மனித மகன் எனும் நிலையிலிருந்து இறை மகன் எனும் நிலைக்கு சந்தேகமில்லாமல் உயர்த்தியது.

இயேசு படுகொலை செய்யப்பட்ட உடன் அவருடன் இருந்த சீடர்கள் எல்லாரும் திசைக ்கொன்றாய் தலை தெறிக்க ஓடினர். சிலர் பழைய மீன் பிடித்தல் வேலைக்காக வலைகளைத் தூசு தட்டினர். சிலர் இயேசுவோடு சுற்றிச் சுற்றி வாழ்க்கையில் மூன்று வருடங்களை வீணடித்து விட்டோமே என ஊர் விட்டு ஊர் தாவினர், இன்னும் சிலர் இனிமேல் என்ன நடக்குமோ எனும் பயத்தில் இருட்டு அறைகளுக்குள் முடங்கிக் கிடந்தார்கள்.

உயிர்ப்பு தான் அவர்கள் எல்லோரையும் மீண்டும் வீறு கொண்டு எழ வைத்தது. உயிர்த்த இயேசுவின் காட்சி தான் பயந்தாங்கொள்ளிகளை பாசறைகளின் தலைமை வீரர்களாக்கியது.

ஒரு வேலைக்காரப் பெண்ணிடம், ”இயேசுவா, அவர் யாரென்று தெரியவே தெரியாது” என பயந்து கொண்டே பதிலளித்த சீடர், அரசவையில் “உயிர்த்த இயேசுவின் சாட்சி நான்“ என பின்னர் வீரியம் கொண்டு எழ இயேசுவின் உயிர்ப்பு தான் காரணம். இயேசுவைப் பிடித்ததும் பின்னங்கால் பிடறியில் பட ஓடிய சீடர்கள் தான் பின்னாளில், ”என்னை இயேசுவைப் போல சிலுவையில் அறையாதீர்கள், தலைகீழாய் அறையுங்கள், தோலை உரியுங்கள்” என்றெல்லாம் சற்றும் பயமில்லாமல் மரணத்தை அரவணைத்தார்கள்.

உயிர்ப்பு என்பது ஒரு கொண்டாட்டமல்ல. அது ஒரு அனுபவம். கிறிஸ்தவத்தின் அழைப்பு என்பது இயேசுவின் உயிர்த்தெழுதல் அனுபவத்தில் பங்கு கொள்வதே.. இயேசுவின் உயிர்ப்பில் பங்கு கொள்தல் என்பது மூன்று நிலைகளில் முழுமை அடைகிறது. 1, சிலுவையை நாள் தோறும் சுமத்தல். 2, இயேசுவோடு அறையப்படுதல். 3, இயேசுவோடு உயிர்த்தல்.

சிலுவையை நாள் தோறும் சுமத்தல் என்பது என்ன ? நமது பாவ வாழ்க்கையை விட்டு விட்டு தூய்மையான வாழ்க்கைக்குள் செல்ல வேண்டும். உலக செல்வங்களை வெறுத்து, ஆன்மீக செல்வங்களை நேசிக்க வேண்டும். சிற்றின்பத்தை வெறுத்து இறை அன்பைத் தேடவேண்டும். ஏழைகளை வரவேற்கவேண்டும், கோபம், எரிச்சல், பகைமை, தீமை முதலிய அத்தனை விஷயங்களையும் விட்டு விட வேண்டும். இப்படி எல்லாவற்றையும் விடும் போது நமக்கு உள்ளத்திலும், வெளியிலும் பல சிக்கல்கள் உருவாகும். அந்த சிக்கல்களை இயேசுவுக்காய் மகிழ்வுடன் சுமப்பதே “நாள் தோறும் சிலுவை சுமப்பது” பாவத்தில் நிரம்பியிருக்கும் நமது பழைய மனிதனை இறை நம்பிக்கையில் இணைந்து கொள்வதன் மூலம் சிலுவையில் அறைவது இரண்டாவது கட்டம். பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டு இயேசுவோடு உயிர் விட வேண்டும். அந்த நிகழ்வுடன் அதுவரை செய்த பாவங்கலெல்லாம் கழுவப்பட்டு விடும்.

இயேசுவோடு உயிர்த்தல் கடைசி நிலை. இயேசுவோடு உயிர்த்தபின் நமக்குள் வாழ்வது நாமல்ல, இயேசுவே எனும் சிந்தனை மனதில் இருக்க வேண்டும்.

நமது உடலுக்குள் இயேசு இருந்தால் நமது செயல்கள், சொற்கள், நடவடிக்கைகள் எப்படி புனிதமாய் இருக்கும் என்பதை செயலில் காட்டவேண்டும். பழைய சிந்தனைகள், வழிகளையெல்லாம் அகற்றிவிட்டு தூய்மையான ஒரு வாழ்க்கை வாழவேண்டும். இதுவே இயேசுவோடு உயிர்ப்பது. இந்த மூன்று செயல்களையும் செய்யவேண்டும் என்பதே உயிர்ப்பு விழா நமக்குச் சொல்லும் செய்தியாகும். ஒருவர் நல்வழியில் சென்று விட்டார் என்பதை நிர்ணயிப்பது அவருடைய நல்ல செயல்களும், அந்த நல்ல செயல்களுக்குப் பின்னால் இருக்கும் நல்ல சிந்தனையும் தான். சிந்தனையும், செயலும் புனிதமடையும் போது நாம் கிறிஸ்துவின் உயிர்ப்பில் இணைந்தோம் என்று பொருள் **அனைவருக்கும் உயிர்ப்பு விழா நல்வாழ்த்துகள்.**




அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# காக்கும் கரத்தாள் சுவற்றா ஸ்ரீ கனக துர்க்கா








படங்கள் வெற்றிமணி

கடந்த மாதம் 8.03.2014 சனிக்கிழமை “காக்கும் கரத்தாள் சுவற்றா ஸ்ரீ கனக துர்க்கா” எனும் பக்திரசம் ததும்பும் பாமாலை, மேற்படி ஆலயத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

ஆசிச்செய்திகளை கம் காமாட்சி அம்பாள் ஆலய குரு சிவஸ்ரீ பாஸ்கரக் குருக்கள், டோட்முண்ட் சாந்தநாயகி சந்திரமௌலீஸ்வர ஆலய குரு. சிவஸ்ரீ தெய்வேந்திரக் குருக்கள், மற்றும் சுவற்றாநகர் ஸ்ரீ கனக துர்க்கா அம்பாள் ஆலய குரு சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்கள் அவர்களும் வழங்கினார்கள். ஒலிப்பேழையை தமிழாலயத் தந்தை திரு.இரா.நாகலிங்கம் தம்பதியினர் வெளியிட்டுவைத்தார்கள். இவ் ஒலிப் பேழையை தயாரித்து ஒருங்கிணைப்பு நெறியாட்கை செய்தவர் சு.கோபி. நிகழ்வில் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளாக தமிழ் இசைக்கச்சேரியும், பரதநாட்டியமும், அடியார்கள் முன் மகிழ்வுடன் அரங்கேறின. விழாவின் சிலகாட்சிகளை இங்கே காணலாம்.

## சுவாமி விவேகானந்தர் மணி மொழிகள்!

கடவுள் இருந்தால் அவனை நாம் காணவேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும், அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாமல் இருப்பது நன்று. பாசாங்கு போடுவதை விட நாத்திகனாக இருப்பதே மேல்.

உலகின் குறைகளை பற்றி பேசாதே. குறைகளை நோக்கி வருத்தப்படு, எங்கும் நீ குறைகளை காண்பாய். ஆனால், நீ உலகுக்கு உதவி செய்ய விருப்பினால் உலகை தூற்றாதே, குறை சொல்லாதே. குறை சொல்லி உலகை இன்னும் பலவீனப்படுத்தாதே. உலகின் குறைகள், குற்றங்கள் எல்லாம் அதன் பலவீனத்தால் விளைபவை அல்லவா.

பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது. பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது.

எப்போதும் பொறாமையை விலக்குங்கள். இதுவரையிலும் நீங்கள் செய்யாத மகத்தான காரியங்களை எல்லாம் செய்து முடிப்பீர்கள். கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகில் மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.



## மருத்துவத் தகவல்கள்

# விழாதிருக்க உங்கள் சமநிலையைப் பேணுங்கள்

டாக்டர். எம்.கே. முருகானந்தம்




விழுகைகளைத் தவிர்ப்பது எவருக்கும் முக்கிய மானது. ஆனால் சுலபமாக எலும்புகள் உடைந்து விடக் கூடிய முது வயதில் மிக மிக முக்கியமான தாகும்.
விழுகைகளைத் தடுக்க வேண்டுமெனில் முக்கி யமாக உங்கள் சமநிலை தழும்பாது பாதுகாத்துக் கொள்வது அவசியம்.

எங்கு எப்பொழுது நடமாடினாலும் ஒரு கையிலா வது பொருட்கள் எதையும் பற்றியிராது வெற்றாக வைத்திருங்கள். தற்செயலாக நிலை தழும்பினால், விழாமல் இருப்பதற்காக எதையாவது பற்றிப் பிடிக்க வசதியாக இருக்கும்.
நடக்கும்போது வேறு எதிலும் கவனத்தைச் செலுத்தாதீர்கள். பத்திரிகை படிப்பது, மற்றவர் களுடன் பேசி கொண்டு நடப்பது, கடைத் தெருவைப் பிராக்குப் பார்த்து நடப்பது போன்ற வற்றால் சமநிலை தவறி விழுந்துவிடக் கூடும்.
நடக்கும்போது கைகளை முன் பின்னாக வீசி நடப்பதன் மூலம் உடலின் சமநிலையைப் பேண முடியும்.
தரையில் காலை இழுத்து இழுத்து நடக்காதீர்கள். பாதங்களை தரையியிருந்து தூக்கி திடமாக வைத்து நடவுங்கள். போகும் பாதையில் ஓரிடத்தில் திரும்பி நடக்க வேண்டுமாயின் திடீரெனத் திரும்பாதீர்கள். வட்டமடிப்பது போல வளைந்து சென்று திரும்புங்கள்.

படுக்கையிலிருந்து அல்லது இருக்கையிருந்து எழுந்து நடக்க வேண்டுமாயின் அவசரப்பட்டு எழுந்து உடனடியாக நடக்காதீர்கள்.

படுக்கையிலிருந்து எழுந்து, உட்கார்ந்து, சற்று நின்று பார்த்து நிலை தழும்பவில்லை எனில் பின்பு நிதானமாக நடவுங்கள்.

ஓரிடத்தில் சற்று நேரம் நிற்க வேண்டிய தேவை ஏற்பட்டால் பாதங்களை நெருக்கி வைக்காதீர்கள்.
உங்கள் தோள் பட்டையின் அகலத்திற்கு பாதங்களைப் பரப்பி வைத்தால் சமநிலை தழும்பாது.
செருப்புகள் தேய்ந்திருந்தாலும் வழுக்கக் கூடும்.

தூங்காத கண் என்னவாகும்?
“தூங்காத கண் ஒன்று உண்டு. துடிக்கின்ற மனம் ஒன்று உண்டு“ தூக்கமின்மையால் மனம் துடிப்பது மட்டுமின்றி நோய்களும் குடிகொள்ளும்.

தூக்கமில்லாத பலர் இன்று இருக்கிறார்கள். போதிய தூக்கம் இல்லாமல் போவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள்.
1. தானாகத் தேடிக்கொள்ளும் தூக்கமின்மை ஒரு வகை. படிப்பென்றும் வேலையென்றும் நீண்ட நேரம் விழித்தருப்பதால் போதிய தூக்கம் இல்லாதவர்கள் இவர்கள்.
2. தேடாமலே வந்து ஒட்டிக் கொள்ளும் தூக்கமின்மை மற்றொரு வகை. எவ்வளவுதான் நேரம் கிடந்தாலும், எவ்வளவு நேரம்தான் படுத்துக்கிடந்தாலும் தூங்கம் வராதவர்கள் மற்றவர்கள் காரணம் எதுவாக இருந்தாலும் போதிய தூக்கம் இல்லாவிட்டால் உடல் சோர்வாக இருக்கும்.
வாழ்க்கை சினமாக இருக்கும், வேலைகளில் மூளையைச் செலுத்த முடியாது. வினைத்திறன் குறைந்துவிடும், தூக்கமின்றி எரிச்சல் பட்டுக் கொண்டிருந்தால் மற்றவர்களும் இனிமையாகப் பழக முடியாது வெறுப்பைத் தேட நேரும்.

ஆனால் இவை எல்லாவிற்கும் மேலாக தூக்க மில்லாதவர்களின் இருதயமும் பாதிப்பிற்கு ஆளாகுவதற்கான சாத்தியம் அதிகம்.
வேறு என்னென்ன பாதிப்புகள் ஏற்படும்.

வாழ்க்கை நெருக்குவாரம் stress மிக்கதாக மாறிவிடும்.
தூக்கமின்மைக்கும் பசிக்கும் தொடர்புண்டு. அடிக்கடி பசிப்பது போல இருக்கும் எதையாவது தின்ன அல்லது குடிக்க வைக்கும். இவ்வாறு மேலதிக கலோரிகள் சேர்வதால் எடை அதிகரிக்கும்.
தூக்கக் குழப்பம் உள்ளவர்களுக்கு பக்கவாதம் வருவதற்கான சாத்தியம் அதிகம். தூக்கமின்மை யால் தூக்க சுவாச நிறுத்தம் sleep apnea ஏற்படுவதே இதற்குக் காரணம்.
இதே தூக்க சுவாச நிறுத்தம் காரணமாக இருதய நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பும் அதிகம்.
உயர் இரத்த அழுத்தம், இருதயம் வேகமாகத் துடித்தல், இருதயத் துடிப்பின் லய மாறுபாடுகள்.
இவ்வாறு பல பிரச்சனைகள் தூக்கம் குறை பாட்டினால் ஏற்படுவதால் போதியளவு நேரம் அமைதியாகத் தூங்குங்கள்.
உங்கள் தூக்கக் குழப்பத்திற்கான காரணம் உங்களுக்குத் தெரியவில்லை எனின் மருத்துவ ஆலோசனை மூலம் காரணத்தைக் கண்டறிந்து அதற்கேற்ற பரிகாரம் காணுங்கள்.
நன்றி: **தமிழர்தகவல்**



# சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் 21 அடி உயரமான சிவனின் தியான திருச்சொரூபச் சிலை!

இலங்கையில் பிரசித்திபெற்று விளங்கிய பழம்பெரும் சிவாலயங்களில் சுயம்பு சேஷ்திரமாகிய சம்புநாதர் சேஷ்திரம் என அழைக்கப்படும் சம்புநாதீஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும். இவ் ஆலயம் கீரிமலை நகுலேஸ்வரம், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், ஆகிய தலங்களை இணைக்கின்ற வீதியின் (சம்பில்துறை) மத்திய ஸ்தானத்தில் அமைந்துள்ளது. மேலும், தட்சண கைலாசமாகிய திருகோணகோணேஸ்வரத்திற்கு வடக்கு திசையிலும் இராமசேதுவுக்கு (இராமேஸ்வரத்திற்கு) கிழக்கு திசையிலும் (குறிப்பாக வலிகாமம்-மேற்கில்) இந்த ஆலயம் அமைந்திருந்ததாக தட்சண கைலாய புராணம் - சுயம்புநாத படலத்தில் குறிக்கப்பட்டுள்ளது. சுமார் மூவாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றையுடைய இந்த ஈஸ்வரத்தில் சிவதொண்டர் அமைப்பினால் சிவபெருமானின் 21 அடி உயரமான தியான சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலைக்கு (2.2.2014) முற்றுமுழுதாக செந்தமிழ் திருமறையில் குடமுழுக்கு இடம்பெற்றமையானது உலகம் பூராகவும் உள்ள இந்துக்களால் பெரிதும் பேசப்படும் ஆலயமாக இந்த ஆலயத்தின் பெயர் மாறியிருக்கின்றது. உலகில் சிவபெருமானுக்கு தமிழில் திருக்குடமுழுக்கு இடம்பெற்ற ஆலயமாகவும் சம்புதாதஈஸ்வரத்தின் பெயர் பதிவாகியுள்ளது.

**தகவல்: சுபா**




உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.

Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal
rmb³ VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb³ ist Partner der Gothaer


KIOSK & ASIAN MARKT
Lebensmittal
பசுமையான மரக்கறிகள்
கடல் உணவு வகைகள்
இன்னும் பலசரக்குப் பொருட்கள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Tel:02332 50 97 568
Hagener Str.158
58285 Gevelsberg
உரிமையாளர்: த.மனோகரன்


அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



# சித்திரைப் பெண்ணே!

**முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**

இயற்கை காலத்தின் கரைவைத் தன் மாறுபட்ட தோற்றங்களால் நமக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. இருபெரு சுடர்களான கதிரவனையும் திங்களையும் கண்டு பொழுதின் கடப்பை நமது முன்னோர்கள் கணித்தனர். பண்டைய இலக்கியமாகிய சிலப்பதிகாரம் பாடிய இளங்கோ இரு சுடரையே முதலில் வாழ்த்திப் பாடுகின்றார். திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும் என அவர் வாழ்த்தியமைக்கு ஒரு காரணம் உண்டு. திங்கள் நாளின் கடப்பை நன்கு உணர்த்தி நின்றது. ஞாயிறு ஆண்டின் கடப்பைக் கணிக்க உதவியது. இக்கணிப்பீட்டு முறைமை இன்று விஞ்ஞானத்தின் விந்தையாலும் பொறிமுறைகளின் நுட்பத்தாலும் பல நுட்பங்களை வெளிப்படுத்து கிறது. முன்னோர் பருவ மாற்றங்களை நுட்பமாகக் கண்டு அவற்றின் வேறுபாட்டை நன்குணர்த் தினர். இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஆறு பருவ காலங்களை இனங்கண்டனர். இப்பருவகாலப் பகுதியை ஓராண்டாக வரையறை செய்தனர்.

காலநிலை மாற்றத்திற்கேற்ப அவர்கள் தமது வாழ்வியல் நடை முறைகளையும் வகுத்துக் கொண்டனர். அந்த வகையில் ஓராண்டு காலத்தில் 12 மாதங்களை வகுத்தமைத்தனர். அவற்றிற்குப் பெயரும் இட்டனர். மாதங்களின் காலநிலைக்கேற்பவும் வாழும் நிலத்தின் இயல்புக்கும் ஏற்ற தொழில்களைச் செய்தனர். இயற்கையான விளைபொருள் கொண்டு வாழ்வு நடத்தினர். அந்த வகையில் இரண்டு மாதங்கள் நமது முன்னோர் வாழ்வில் சிறப்பான மாதங்களாகக் கணிக்கப்பட் டிருந்தன. தை, சித்திரை எனப் பெயர்பெற்ற அந்த மாதங்கள் இன்றுவரை சிறப்பான மாதங்க ளாகவே சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. அதற்கு என்ன காரணம் என்பதை இன்று பலர் அறியாமல் இருக்கிறார்கள். குறிப்பாக நமது இளம் தலைமுறையினர். இப்பண்பாட்டு நிலையை விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். சிறப்பாக இன்று புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர் தலைமுறை இக்கொண்டாட்டங்களை ஏன் நடத்தவேண்டும் என்ற கேள்வியையும் சுமந்து திரிகின்றனர்.

இயற்கையின் பருவமாற்றம் எல்லா நாடுகளிலும் இன்று நுட்பமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நாளாந்த வானிலை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. எனினும் இயற்கை, சில வேளையில் விஞ்ஞானத்தை மேவித் தன் நியதியையும் இருப்பையும் வெளிக்காட்டிய வேளைகளும் உண்டு. இந்த இயற்கையோடு நம்மவர் இயைபுபட வாழ்ந்ததையே அவர்கள் கொண்டாடிய விழாக்கள் நன்கு உணர்த்தி வருகின்றன. அந்த வகையில் தமிழர் வாழ்வியலில் சித்திரை மாதப்பிறப்பு எவ்வாறு சிறப்புப் பெற்றது என்பதை எண்ணிப் பார்க்கலாம்.

சித்திரை மாதம் இளவேனிலின் தொடக்க காலமாகும். நீண்ட குளிர் காலத்தின் பின்னர் வருகின்ற அந்த வேனிற் காலம் எல்லோரும் எதிர்பார்த்திருக்கும் காலம். இக்காலத்தின் வரவைப் பண்டைத் தமிழர் இயற்கைத் தோற்றப்பாடுகளால் உறுதிசெய்தனர். மலர்கள் இளவேனிற் காலத்தைக் காட்டிநின்றன. குயில்கள் கூவி காலத்தின் வரவைப் பறைசாற்றின. இந்த முறைமை பழந்தமிழ் இலக்கியமான ஐங்குறுநூறு என்னும் நூலிலே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

'இளவேனிற் பத்து' எனப் பத்துப் பாடல்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள குறிப்புகள் இரண்டு செய்திகளைக் கூறுகின்றன. ஒன்று பல்வேறு மலர்களின் தோற்றம். மற்றது கூவும் குயிலின் குரல். குயில் வேனிற்காலம் வந்துவிட்டதைக் குரல்கொடுத்து அறிவிக்கிறது. மூன்றடிக் குறும் பாடலாக அப்பாடல் அமைந்து செய்தியைப் பதிவுசெய்துள்ளது.

“அவரோ வாரார் தான்வந் தன்றே
அஞ்சினைப் பாதிரி அலர்ந்தெனச்
செங்கண் இருங்குயில் அறையும் பொழுதே.”

(ஐங்குநுறூறு: 346)

காதலனைக் காத்திருக்கும் காதலி கூற்றாக அமைந்த பாடல். காதலன் வரவில்லை. ஆனால் அவன் வருவதாகக் குறிப்பிட்டுச் சொன்ன காலம் வந்துவிட்டது. காலம் பாதிரி மலரும் காலம் என்று சொல்லிப் பிரிந்து போனான். பாதிரிப்பூ அழகிய கொம்புகளில் மலர்ந்திருப்பதை அவள் காண்பதற்காகக் குயில் கூவி அறிவிப்புச்செய்துவிட்டது. குயில் தன்னுடைய பெடையை இனிய குரலால் அழைக்கிறது. அக்குரல்தான் அவள் காதில் விழுகிறது. பறவையினமே சேர்ந்து மகிழும் இனிய காலம் இளவேனிற் காலம். பிரிந்து சென்றவனும் இந்த இனிய குரல் கேட்டுத் தான் திரும்பும் காலத்தை அறிவான். இப்பாடலில் இன்னொரு உட்கிடையான பொருளும் உண்டு. பிரிந்து சென்ற காதலன் இளவேனிற் காலத்தில் திரும்பிவந்து திருமணம் செய்வேன் என உறுதிமொழி கூறிச் சென்றான். எனவே கட்டாயம் வரவேண்டும். 'அவரோ வாரார்' என்ற தொடர் அவள் உள்ளத்தின் அவல நிலையைச் சுட்டிநிற்கிறது.

இளவேனிலில் மலரும் மலர்களையும் இளவேனிற் பத்து குறிப்பிட்டு உள்ளது. அந்த மலர்களின் பயன்பாட்டு நிலையையும் பதிவுசெய்துள்ளது. பின்வரும் அட்டவணையில் அதனை ஒரு பார்வையில் காணலாம்.

| மலர்களின் பெயர் | பயன்பாட்டு நடைமுறை |
|---|---|
| **நுணவம்** - | கமழும் பொழுது |
| **கோங்கம்** - | முகை உடையும்பொழுது |
| **குரவம்** - | கொய்யும் பொழுது |
| **அதிரல்** - | கதுப்பறல் அணியும்பொழுது |
| **பாதிரி** - | அலரும் பொழுது |
| **புன்கு** - | முறி திமிரும் பொழுது |
| **வலம்சுரி மரா**- | மலரும் பொழுது |
| **வேம்பு** | உதிரும் பொழுது |
| **இளந்தளிர்**- | ஈனும் பொழுது |

மலர்கள் நறுமணம் வீசும் காலம். சில மலர்களில் மொட்டு அவிழும் காலம். குரவமலர் கொய்யும் காலம். அதிரல் மலரைப் பெண்கள் கன்னப் பக்கத்தில் சூடும் காலம். பாதிரி, வலஞ்சுரி மரா போன்ற மலர்கள் அலர்ந்து மலரும் காலம். புன்கமரம் இளந்தளிர் பொலிய நிற்கிறது. வேப்ப மலர் மலர்ந்து உதிரும் காலம். எல்லா மரங்களும் இளந்தளிர் ஈன்று எங்கும் பசுமைக்கோலம் பூண்டிருக்கும் காலம் இளவேனிற்காலம்.

சித்திரை மாதத்திலே இயற்கையின் கோலம் ஒப்பனை செய்த அழகான தோற்றம் போலிருக்கும். இளவெயில் எறிப்பதால் வானத்திலே முகில்கள் கொத்துக் கொத்தாய் சித்திரம் வரைந்தாற்போலத் தோன்றும். யப்பானிய நாட்டிலே இளவேனில் வரவை சகுர மலர்கள் மலர்ந்து அறிவிக்கும். எங்கும் மலர்க்காடாகத் தோன்றும். இயற்கைப் பெண்ணின் அழகைக் காண்பதற்கு மக்கள் கூட்டமாகச் செல்வர். காதலர் இளவேனிற் காலத்தில் ஒருவரை ஒருவர் நேரேகாணக் காத்திருப்பதை பண்டைய யப்பானிய இலக்கியமான மன்யோசுப் பாடல்களும் பதிவுசெய்துள்ளன. காலத்தின் கடப்பை இன்றும் இயற்கைத் தோற்றத்தின் மூலம் அறியும் மனப்பாங்குடையோராய் இருக்கின்றனர். நவீன விஞ்ஞானத்தின் மூலம் பல பொறிகளின் பயன்பாட்டைப் பெற்றாலும் இயற்கையைப் பணிந்து வாழும் பண்பாட்டை இன்றும் பேணிவருகின்றனர்.

நமது தாயகத்தில் மலர்களின் மலர்ச்சியோடு இளவேனிற் காலத்தில் இயற்கை விளை பொருட்களின் பயன்பாடும் அதிகம் உள்ளது. நெல் விளைச்சல் முழுவதும் வீடு வந்துசேரும் காலம் இது.

தொடர்ச்சி 20 ம் பக்கம்




JAFFNA BAZAR
Einzelhandle Srilankisch Indische Chinesche
விமானப் பயணச்சீட்டுக்கள் மற்றும்
தாயகத்திற்கு வேண்டிய
மளிகைப்பொருட்கள் அனைத்தும்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள் உடனுக்குடன்பெற்றுக் கொள்ளலாம்.
Kaiserstr.39
45468 Mülheim an der Ruhr.
e.mail:suthan170@hotmail.com
உரிமையாளர்:S.Suthan
Tel/Fax 0208696485.
Handy:.015254076424.

துரித பணமாற்றுச் சேவை!




அதிகூடிய பெறுமதியில்
தாயகத்தில் பணம் பெற...
எம்மை நாடுங்கள்.
இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெறலாம்.
HNB BOC


அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# அறிவுக்கும்,சாதனைக்கும்! சம்மந்தமே இல்லையாம்!!

## பரம்பரைப் புத்தியா! கடின உழைப்பா!! சூழலா!!! உங்களை உயர்த்துகின்றது!

சிவஜெனனி அரவிந்தன்

எல்லோரும் ஒரு காரணம் வைத்திருக்கிறார்கள் ஏன் தம்மைவிட மற்றவர்கள் நல்ல வசதியாக இருக்கிறார்கள் என்பதற்கு. "அவன் டாக்டரோட மகன் அப்போ அவன் கெட்டிக்காரனாகத் தானே இருப்பான். அதனால அவன் வசதியாக இருப்பது என்ன அதிசயமோ?" என்பார்கள்.

சிலர், "நான் சிறுவயதில் இருந்து கஷ்டப் பட்டு உழைத்ததால் இப்போ நல்லா இருக்கிறேன், அதன் பயனை அனுபவிக்கின்றேன்", என்று சொல்வர். அப்போ எது உண்மை? உழைப்பா? பரம்பரைப் புத்தியா? எமது பிள்ளைகளின் எதிர்காலம் கருதி நாம் என்ன அவர்களுக்கு செய்யலாம்?

US President Obama மார்கழி மாதம் கொடுத்த ஒரு பேட்டியில் கூறினார். " ஒருவருடைய முன்னேற்றம் என்பது அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் ஒரு வசதியான குடும்பத்தில் பிறப்பதை வைத்து முடிவெடுக்க முடியாது, முயற்சி இல்லாமல் ஒன்றும் இல்லை". என்றார்.

### "IQ" என்றால் என்ன?

Intelligence Quotient எனப்படும் நுண்ணறிவு ஈவு ஒருவருடைய அறிவுத்திறத்தை குறிப்பிடுவதாகும். "IQ" எனும் இதன் சுருக்கம் ஜெர்மன் வார்த்தையான Intelligenz-Quotient என்பதிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. உளவியலாளர் வில்லியம் ஸ்டெர்ன் என்பவர் இந்த வார்த்தையின் சொந்தக்காரர்.

பொது அறிவு, பார்வை, பேச்சு, கணக்கு, பாஷாஞானம், நினைவாற்றல் என பல ஐகு சோதனையின் மூலம் பெறப்படும் மதிப்பெண் ஒருவரின் அறிவுத்திறன் எத்தகையது என்பதை எடுத்துரைக்கும். IQ சோதனைகள் 100-l சராசரி மதிப்பெண்ணாக கொண்டு, ஒருவர் 90 110 மதிப்பெண்கள் பெற்றால் நடுத்தரமான அறிவுத்திறம் கொண்டவர்கள் எனவும், 130க்கு மேலே பெற்றால் அபூர்வமான அறிவுத்திறம் கொண்டவர்கள் எனவும், 70க்கு கீழே பெற்றால் மனவளர்ச்சி குன்றியவர்கள் எனவும் சுட்டிக்காட்டுகிறது.

நம்மோடு வாழந்து கொண்டிருக்கும் அதிபுத்திசாலிகள்: முன்னாள் கேப்டன் கிறிஸ்டோபர் மைக்கேல் லங்கான் (195 மதிப்பெண்கள்), செஸ் வீரர்களான கேரி காஸ்பரோவ் (195), ராபர்ட் பைரன் (170), மற்றும் பாபி பிஷ்ஷர் (167)!

*-கீர்த்தி*

பரம்பரை genes முக்கியமாக இருந்தாலும், சுற்றாடலும் முக்கியத்துவம் வகுக்கின்றது. ஒருவருடைய புத்திக் கூர்மை (IQ) வைத்துத் தான் அவர்களுடைய புத்தியை கணிப்பர். இந்த IQ வைக் கூட நாம் நினைத்தால் மாற்றலாம். அது நாம் எமது பிள்ளைகளை வளர்க்கும் முறையில் தான் இருக்கிறது. இதை கையாள எத்தனையோ முறைகள் இருக்கிறது, ஆனால் அதை பூர்த்தி செய்ய பாடசலைகளின் ஒத்துழைப்பு, அரசாங்கத்தின் மற்றும் முக்கியமாக பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியமாக இருக்கின்றது.

London Kings College நடாத்திய ஒரு ஆய்வில அவர்கள் கண்ட முடிவு என்ன வென்றால், "UKயை பொறுத்த மட்டில் பிள்ளைகளின் படிப்பு அதிகமாக பரம்பரையில்தான் தங்கியுள்ளது. ஆசிரியர்களால் அல்ல!"

புத்திகூர்மைக்குக் காரணம் அதிகபங்கு எமது முன்னோரின் genes தான் காரணம். புத்தி கூர்மையான பிள்ளைகள் பாடசாலையிலும் நன்கு படிப்பார்கள். இதன் அர்த்தம் அவர்களுக்கு புத்தி இருக்கு அதனால் படிக்க தேவையில்லை என்று இல்லை. அத்தோடு இதன் அர்த்தம் பாடசாலையில் நல்லாப் படிப்பவர்கள் வாழ்க்கையில் பெரிதாக சாதிப்பார்கள் என்று இல்லை.

Stanford University 1920யில் Lewis Terman என்ற ஒரு psychologist ஒரு ஆய்வு செய்திருந்தார். அதில் அவர் கலிபோனியாவில் 1528 பிள்ளைகளின் IQ (California) பரிசோதித்து எடுத்தார். இவரின் நம்பிக்கை IQ கூடிய பிள்ளைகள் வாழ்கையில் நல்ல முன்னேற்றத்துடன் இருப்பார்கள் என்பதே. இந்தப் பிள்ளைகள் வளர்ந்து ஒரு அளவிற்கு நல்ல ஒரு நிலமைக்கு வந்தனர்,



என்றாலும் பெரிதாக சொல்லும் அளவுக்கு உச்சத்தை எட்டவில்லை. 1 இல் 4 பங்கு பெரிதாக ஒரு வேலையும் பார்க்கவில்லை. ஒருவரும் படிப்புக் கேற்றால் போல் அவர்களுடைய படிப்புக் காலத்தில் இருந்த அவர்களுடைய IQ க்குக் எற்றாற்போல் சாதிக்கவில்லை. இவர்களில் ஒருவர்கூட பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவில்லை.

ஆனால், Lewis Terman யார் யார் அந்த காலத்தில் IQ குறைவாக இருக்கு என்று நினைத்து இந்த ஆய்வில் சேர்த்துக்கொள்ளவில்லையோ அவர்கள் Nobel prize ஐயே வாங்கியிருக்கிறார்கள். Luis Alvarey, William Shockley ஆகியவர்கள் பௌதீகத்தில் (Physics) நோபல் பரிசு வாங்கியவர்கள். 25 ஆண்டுகளுக்கு பின்னர் Terman ஒத்துக்கொண்டார், இந்த அறிவும் சாதனையும் ஒன்றோடு ஒன்று சம்மந்தப் பட்டது இல்லை என்று.

சுற்றாடலும் முக்கியமானது, ஏனெனில் கஸ்டப்பட்ட இடத்து பிள்ளைகளுக்கு வசதிகள் குறைவு.கணனிகள், புத்தகவசதிகள் குறைவு. தாய் தந்தையரின் கவனிப்புக்குறைவு. படிப்புக்கு மட்டுமல்லாது உடல் நலத்திற்கும் பாதிப்பு. இது பிற்காலத்தில் நல்லறிலைக்குவர தடையாக இருக்கின்றது. Edward University of London இவர் பிள்ளைகளின் வளர்ச்சியை முன்னிட்டு ஒரு ஆய்வு நடத்தினார். அதில் 5 வயதிற்கு கீழ்பட்ட பிள்ளைகள் பெற்றோரின் கவனிப்புக் குறைவால் அவர்களுக்கு உரையாடல் மொழிப்பிரச்சினை இருந்தது.

இதுவே இவர்களது IQ குறைவுக்கு காரணம். உதாரணமாக கஸ்டப்பட்ட குடும்பத்தில் இருந்து வசதியானவர்கள் ஒரு பிள்ளையைத் தத்து எடுத்தால் அந்தப்பிள்ளையின் IQ சிலசமயங்களில் கூடவருவதற்கு வாய்ப்புக்கள் அதிகம்.

ஒருவரின் வெற்றிக்கு சுற்றாடல் மட்டும் காரணமாகாது. உதாரணமாக சங்கீதம். விளையாட்டு போன்றவற்றிற்கு அனேகமாகப் பயிற்சிதான் அவர்களின் திறமையை வெளிக்கொண்டு வருவது. துணிவானபிள்ளைகள் அதிகம் வெற்றியடைவார்கள். எந்தவொரு சவாலையும் எந்தத்தருணத்திலும் துணிவுடன் கையாள்வது. ஊக்குவித்தல் என்பதும் முக்கியமானது.. உதாரணமாக சன்மானம் கொடுத்தால் அவர்களது ஊக்கம் அதிகமாக இருக்கும்.

அத்துடன் மனவுறுதியும் தங்களைத்தாங்களே கட்டுப்படுத்தும் தன்மையும் அவசியம்.

தொடர்ச்சி 19ம் பக்கம்

To advertise here call
Sanje: 078 24 61 83 83
vettimaniy@hotmail.com




## நமக்கே நமக்கான நேரங்கள்!

வெயில் சுட்டெரிக்கும் மத்தியான நேரம் பீச் பக்கம் போனால் பார்க்க முடியும் வெயிலுக்கே சவால் விடும் காதலர்களை. சூரியபகவானே டென்ஷன் ஆகிற அளவுக்கு அவரை அலட்சியப் படுத்தி காதலில் கலந்திருப்பார்கள் காதலர்கள். திருமணம் முடியும் வரை, அல்லது காதல் முறியும் வரை இந்த நெருக்கமும், பிணைப்பும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே இருக்கும். கொஞ்சம் நேரம் கிடைச்சா கூட அந்த சைக்கிள் கேப்பில் சந்திக்கவும், பேசவும், தனிமையாய் நேரம் செலவிடவும் காதலர்களின் மனம் தவியாய்த் தவிக்கும். இந்தத் தவிப்பு தான் காதல் எனும் செடிக்கு உரமும், தண்ணீரும், காற்றும் சர்வ சங்கதிகளும்.

திருமணம் ஆனபின் லைசன்ஸ்ட் காதலர்களாக ஆசை அறுபது, மோகம் முப்பது என ஒரு தொன்னூறு நாள் உலகம் சுற்றியபின் ஒரு சோர்வும், சின்ன இடைவெளியும் உருவாகிவிடும். இந்த இடைவெளியும் நாட்கள் செல்லச் செல்ல அதிகரித்துக் கொண்டே செல்லும். திருமண பந்தங்களின் சிக்கல்களின் ஆணிவேர் இது தான் என்பதில் உங்களுக்கு எந்த சந்தேகமும் வேண்டாம். திருமணம் வரை வாழ்ந்த வாழ்க்கைக்கும், திருமணத்துக்குப் பின்னான வாழ்க்கைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. காதலை மட்டுமே வளர்க்கும் பணி திருமணம் வரை ! காதலோடு சேர்ந்து குடும்பத்தையும் வளர்க்கும் பணி அதன் பின்பானது !

ஒரு சினிமா டிரைலர் பாக்கறீங்க. பரபரப்பா, சுறு சுறுப்பா, கண்ணுக்கு வசீகரமா, பிரமிப்பா இருக்கு இல்லையா. டிரைலர் உருவாக்கும் எதிர்பார்ப்பை எல்லா சினிமாவும் பூர்த்தி செஞ்சிருக்கா ? இல்லை ! பூர்த்தி செய்திருந்தால் எல்லாமே சூப்பர் ஹிட் படங்களாத் தானே இருக்கணும் ? பல சினிமாக்கள் அந்த டிரைலர் தந்த எதிர்பார்ப்பை ஈடு செய்ய முடியாமல் தோல்வியடைகிறது. சில படங்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்து வெற்றிப் படமாகுது. சில படங்கள் எதிர்பார்ப்புகளையெல்லாம் தவிடு பொடியாக்கி பாக்ஸ் ஆபீஸ் ஹிட் ஆகுது.

திருமண வாழ்க்கையும் இப்படித் தான். ஏகப்பட்ட எதிர்பார்ப்பை வளர்த்து கொண்டால் ஏமாற்றங்கள் பரிசாய்க் கிடைக்கலாம். டிரைலருக்கு ஓவரா செலவு செஞ்சா படம் முழுக்க நீங்க அதையே எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். இங்கே தேவையானது இரண்டு விஷயம். ஒன்று, அளவான எதிர்பார்ப்பு. இரண்டு, தொடர்ச்சியான அன்பு !

திருமணத்துக்கு முன்பு எப்படி நீங்கள் இருவரும் நேரம் செலவிட்டீர்களோ அதே போல, அல்லது அதை விட அதிகமாக நேரம் செலவிடுவதில் இருக்கிறது உங்களுடைய திருமண வாழ்க்கையின் வெற்றி. திருமணம் முடிந்த பின் ஒரு குழந்தை பிறக்கும் வரை கூட செலவிட நேரம் நிறைய இருக்கும். ஆனால் ஒரிரு குழந்தைகளும் பிறந்தபின் எப்படி ? அதெல்லாம் முடியாத காரியம் என சட்டென ஒரு முடிவெடுப்பதை விட, அதை சாத்தியப்படுத்துவது எப்படி என்பதைக் கொஞ்சம் யோசியுங்கள்.

திருமண வாழ்க்கையின் வெற்றி என்பது கணவன் மனைவி இருவருக்கும் இடையேயான புரிதலிலும், நெருக்கத்திலும் தான் இருக்கிறது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். சொந்தக்காரங்க, வருமானம், குழந்தைகள், வேலை, பொழுதுபோக்கு, இத்யாதி இத்யாதி எல்லாமே இரண்டாம் பட்சம் தான் ! முதல் கோணல் முற்றும் கோணலாகிவிடும் ! இந்தப் பிணைப்பை இறுக்கமாக்க என்ன செய்யவேண்டும் ? சிம்பிள் ! அதிக நேரம் கணவன் மனைவி, தனிமையில் நேரம் செலவிட வேண்டும் !

அவ்வப்போது கணவன் மனைவி இருவருமாக வெளியே போவது ஒரு வழிமுறை. குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும் போதோ, அல்லது ஒரு நாள் குழந்தைகளை உறவினர் வீட்டில் விட்டு விட்டோ, அல்லது நண்பர்கள் வீட்டில் விட்டு விட்டோ, கணவனும் மனைவியும் தனியாக அவர்களுக்குப் பிடித்த ஒரு இடத்துக்குப் போய் மனம் விட்டுப் பேசுவது உறவை உற்சாகமாய் வைத்திருக்கும். ஒருவேளை வெளியே செல்ல வாய்ப்பே இல்லாவிட்டால் கூட குழந்தைகள் தூங்கிய பின் நிலவொளியில் அமர்ந்து கதைகள் பேசலாம் ! அந்த உரையாடலில் வேலை, நாளை செய்ய வேண்டிய பணிகள், பிரச்சினைகள் போன்றவற்றை ஒதுக்கி வைத்து விட்டு சுவாரஸ்யமான விஷயங்களையோ காதல் காலத்தின் நினைவுகளையோ அசைபோடுங்கள். வித்தியாசத்தை நீங்களே உணர்வீர்கள்.

பெரிய பெரிய விஷயங்களில் குடும்ப வாழ்க்கையின் வெற்றி இல்லை. அது ரொம்ப ரொம்ப சின்ன விஷயங்களில் தான் இருக்கிறது. உதாரணமா, உங்கள் மனைவி சமையல் செய்து கொண்டிருக்கும் போது, ”மணம் சூப்பரா இருக்கே”, ” ஏதாச்சும் ஹெல்ப் வேணுமா ?”, என ஒரு சின்ன புன்னகையுடன் மனைவியின் அருகில் சிறிது நேரம் இருப்பதே நீங்கள் அவரை மதிக்கிறீர்கள், அவரை அன்பு செய்கிறீர்கள் என்பதை வெளிக்காட்டி விடும். ஒரு சின்ன புன்னகை, ஒரு சின்ன கண்ணசைவு, ஒரு சின்ன நிகழ்வுப் பகிர்வு எல்லாமே உறவின் இறுக்கத்தைத் துளித் துளியாய் அதிகரிக்கும் !

ரெண்டு பேருக்குமே பிடிச்ச மாதிரி ஒரு ஹாபி கண்டு பிடிங்க, அல்லது மியூசிக், ஓவியம், இப்படி ஏதாச்சும் எக்ஸ்ட்ரா கிளாஸ் கண்டு பிடிங்க, இருவரும் சேர்ந்து நேரம் செலவிடவும் நெருக்கத்தை அதிகரிக்கவும் இது ரொம்ப ரொம்ப உதவும். ஒண்ணும் இல்லேன்னா அடிக்கடி ரெண்டு பேரும் வெளியே போய் காப்பியாவது குடிச்சிட்டு வாங்க ! அந்த அரைமணி நேர அருகாமை கூட அன்பை வளமாக்க உதவும்.

திருமணமாகி நாட்கள், மாதங்கள், வருடங்கள் செல்லச் செல்ல தம்பதியர்கள் சோர்வாகும் ஒரு விஷயம் தாம்பத்யம். அதுவும் குழந்தைகள் பிறந்தபின் அந்த சிந்தனை ஓரமாய் ஒதுக்கி வைக்கப்படும். தாம்பத்யம் என்பது தம்பதியரை இறுக்கமாக்கும் என்பதும், மன அழுத்தத்தை வெகுவாகக் குறைக்கும் என்பதும் உளவியல் உண்மைகள். எனவே குடும்ப வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சமாக அதை எப்போதுமே மனதில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

## நேரங்கள் களவாடப்பட்டு விடுகின்றன!

மிஷெல் வெய்னர் பிரபலமான ”டைவர்ஸ் பஸ்டிங்” எனும் நூலின் ஆசிரியர். ”திருமணங்கள் ஏன் டைவர்சில் முடிவடைகின்றன” எனும் கேள்வியை அவரிடம் கேட்டார்கள். அவர் சொன்ன பதில் ஆச்சரியமூட்டுகிறது. ”திருமணங்கள் டைவர்ஸ் ஆவதற்கு ஏதோ மிகப்பெரிய காரணங்கள் இருப்பது போல எல்லோரும் நினைக்கிறார்கள். அது உண்மையல்ல. டைவர்ஸ்களுக்கு மிக மிக முக்கியமான காரணம் கணவனும், மனைவியும், தேவையான அளவு நேரம் ஒதுக்காதது தான். திருமணமான பின் அவர்களுக்கு வேலை, குழந்தைகள், ஹாபி, தனிப்பட்ட விருப்பங்கள், போன்ற இத்யாதிகள் முதலிடத்தை அபகரித்துக் கொள்கின்றன. அதனால் கணவன் மனைவிக்கு இடையேயான தனிப்பட்ட நேரங்கள் களவாடப்பட்டு விடுகின்றன. அதுவே பெரும்பாலான டைவர்ஸ்களுக்கான காரணம்”

குழந்தைகள் முக்கியம் தான். ஆனால் உங்களுடைய குழந்தைகள் உங்கள் வாழ்வில் வருவதற்கு முன்பே வந்தவர் உங்கள் வாழ்க்கைத் துணை என்பதை நினைவில் கொள்ளுங்கள். குழந்தைகள் உங்களை விட்டுத் திருமணமாகிப் பிரிந்து போனபின்பும் உங்களுடன் இருக்கப் போவது உங்கள் வாழ்க்கைத் துணை தான்.

தொடர்ச்சி 17ம் பக்கம்...

யேர்மனியில் Frankfurt நகரில்...
SARAVANAA BHAVAN® HSB சரவணபவன்®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Kaiserstrasse 66, 60329 Frankfurt am Main (30 Mtrs from Railway Station) Tel : 069 97693374
a synergy of taste and quality across the globe ... every hour ... every day ...
India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

## குடும்ப வெற்றியின் இரகசியம்





சேவியர்

அவருடன் தனிப்பட்ட முறையிலான அன்யோன்ய நேரம் செலவழித்தல் மிகவும் முக்கியம். எப்போதுமே தனியே நேரம் செலவிட முடியாது, ஆனால் எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் நீங்கள் சேர்ந்து நேரம் செலவிடலாம்.
சில விஷயங்களை நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். உதாரணமாக, ஒரு மாலை வேளையில் நீங்களும் உங்கள் பார்ட்னரும் தனித்திருக்கும் சூழல் இருக்கிறது என வைத்துக் கொள்ளுங்கள்.



அந்த நேரத்தில் ஏதோ ஒரு நாலு பொண்டாட்டிக் காரனுடைய சீரியலைப் பார்த்து நேரத்தை வீணடிக்க வேண்டாம். அல்லது டோனி அடிக்கப் போகும் ஹெலிகாப்டர் ஷாட்டுக்காக இமைக்காமல் டிவியை விழுங்க வேண்டாம். டிவியை ஆஃப் செய்து விடுங்கள். கையில் ஆறாவது விரல் போல செல்போனை ஒட்டி வைக்காதீங்க. மாற்றி வைக்க முடியாமல் இருக்க செல் போன் ஒன்றும் பச்சை குத்திய விஷயம் அல்ல. அதை தூரமாய்ப் போடுங்கள். எந்த விதமான இடஞ்சலகளும் இல்லாமல் பேசுங்கள், சிரியுங்கள், ஏதாச்சும் விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
வீட்ல ஒரு வேலை செய்ய மாட்டேங்கறே, இதெல்லாம் நான் தான் செய்யணுமா, எல்லாரும் சேந்து செஞ்சா தான் வீடு நீட்டா இருக்கும் - போன்ற பல்லவிகளெல்லாம் உண்மையில் கணவன் மனைவியிடையே போதுமான அளவு தனிப்பட்ட நேரம் செலவிடவில்லை என்பதன் விளைவுகள் தான். உன்னால தான் நேரம் செலவிட முடியல - போன்ற பரஸ்பர குற்றச்சாட்டுகள் உண்மையில் அர்த்தமற்றவை. அவற்றை அப்படியே மூட்டை கட்டி மூலையில் எறிந்து விட்டு கிடைக்கும் நேரத்தை இயல்பாகச் செலவிடுங்கள்.

இன்றைக்கு தம்பதியர் சேர்ந்தே இருந்தாலும் அவர்களைப் பிரிப்பது தொழில் நுட்பம். அதே போல பிரிந்தே இருந்தாலும் இணைந்தே இருக்கும் உணர்வைத் தருவதும் அது தான். அதை எந்த நேரத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதில் தெளிவு வேணும். இருவரும் தூர தூரமாக இருக்கும்போது செல்பேசலாம், சேட்டிங் செய்யலாம். ஆனால் ஒரே வீட்டில் இருக்கும்போது உங்களுடைய ஃபேஸ்புக், டுவிட்டர், செல்போன், கேம்ஸ் இத்யாதிகளையெல்லாம் மூடி வைத்து விடுங்கள்.

கடைசியாக ஒன்று ! குடும்பம் என்பதை ஒரு மரம் என்று வைத்துக் கொள்ளுங்கள். கணவனும் மனைவியும் அதன் வேரும் நிலமும் போல ! வேர்கள் மண்ணில் இறுக்கமாகப் பற்றியிருப்பதே மரத்தின் அடிப்படைத் தேவை. வெளியே கிளைகள் விரியலாம்,பூக்கள் மலரலாம், கனிகள் தொங்கலாம், பறவைகள் வந்து வந்து போகலாம். எல்லாமே எந்த அளவுக்கு மண்ணும் வேரும் இறுக்கமாய், நெருக்கமாய் இருக்கின்றன என்பதில் தான் இருக்கிறது. வேர் தனது பிடிப்பை விட்டு விட்டு கிளைக்கும், பறவைக்கும், மலருக்கும் முக்கியத்துவம் கொடுத்து வெளியேறினால், ஒட்டு மொத்த மரமே சரிந்து விடும் அபாயம் உண்டு !

குடும்ப வாழ்க்கை வளமாக அமைய வேண்டுமா ? வேராகவும், மண்ணாகவும் கணவன் மனைவி இருக்க வேண்டும். அதற்கு "உங்களுக்கே உங்களுக்கான" தனிப்பட்ட நேரங்கள் மிக மிக அவசியம்



## ஜெருசலேம் பல்கலைக்கழகம் வழங்கிய கௌரவ டாக்டர் பட்டம்!

**இலக்கிய டாக்டர்!**

நம் வெற்றிமணி இதழுக்கு தன்னுடைய படைப்புகளை அளித்துவரும் எழுத்தாளர், கவிஞர் சேவியர் அவர்களுக்கு ஜெருசலேம் பல்கலைக்கழகம் கவுரவ டாக்டர் பட்டத்தை வழங்கியுள்ளது! இது ஒரு பிரிட்டிஷ் - அமெரிக்க தன்னாட்சி பல்கலைக்கழகம்.
இந்த பட்டம், கடந்த 15 ஆண்டுகளாக கிறிஸ்துவ இலக்கியத்திற்கு சேவியரின் பங்களிப்பை பாராட்டி தரப்பட்டதாகும். சேவியர் படைப்புகளை வாசித்த யாவருக்கும் இவ்விருதை பெற அவர் எவ்வளவு தகுதியானவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

இத்தகைய உயரிய கௌரவத்தை பெற்ற சேவியரை வெற்றிமணி இதழின் சார்பாக மனதார வாழ்த்துவோம். அவர் மென்மேலும் பல வெற்றிகள் பெற இறைவனை பிராத்திப்போம்.


ஜெய் துர்க்கா சக்தி ஜோதிட மையம்
PANDIT - JAI KRISHNA
Astrology Prediction is God Gift, Passed down from generation to Generation - Meet me once & change your Future
ALL RELIGIONS WELCOME!
ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள் 101% Guarantee
வியாபாரங்கள்–எதிரிகள்–உடல்நிலை–வேலை–குழந்தையின்மை
திருமணம்–பணம்–குடிபோதை–காதல்–விசா–விவாகரத்து
வழக்குகள்–கண்திருஷ்டி–குடும்ப–ஒற்றுமை–படிப்பு–வாகனப்பொருத்தம்
மற்றும் பல...பிரச்சனைகளுக்கு...
0231-92732985
Mob.: 0152-18663154
0151-43538322
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்
For Private & Confidential Appointment
கிழமை 7 நாட்களும் 09.00 முதல் 20.00 மணி வரை வரலாம்
Borsigstr. 68, 44145 Dortmund, Germany (near to Borsigplatz)
ஓம் சாய் ராம்
Mail: jaikrishna198621@gmail.com

புதிய ஓர் அறிமுகம் புதிய ஓர் தொழில் நுட்பம்
15 வது ஆண்டில்..
Kaneen electronics
நேரடி ஒளிபரப்பு!
உங்கள் அனைத்து கலை நிகழவுகளையும உலகெங்கும் தமிழ மக்கள நேரடியாகப் பார்த்து மகிழவும், தமிழ்த் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யவும் எம்மை நாடுங்கள்.... மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும்
சாதாரண Sat.Receiver இல் சற்றலைட்பொருத்தாமல் அனைத்து சற்றலைட் நிகழ்வுகளையும் ஒரு காட்பொருத்திய IP Recivier அறிமுகமாகிறது
மற்றும் சகல sat,Receiver,Camera-Alam கருவிகள் கொள்வனவு செய்வதற்கும் பொருத்துவதற்கும் நாடவும்!
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
Schevenhoferweg-24
42111 Wuppertal
www.kaneenelectronics.de

Lucky Fly
SINCE: 1995
கோடைகால விடுமுறைக்கு 2014 முந்துங்கள்
London Zurich Amsterdam
ஆகிய இடங்களில் இருந்து இலங்கை இந்தியா போன்ற நாடுகளுக்கு விமானச் சீட்டுக்கள் பெற்றுத்தரப்படும்.
இந்தியா விசா துரிதகதியில்...
www.golden-travels.de
Sri lanka
ab 599 €-750€
Tel: 0234 239 90 32
Handy:0179 14 84 892
Lucky Fly, Allee Str 38-40a, 44793 Bochum

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com




## இங்கிலாந்தில் உள்ள நடைமுறை சில....

கேள்வி

**Company Car or Car allowance**

நான் வேலை செய்யும் கம்பனியில் எனக்கு company car தந்து இருக்கிறார்கள், அதனுடைய taxable மதிப்பு £9500. எனவே நான் 40% வரி செலுத்துவதால் காரின் வரியாக £3800 செலுத்துகின்றேன். நான் ஒவ்வொரு வருடமும் 8000 miles business ற்கு பாவிக்கின்றேன். கம்பனி காருக்கு பதில் இந்த மாதம் முதல் எனக்கு £5000 car allowance பணமாக தர இருக்கின்றார்கள். நான் எனது சொந்த காரை business ற்காக பயன்படுத்துவது நல்லது என்று கூறுவீர்களா?

புதில்

நீங்கள் சொந்த காரை business ற்கு பாவிக்கும் பொழுது நீங்கள் travel செய்யும் ஒவ்வொரு business mile ற்கும் 45pence tax free ஆக பெற்றுக் கொள்ள முடியும். எனவே 8000 miles x 45p= £3600. அது மட்டுமன்றி உங்களுக்கு கிடைக்கும் £5000 allowance ல் tax கழிய £3000 வரையில் கிடைக்கும். அத்துடன் தற்பொழுது செலுத்தும் கார்வரியான £3800 இனிமேல் செலுத்த மாட்டீர்கள். எனவே மொத்த இதன் தொகை £10400 (£3600+£3000+£3800). ஒவ்வொரு வருடமும் தங்கள் சொந்த காரை பயன்படுத்துவதற்கு ஏற்படும் செலவு £10400 குறைவாக இருந்தால் company car ரை பெறுவதிலும் பார்க்க car allowance சை பெற்று கொள்வது இலாபகரமானது.

கேள்வி

Property rental losses

எனது பெயர் சிவம். நான் கடந்த வருடம் buy to let அடிப்படையில் ஒரு வீடு வாங்கி வாடகைக்கு கொடுத்ததில் எனக்கு £7000 அந்த ஆண்டிற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நட்டத்தை ஏதாவது அடிப்படையில் அதாவது நான் செலுத்தும் வரியிண் இருந்து குறைத்துக் கொள்ள முடியுமா என விளக்கமாக கூறுவீர்களா?

பதில்

நீங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்தவுடன் வரி விலாக்கிற்கு (HMRC) tax year முடிந்து வரும் 5th October ற்கு முன் தெரியபடுத்த வேண்டும். பலர் இவ்வாறு உடனே HMRC ற்கு தெரிவிக்காமல் இலாபம் வரும்வரையும் காத்திருந்து அதன் பின்னரே தெரியபடுத்துகிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட £7000 நட்டத்தை tax return னை புரணப்படுத்துவதன் மூலம் தெரியப்படுத்தினால் அடுத்து வரும் வருடங்களில் தங்களுக்கு rental மூலம் இலாபம் கிடைத்தால் இந்த £7000 நட்டத்தை இலாபத்தில் இருந்து கழித்து மிகுதியாக இருக்கும் இலாபத்திற்கு மட்டுமே வரி செலுத்த வேண்டும்.

Company Mobile phone and Tax

கேள்வி:

நான் வேலை செய்யும் வேலைத்தளத்தில் எனக்கு company mobile phone தந்து இருக்கின்றார்கள். இந்த தொலைபேசியை நான் எனது சொந்த தனிப்பட்ட தேவைக்கும் பாவிக்கின்றேன். வேலைத்தளத்தால் கிடைக்கும் தொலைபேசி “company Perk” என்பதால் இதற்கு வரி செலுத்த வேண்டும் என எனது நன்பர் ஒருவர் கூறினார். இது உண்மையா என கூறுவீர்களா?

பதில்:

உங்கள் நண்பர் கூறியது ஓரளவு உண்மை உண்டு, ஆனால் company mobile phone னை எவ்வாறு tax-free perk ஆக அடைய முடியும் என்பதனை சற்று விளக்கமாக கூற முடிவு செய்துள்ளேன்.

Mobile phone ற்கான contract, mobile phone கம்பனிகளான O2, Vodafone, EE ற்கும், தங்களுடைய சொந்த பெயரிலும் இருந்து இதற்கான எல்லா செலவுகளையும் அதாவது call charges, rental charge என்பதனை தங்கள் வேலைத்தளம் செலுத்தினால் நீங்கள் வரி செலுத்த வேண்டும். ஆனால் இந்த contract தங்கள் பெயரில் இல்லாது நீங்கள் வேலை செய்யும் உங்கள் employer ரின் பெயரில் இருந்தால் நீங்கள் எந்தவிதமான வரியும் செலுத்தத் தேவையில்லை.







**Capital Gains tax- How to save!!!**

கேள்வி:

நான் தற்பொழுது 40% வருமான வரி செலுத்துகிறேன். என்னிடம் உள்ள shares (பங்குகள்) portfolio யை விற்பனை செய்தால் எனக்கு £20,000 இலாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன். நான் 28% முதலீட்டு இலாப வரி (capital gains tax) செலுத்த வேண்டும் என அறிந்துள்ளேன். எனவே, £5600 வரி செலுத்தாமல் எவ்வாறு வரியை குறைத்துக் கொள்ள முடியும்?

பதில்:

இந்த வருடம் நீங்கள் இலாபம் அடையும் முதல் £10,900 பணத்திற்கு எந்த விதமான முதலீட்டு வரியும் செலுத்த தேவையில்லை. இதனை “exemption” என்று அழைப்பார்கள். எனவே நீங்கள் செலுத்த வேண்டிய வரி 20,000-10,900x 28%= £2548. தங்களது மனைவிற்கு எந்த விதமான முதலீட்டு இலாபமும் இந்த ஆண்டில் இருக்காவிட்டால் தங்களுடைய shares portfolio வின் 50% பாகுதியை தங்கள் மனைவியின் பெயரில் மாற்றுவதன் மூலம் நீங்கள் இருவரும் £10,900 exemption தனித்தனியாக உபயோகப் படுத்துவதன் மூலம் வரி ஒன்றும் செலுத்தத் தேவையில்லை.

| | நீங்கள் | உங்கள் மனைவி |
|---|---|---|
| | 50% | 50% |
| முதலீட்டு இலாபம் | 10,000 | 10,000 |
| Exemption | 10,900 | 10,900 |
| | No tax | No tax |

ஊர்காற்று
ஒன்றுகூடல் 2014
Denmark info:
Amaresan: 0045 28255370
Vamadevan: 004587258909
Ruban 0046 704494 208
Kurumbasiddy info:
Valanteena 0094 771141493
Thangarajah 0094 774280446

ஸ்கன்ரிநேவியன் நாடுகள் இணைந்து நடாத்தும்
ஊர்காற்று Sunday 20.04.2014

புலத்திலும் நிலத்திலும் உள்ள உறவுகளும்
எம் இனிய கிராமத்து உறவுகளும்
Skype தொடர்பின் ஊடாக
ஒன்றாகி உரையாட வாருங்கள்!
Denmark வருபவர்கள் வருவதை உறுதிசெய்து
ஒருங்கமைப்பாளர்களுக்கு உதவுங்கள்.

புலத்தில்:
Adress:
Munklindevej 39, Bording,
Denmark

நிலத்தில்
குரும்பசிட்டி

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# அடுப்பங்கரைக்கும் கணனி வந்தாச்சு!

**கீர்த்தி**

இப்போதெல்லாம் ஹோட்டல் கடைகளுக்கு புது வகையான பதார்த்தங்கள் உணவுகள் தயாரிக்கும் கற்பனைக்கு பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. பார்த்தார்கள்...இறுதியில் கம்ப்யூட்டரிடம் சரண் அடைந்துவிட்டார்கள்! ஆம்…IBM கம்பெனியின் சூப்பர் கம்ப்யூட்டர் வாட்சன் தான் அந்த சூப்பர் ஹீரோ!

ஐ.பி.எம் ஆராய்ச்சியாளர்கள் நியூயார்க் சமையற் கல்வி நிறுவனத்தோடு இணைந்து, வாட்சனை உறுவாக்கியுள்ளனர். வாட்சன் கடைகளுக்கு உதவியாளராக பணிபுரியும். இது கடைகள் தரும் சமையல் மூலப்பொருள், மற்றும் சமையல் குறிப்புகளுக்கான கட்டளையை ஏற்று பல விதமான உணவு வகை யோசனைகளை வாரி வழங்குமாம்! உதாரணமாக, ஷெப் “lobster' என்று அதனிடம் சொன்னால் போதும்.. கணினி உடன் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து Cuban-style lobster bouillabaisse with squash என்ற உணவு வகையை பரிந்துரைக்குமாம்!

ஷெப்கள் நினைத்துக்கூட பார்த்திராத உணவு வகைகளான சுவிஸ் தாய் அஸ்பாரகஸ் க்விஷே (Swiss-Thai asparagus quiche) மற்றும் ஆஸ்திரிய




சாக்லேட் பரிதோ (Austrian chocolate burrito) போன்ற உணவுகளை வாட்சன் உருவாக்கி அசத்தியிருக்கிறது!!

மேலும், லாஸ் வேகாஸில் நடந்த தொழில்நுட்ப மாநாட்டில், IBM உணவு டிரக் ஒன்றை ஏற்பாடு செய்து,இவ்வுணவுகளை பரிமாறியிருக்கிறார்கள்…இதன் வித்தியாசமான சுவை, சோதனையாளர்களை வெகுவாக குஷிப்படுத்தி யிருக்கிறது!! எதைத்தான் விட்டுவைக்குமோ இந்த தொழில்நுட்ப முன்னேற்றம்??!!!

*ஜப்பானில்....*

## குழந்தைகள் செல்போனில் பேசத் தடை!



குழந்தைகள் ஸ்மார்ட் ஃபோன்களுக்கு அடிமையாவதைத் தடுக்கும் வகையில், ஜப்பானிய நகரமான கரியாவில் இரவு 9 மணிக்கு மேல் அவர்கள் செல்போன் பேசுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஏப்ரல் மாதம் முதல், பள்ளியில் பயிலும் சுமார் 13,000 மாணவர்கள், இரவு 9 மணிக்கு மேல் தங்களது செல்போன்களை பெற்றோரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

இத் தடையை மீறுபவர்களுக்கு தண்டனை எதுவும் விதிக்கப்படாது என்றாலும், குழந்தைகளின் செல்போன் பழக்கத்தைக் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை தங்களுக்கு உதவியாக இருக்கும் என பெற்றோர்கள் வரவேற்றுள்ளனர். அது சரி பிள்ளைகளுக்கு அது இல்லை என்றால் தூக்கமேவரதே!

## பூரணசந்திரக்கலைவிழா 2014

**தாயக நிகழ்வு**

**மடுவலயம்**





வடமாகாணக்கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மடு வயலக்கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்பட்ட பூரணசந்திரக்கலை விழாவானது 2014 ஆம் ஆண்டு மாசித்திங்கள் 14ம் நாள் வெள்ளிக்கிழமையன்று மன்.அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மடுவலயக்கல்விப் பணிப்பாளர் திரு.ஏ.ஜே.குரூஸ் அவர்கள் தலைமை தாங்கியதுடன், பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் திரு முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். அத்துடன் பிரதேசக்கலைஞர்கள், பிரமுகர்கள், பாடசாலை அதிபர்கள், அழகியல் பாட ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு இன்னிய வாத்தியம் முழங்க வரவேற்று மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். கலைநிகழ்வுகளில் உழவர்நடனம், நாட்டார்பாடல், கோலாட்டம், கிராமிய நடனங்கள், இசைச்சங்கமம், கும்மி, செம்பு நடனம், கிராமிய சங்கமம், சமூக நாடகம் போன்ற கலாசார அம்சங்களை எடுத்தியம்பும் கலைநிகழ்வுகள் நடைபெற்றன.

## அறிவுக்கும் சாதனைக்கும்.....

15ம் பக்கத் தொடர்ச்சி

சிலபேர் மட்டும் சில பிள்ளைகளைவிட திறைமைமிக்கவர்கள். ஆனால் அவர்களுக்கு வெவ்வேறு துறைகளில் அத்திறமை இருக்கும்.

ஆனால் அவர்களுக்கு ஒரே மாதிரிக் கல்வியூட்டப்படுகின்றது. இதனால் சில பிள்ளைகள் மட்டுமே முன்னுக்குவருகின்றார்கள். பாடங்கள் பிள்ளைகளின் திறமையைவைத்து முன்னேற்ற வேண்டும்.

பெற்றோர்களும் இதற்கு பிள்ளைகளின் திறமையைக் கண்டு பிடித்து ஊக்கமளிக்கவேண்டும்.

ஒரு ஓவியனாக வரவிரும்பும் பிள்ளையை ஒரு வைத்தியராகவரவேண்டும் என்று முயற்சித்தால், அப்பிள்ளைக்கு முன்னேற வாய்ப்பிருக்காது. பிள்ளைகளின் திறமைகளை செயற்பட வைக்கவேண்டும்.

ஒருவரின் அறிவுத்திறன்: பரம்பரைபுத்தி, பயிற்சி, மற்றும் சுழல் ஆகிய 3ம் முக்கிய இடம் வகித்தாலும், கல்வியா! செல்வமா!! வீரமா!!! என்பதுபோல் 3ம் ஓர் இடத்தில் அமைந்தால் உச்சம் நிச்சயம்.


**GAAYATREE PARTY SERVICE**

**உங்கள் விருப்பம்போல் இலங்கை இந்தியா சீனா மலேசியா நாட்டு உணவுகள் அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் சுத்தமாகவும் சுவை ஆறாது தயாரித்து விருப்பம்போல் பரிமாறுகின்றோம்.**

**கொத்துரொட்டி**
**புரியாணி**
**நூடில்**
**தந்தூரிச்சிக்கன்**
**இறால் சம்பல்**
**இறால் கறி**

இன்னும் பல சுவையான உணவுகளும் உண்டு இவை அனைத்தும் வெளிநாட்டு மக்களுக்கும் ஏற்ற வகையில் பரிமாறக் காத்திருக்கின்றோம்.



e.mail:gaayatree-cs@live.de
TeL:07021 99 39 363
Mobile:0152 17 50 77 40
73230 Kirchheim-Unter-Teck
Gaayatree Party Service



**Akchaya Digital Photography& Decoration**

*Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration*

**உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.**

Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474








**அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

# நோர்வேயில் கல்வியில் தமிழ் மாணவர்கள் 3ம் இடம்

## சிறந்த மாணவர் தொகையில் முதலாம் இடம்

### முதலிடம் யேர்மனி -இரண்டாம் இடம் சீனா - மூன்றாம் இடம் ஈழத்தமிழர்கள்

நோர்வேயின் மிகப் பெரிய பத்திரிகைகளில் ஒன்றான (afoenposten) சமீபத்தில் நோர்வேயில் பிறந்த வேற்று இனக்குழுக்களின் கல்வித் தரம் எப்படி என்பதைப் பற்றி ஆய்வு செய்து முடிவுகளை வெளியிட்டது.

அதில் சில இனங்கள் சொந்த இன மக்களை விட சிறந்து விளங்குவதாக கண்டறியப்பட்டது.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த 24 குழந்தைகள் 47 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறார்கள்.

அடுத்து சீனாவை சேர்ந்த 52 குழந்தைகள் 45.5 குழந்தைகள் புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் இருக்கிறார்கள்.

ஈழத் தமிழ் குழந்தைகள் 245 பேர் 42.2 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் இருக்கிறார்கள். இந்தியா 97 குழந்தைகளுடன் 40.8 புள்ளிகள் பெற்று ஐந்தாம் இடத்தில் வந்தது.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் தமிழ்ப் பிள்ளைகளின் எண்ணிக்கை. அனைத்து தமிழ்ப் பிள்ளைகளும் நன்றாக படிப்பதை எடுத்துக் காட்டுகிறது. இன்று புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களது பிள்ளைகளது கல்வித்தரம் உயர்வாக இருப்பது மகிழ்சியைத் தருகின்றது.

இவர்கள் படிப்பதற்கு தமிழர்களின் குடும்ப அமைப்பும், நோர்வேயில் உள்ள தமிழ்ப் பள்ளிகளின் பங்களிப்பும் மிக முக்கியமான காரணங்கள் என்பதை இந்தப் பத்திரிகை குறிப்பிட்டு இருக்கிறது.

தகவல்: தமிழர் தகவல் ஆண்டுமலர் 2014

## கடுகுமணி ....07

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

### நமக்கு இரண்டு புத்தாண்டுகள்!

மார்கழி மாதக் குளிர் நீங்கிய காலம் தை மாதம். வானம் சித்திரமாகத் தோன்றும் காலம் சித்திரை மாதம். சித்திரை இளவேனிற் காலத் தொடக்கம். சிறப்பான மாதம். இந்நிலையில் நமக்கு தை மாதம் ஒரு புத்தாண்டு எனவும், சித்திரை மாதம் இன்னொரு புத்தாண்டு எனவும் அமைகின்றன.

தமிழருக்கும் யப்பானியருக்குமிடையே மொழி, பண்பாடு முதலியனவற்றில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. இருவரும் பண்டைக்கால முதல் தைத் திங்களை புத்தாண்டாக கொண்டாடி வந்தனர். இன்று யப்பானில் கிரகோரியன் கலண்டரைப் பின்பற்றி ஜனவரி முதல்நாள் புத்தாண்டு நாளாகக் கொண்டாடினாலும், அவர்களு டைய மரபான புத்தாண்டு நாளான ஜனவரி 14 இன்றும் சிறிய புத்தாண்டு எனக் கொண்டாடப்படுகிறது.

நம்முடைய தைப்பொங்கல் தினம் இரு பண்பாடுகளிலும் புத்தாண்டு நாளாக இருந்திருக்கவேண்டும்.

எங்களைப்போல் சில பிற பண்பாடுகளிலும் இரண்டு புத்தாண்டுகள் கொண்டாடப்படுகின்றன

ஒன்றுக்கு இரண்டு என்றால் மகிழ்ச்சிதானே! அதுவும் கொண்டாட்டமென்றால் எல்லோருக்கும் நல்ல மகிழ்ச்சி! புது உடை! பல வகை தின்பொருட்கள்! வாழ்க புத்தாண்டுகள்!

## சித்திரைப் பெண்ணே!!!

14ம் பக்கத் தொடர்ச்சி

தானியங்களின் அறுவடைக்காலம். முக்கனிகளின் வளம் பெருகிடும் காலம். சித்திரை மாதம் வேனிற்காலமாதலால் உணவில் மிகுந்த கவனம் தேவை. 'சித்திரைக் கஞ்சி' எனச் சிறப்பான ஓர் உணவு நடைமுறை இன்று வரையில் நடைமுறையில் உண்டு. வழிபாட்டு நடைமுறையில் காய்மடை, பூமடை, கனிமடை எனவும் பொங்கல், புழுக்கல், களி என்பனவும் மடையிடப்பட்டன. சித்திரைப் பரணி, சித்திரா பூரணை என இரு நாட்கள் வழிபாட்டில் இடம் பெற்றன. வளம் மிக்க காலமாகையால் சித்திரை மாதப்பிறப்பு ஒரு முக்கிய நாளாகக் கருதப்பட்டது.

அன்றும் புத்தாடை அணிந்து விழாவாகக் கொண்டாடப்பட்டது. கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுகள் நடத்தப்பட்டன. போர்த் தேங்காய் அடித்தல், சேவற்சண்டை, கோலாட்டம், கும்மிபோன்ற நிகழ்வுகளை ஊர் மக்கள் நடத்தி இளவேனிற் காலத்தை மகிழ்வாக வரவேற்றனர். காலத்தின் வருகையையும் கடப்பையும் நன்குணர்ந்து தமிழர் பல நடைமுறைகளை உருவாக்கினர். இது உலக மக்களிடையே ஒரு பொதுவான பண்பாடாக அமையலாம். ஆனால் தமிழர் வாழ்வியலில் இயற்கையோடு இயைந்த பண்பாடாகப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்று உலகம் எங்குமே செயற்கை நடைமுறை மூலம் விளைபொருட்கள் உருவாக்கப்படுகின்றன. பருவத்தில் கிடைக்கும் பழம் என எதையும் சுவைப்பதற்கில்லை. அதனால் நம் இளையோர் மனதிலும் விளை பொருள் பற்றி எதிர்பார்ப்பு இல்லை. எனினும் காலமாற்றம் பற்றிய கண்காணிப்பு மனிதனுக்கு இன்றியமையாதது. பிறப்பு, இறப்பு என்னும் இரு எல்லைக்குள் அவனுடைய வாழ்க்கை இன்பமாக நடைபெற இயற்கையே உற்ற துணை என்பதை நன்கு உணரவேண்டும்.


KAILAS
Fisch- Feinkost
டோட்முண்ட் நகரில் கடல் உணவுக்கு ஓர் கடை கைலாஸ்

Offnungszeiten:
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 9.00 முதல்
மாலை 20.00 மணி வரை

Tel:0231 137 433 95
Handy:0163 47 60 857,0163 47 60 237
web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de

Adler Str.05
44137 Dortmund

ஒவ்வொரு வியாழக்கிழமையும்
இலங்கை இந்திய மீன்கள்
உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்!
தரமான ஆட்டு இறைச்சி
எம்மிடம் கிடைக்கும்!


துரித பணமாற்றுச் சேவை
அதிகூடிய பெறுமதியில் தாயகத்தில் பணம் பெற எம்மை நாடுங்கள்!
VALUTRANS MONEY TRANSFER
NSB National Savings Bank HNB Bank of Ceylon BOC Instant Cash
இலங்கையில் மேற்படி வங்கிகளில் பணம் பெறலாம்
இங்கு வளங்கும் பணத்திற்கு



பசுமையான
உடன் மரக்கறி
வகைகளுக்கும்
எம்மை நாடுங்கள்


அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# இதயத்தில் காதல் வளரட்டும்...கொழுப்பு வேண்டாம்!!!





ராஜி

தமனிகள் அல்லது ரத்தக்குழாய் அடைப்பு ஒரு ஆபத்தான விஷயம். “அட...அது எங்களுக்கே தெரியும். அதை தடுக்க வழி சொல்லுங்க” என்கிறீகளா? சரி சரி.. இதோ உங்கள் கேள்விக் கான பதில்.


**பூண்டு:**
பண்டைய காலங்களில் பூண்டை இதய நோய் மற்றும் மிக அதிகமான இரத்த அழுத்த (Hypertension) சிகிச்சைக்கு பயன்படுத்தினார்கள். தடுப்பு மருந்து குறித்து வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின் படி, பூண்டு தகடு (plague) உருவாவதற்கு காரணமாக இருக்கும் கரோனரி இதய கல்சியமேற்றலை (coronary artery calcification) தடுக்கிறது.

**திராட்சை:**
ஃப்ளேவனாய்ட்கள் (flavonoids - Vitamin P), க்யுயர்சிடின் (quercetin) மற்றும் ரெஸ் வெராட்ரால் (resveratrol) சத்து அதிகமுள்ள பழம் இது. ஃப்ளேவனாய்ட்கள், கெட்ட கொழுப்பின் விஷத் தன்மை தமனி சுவர்களில் (artery walls) படியாமல் தடுக்கும். இனிமே திராட்சையை சலாம் போட்டு சாப்பிடுங்க!

**பசலை கீரை:**
சில பேருக்கு இந்த பேரே தெரியாது என்று நினைக்கிறேன்! பொட்டாசியம் (potassium) மற்றும் ஃபோலிக் அமிலம் (folic acid) மிகுந்து இருக்கும் இந்த கீரை உயர் இரத்த அழுத்தத்தின் வில்லன். லுடீன் (lutein) அதிகமுள்ள இக்கீரை, முதிய வர்களை தாக்கும் பார்வை கோளாறை (macular degeneration) மட்டுமல்ல மாரடைப்பையையும் தடுக்கிறது. ஆதலால் பசலை கீரைக்கு 'ஓ' போடுங்கள்!

**மீன்:**
சவுத்தாம்ப்டன் பல்கலைக்கழகத்தின் ஒரு ஆய்வு படி, ஒமேகா 3 (Omega 3) எண்ணை கொண்ட டுனா (Tuna) மற்றும் சால்மன் (Salmon) மீன்கள் தமனிகளில் கொழுப்பு சேர்வதை தவிர்கிறது. “வாட் டு யு 'மீன்'?” என்று நீங்கள் ஆச்சர்யமாக கேட்கிறீர்கள் தானே?!!

**ஆலிவ் எண்ணெய்:**
ஆக்ஸிஜனேற்றப்பட்ட கொழுப்புச்சத்துதான் (oxidi-zed cholesterol) தமனி சுவர்களில் எளிதில் ஒட்டி கொள்கிறது. இதுவே தகடு (plague) உருவா வதற்கு ஏதுவாகிறது. ஆலிவ் எண்ணையில் இருக்கும் நிரம்பாத கொழுப்புகள் (Monounsaturated fats) கெட்ட கொழுப்பின் மூலக்கூறு களோடு (molecules) கலக்கும் போது அது குறை வாகவே ஆக்ஸிஜனேற்றப்படுகிறது.



## இரத்தக்குழாய் அடைப்பிற்கு 10 தீர்வுகள் இங்கே!

**தக்காளி:**
கொரிய ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுப்படி, தக்காளி யில் இருக்கும் இலைக்கொப்பீன் (lycopene) தமனிகள் கடினப்படுத்துதலை தடுக்கிறது. பெண்களின் உடம்பில் இலைக்கொப்பீன் அளவு அதிகமாக இருப்பின் அவர்களின் தமனிகள் மருதுவாக இருக்கும். பெண்களின் மனது மென்மை யாக இருக்க இதுவும் ஒரு காரணமோ?!

**மாதுளை:**
மாதுளை சாறு இரத்த நாளங்களை பாதுகாப்ப தோடல்லாமல் தமனிகள் கடினப்படுத்துதல் தீவிரமடைவதையும் தடுக்கிறது. மாதுளையிலும் அதன் சாறிலும் ஆக்சிஜெனேற்றத்தடுப்பான் (antioxidant) மிகுந்திருப்பது தமனிகள் கடினப் படுத்துதலை தடுக்கிறது. மாதுளைக்குள் இவ் வளவு விஷயமா? இன்னும் படியுங்கள்.

**கிவி பழம் மற்றும் பரங்கி –**
சிலர் பரங்கிக்காயை பார்த்தால் பவர் ஸ்டாரை பார்த்தது போல் ஓடுவார்கள்! ஆனால் கிவி மற்றும் பரங்கி ஆக்சிஜனேற்ற தடுப்பான் நிறைந்த உணவுப்பொருட்கள். இவை உங்கள் தமனிகளை துருப்பிடிக்க (rusting process) செய்யும் நச்சான எல்டிஎல் கொழுப்பைக் (toxic LDL cholesterol) குறைக்கிறது. தினமும் ஒரு கப் கிவி பழம் அல்லது பரங்கியை சாப்பிட்டு வாருங்கள். அப்புறம் நீங்களும் சச்சின் போல் சதம் அடிப்பீர்கள்!!

**குருதிநெல்லி பழச்சாறு:**



பேரே வாயில நுழையல என்கிறீர்களா? அட நம்ம Cranberry juice தாங்க. தமனிகளின் கொழுப்பை இது வெளியேற்றி விடுகிறது. உங்கள் இரத்த நாளங்களில் கொழுப்பை படிய விடாமல் செய்து அக்கொழுப்பை செல்கள் உறிஞ்சி சக்தியை கூட்ட செய்கிறது. இதை நாள் ஒன்றுக்கு 3 கிளாஸ் குடிங்க... மாரடைப்பை நாடு கடத்துங்க!!

**ஓட்ஸ் :**
கொழுப்பை ஓட ஓட விரட்டுவதால் தானோ இதற்கு ஓட்ஸ் என்று பெயரோ?! ஓட்ஸில் உள்ள கரையக்கூடிய நார்ச்சத்து கொழுப்போடு ஒட்டிக் கொண்டு அதனை உங்கள் உடலை விட்டே வெளியேற்றுகிறது.
ஒரு நாளுக்கு வெறும் 1 ½ - 2 ½ கப் ஓட்ஸ், கொழுப்பை 20% குறைக்கிறது என்கிறது ஒரு ஆய்வு.
இப்போது உங்கள் வீட்டு ஷாப்பிங் லிஸ்ட் தயாரா?


சுஜிதா நிறுவனத்தினர். கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தரத்திலும் சுவையிலும் தடம் பதித்துள்ளனர்.

**Sujitha Frozen Food**

சுவையான உணவிற்கு சுஜிதா

அனைத்து தமிழ் வர்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**S.J.N Imports**

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!




Lambertusstr.80
52441 Linnich

Tel.024625557
Handy.01773268150,01638883308
Email.sjnfastfood@yahoo.de, web:- www.sujitha.eu

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்






# "ஆயிரத்தில் ஒருவன்" படம் பத்துப் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு சமமாம்!

டிஜிட்டலில் புதுப்பிக்கப்பட்டு மறுவெளியீடாக வரும் எம்ஜிஆரின் ஆயிரத்தில் ஒருவன் படத்துக்கு முதல்வர் ஜெயலலிதா வாழ்த்து தெரிவித்துள்ளார். 49 ஆண்டுகளுக்கு முன் மக்கள் திலகம் எம்ஜிஆரும் இன்றைய முதல்வர் ஜெயலலிதாவும் இணைந்து நடித்த படம் ஆயிரத்தில் ஒருவன். மிகப்பெரிய வசூல் சாதனை புரிந்த இந்த படம், இப்போது டிஜிட்டலில் புதுப்பிக்கப்பட்டு மறுவெளியீடு செய்யப்படுகிறது.

திவ்யா பிலிம்ஸ் சொக்கலிங்கம் இந்தப் படத்தை வெளியிடுகிறார். இதற்கு முதல்வர் ஜெயலலிதா வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார். ஆயிரத்தில் ஒருவன் மறுவெளியீடு.. முதல்வர் ஜெயலலிதா வாழ்த்து அந்த செய்தி: திரைப்படங்கள் வழியாக மக்கள் மனதில் உயரிய சிந்தனைகளையும், வாழ்வில் நெறிகளையும் புகுத்த முடியும் என்பதை உலகிற்கே எடுத்துக் காட்டிய மாபெரும் கலையுலக மேதை, எனது அரசியல் ஆசான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். எனவே தான், பல கலை விமர்சகர்களும், திரைப்பட ஆர்வலர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் திரைப்படங்கள் "வெறும்"பொழுதுபோக்கு படங்கள் மட்டுமல்ல, தலைமுறைகளைக் கடந்து நிற்கும் வாழ்க்கைப் படங்கள் என்று போற்றுகின்றனர். புரட்சித் தலைவரின் திரையுலக வரலாற்றில் மிகப் பெரிய சாதனைக் கல்லாக அமைந்த திரைப்படம் "ஆயிரத்தில் ஒருவன்". அடிமைப்பட்டுக் கிடந்த மக்கள் தங்களை விடுதலை விரார்களாக மாற்றிக் கொல்கின்ற சம்பவங்கள் உலகின் பல இடங்களில் நிகழ்ந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒரு திரைப்படத்தின் வழியாகத் திரட்டி மக்கள் மனதில் சுதந்திர வேட்கையையும், தனி மனித நேமையையும் நிலைநாட்ட "ஆயிரத்தில் ஒருவன்" திரைப்படத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்.

அந்த மாபெரும் வெற்றிப் படத்தில் நான் முதன் முதலாக புரட்சித் தலைவரோடு இணைந்து நடிக்கின்ற நல்வாய்ப்பினைப் பெற்றேன். "ஆயிரத்தில் ஒருவன்" திரைப்படம் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்கு முன் வெளியிடப்பட்ட பொது தமிழகத்தில் மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. இன்றைய தலைமுறையினர் அந்த எழுச்சியைப் பெறவும், நாளைய தலைமுறையும் அதனால் பயன் பெறவும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி "ஆயிரத்தில் ஒருவன்" திரைப்படம் மீண்டும் புது வடிவம் பெற்று வெளியாக இருக்கிறது என்பது எனக்கு மட்டுமல்ல, இன்றளவிலும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது பற்று கொண்டவர்கள் மட்டுமல்ல, இந்தியத் திரையுலகிற்கும், திரை ரசிகர்கள் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்ற ஒரு செய்தியாகும். "ஆயிரத்தில் ஒருவன்" வெற்றித் திரைப்படத்தைப் புதுப்பித்து 14.03.201 முதல் தமிழ் நாட்டில் உள்ள திரையரங்குகளில் மறு வெளியீடு செய்ய தாங்கள் ஏற்பாடு செய்திருப்பதை அறிந்தேன். மிக்க மகிழ்ச்சி. தங்களின் இந்த முயற்சிக்கு எனது இதயமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், தங்களின் இந்தப் பயணம் தொடர எனது நல்வாழ்த்துகள்." -இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் முதல்வர் தெரிவித்துள்ளார்.

14.03.2014 வெளியான இப்படம். தலைவரின் ஒரு படத்தை ஒரு முறைப் பார்த்தாலே அது பத்து பொதுக்கூட்டம் நடத்தியதற்கு சமம் என கழகத் தோழர்கள் சொல்லி வருகிறார்களாம்.





# பெண்களை காக்கும்! இரும்பு ரோபோக்கள்!!

இந்திரன் படத்தில் சிட்டி என்கின்ற ரோபோ இறுதியில் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் போது கண்களில் கண்ணீரை வரவழைத்தது. இரும்பிலே ஒரு இதயம் இருக்கிறது என்று சொல்லி இதயம் என்ன கல்லா? அல்லது இரும்பா என்று வசைபாடும் தன்மையை நொடியில் ஒழித்துக்கட்டியது இந்த ரோபோ! அதில் ரஜினிகாந்தின் பங்கும் உண்டு.

இருந்தாலும் ரோபோக்கள் சொன்னதை மட்டும் செய்யம் படியாக உள்ளதால் அதற்கு வேறு இச்சைகள் கிடையாது. மனிதனிற்கு இருக்கும் பெரும் குறையே இந்த இச்சைகள்தான். அதனால்தான் எந்தப் பதவி வகித்தாலும் அதில் இச்! இச்!! இச்சென்று இச்சைக்கும் இடமாகிறது!
லஞ்சம் முதல், வஞ்சம் வரை, மனிதன் தன்பதவியை பாவிக்க முனை கின்றான்.
எனவே நேர்மையான ஒருவன் அதிலும் காவல்துறையில் கட்டாயம் இருக்க வேண்டுமல்லவா?
எனவே யப்பான் அதற்கு என ரோபோவைத் தெரிவு செய்துள்ளது. (இந்திரன் படத்தில் தீயில் அகப்பட்ட பெண்ணைக் காத்த சிட்டிபோல் இன்னும் கொஞ்சம் முன்னேற்றமாக பண்பாட்டுவிதிகள் பொருத்தப்பட்ட ரோபோவாக இருந்தால் நன்று)
இன்று யப்பான் ரோபோ தொழில்நுட்பத்தில் பல புதுமைகள் பல படைத்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் ரோபோ ஒன்றுக்கு பொலிஸ் வேலை கொடுத்துள்ளது ஜப்பான். பொதுமக்களுக்கான ரயில்களில் பெண்களுக்கெதிரான வன்முறை களிலிருந்து பாதுகாப்பதற்காகவே இந்த ரோபோ வேலைக்கமர்த்தப் பட்டுள்ளதாக யப்பானின் (The Osaka Police Department) ஒஸாகா பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.
'ரோபோகொப் Robocop என அழைக்கப்படும் இந்த பொலிஸ் அதிகாரி கற்பனை கதாபாத்திரத்தை நிஜமாக்கியுள்ளது.
மேற்கு ரயில் நிறுவனத்துடன் யப்பான் பொலிஸார் இணைந்து இந்த ரோபோ கொப் உருவாக்கப்பட்டுள்ளது.
பெண்களுக்கெதிரான அச்சுறுத்தல்களில் நீதியின் சுத்தியலாக உள்ளது இந்த ரோபோகொப் என பொலிஸ் திணைக்களம் தனது இணையத்தளத்தில் தெரிவித்துள்ளது.
சட்டத்தை மீறும் பொதுமக்களை உடன் கைது செய்யவும், இந்த ரோபோகொப்புக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும்.

அதுபோல பயணிகள் தங்களது உடமைகளை ரயில் நிலையத்தில் விட்டுச் செல்லும்போது, அனுமதிக்காமல் அவர்களது உடமைகள் தொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்குகிறதாம் இந்த ரோபோகொப்.

மனிதனின் கனவுகள் கற்பனைகள் யாவும் நிஜமாகி வருகின்றது.

## உங்கள் புலமைகளை தாயகத்திலும் பகிருங்கள்!



இசைக்கலைமணி, வர்ணராமேஸ்வரன்

யாழ் மண்ணில் சிறியோர் முதல் முதியோர் வரை பல சமூகப் பணிகளைச் செய்து வரும் சின்மயா மிஷனின் யாழ் கிளை யினரால் இசை ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் இசை ஆர்வலர்களுக்காக 08.03.2014 சனிக்கிழமை சின்மய ஞானவேல் மண்ட பத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட குரலிசைப் பயிற்சியின் போது எடுக்கப்பட்ட புகைப் படங்களின் சில பதிவுகள்.

யாழ் மண்ணின் புகழ்மிகு கலைஞர் சங்கீத, மிருதங்க கலாவித்தகர், இசைக்கலைமணி, குரல் நிபுணர் திரு வர்ணராமேஸ்வரன் இந்தப் பயிற்சியினை அங்கு வழங்கினார். புலம்பெயர் நாடுகளில் இருந்து புலமைமிக்கவர்கள் தாய் மண்ணுக்கு செல்லும்போது இதுபோன்ற தங்கள் கலைத்திறன்களை அங்கு வாழும் மக்களுடன் பகிர்வுகளை மேற்கொள்ளல் ஓர் ஆரோக்கிய மான செயற்பாடாக அமையும்.


ஸ்ரீ காளிமாதா ஜோதிட நிலையம்

ஸ்ரீ காளி மாதா
ஜோதிட மையம்
பண்டித் துளசி பிரசாத்
கிழமை 7 நாளும் 9.00 மணி முதல்
இரவு 20.00 மணிவரை வரலாம்
Astrology Prediction is God Gift, Passed down from generation to Generation - Meet me once & change your Future
ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள்
வியாபாரங்கள்–எதிரிகள்–உடல்நிலை–வேலை–குழந்தையின்மை – திருமணம்–பணம் குடிபோதை–காதல்–விசா–விவாகரத்து – வழக்குகள்–கண்திருஷ்டி – குடும்ப ஒற்றுமை–படிப்பு–வாகனப்பொருத்தம் – மற்றும் பல... பிரச்சனைகளுக்கு...
செவ்வாயும் வெள்ளியும் இலவச ஜோதிட ஆலோசனை!
இவர் அமெரிக்கா கனடா அவுஸ்திரேலியா நியூஸ்லாந்து சிங்கப்பூர் மலேசியா இலங்கை சென்று புகழ்பெற்றவர் முதல் முறையாக யேர்மனியில் உங்களைச் சந்திக்கின்றார்.
0152 18 96 94 47
Heintzmann Str. 26, 45143 ESSEN, Germany
Mobile: 015218969447 / 015143551331
Mail: tthulasi7@gmail.com / skype thulasiprasad123



BCN·TRAVELS
Consulting Network
Travels·Business·Worldwide
Offnungsziten:
Mo-Sa.10.00- 20.00 uhr
கோடைகால விடுமுறைக்குரிய விமானச்சிட்டைகள் முற்பதிவு ஆரம்பமாகிவிட்டது.
இலங்கை, இந்தியா, கனடா உட்பட அனைத்து நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சீட்டுக்களை பெற்றுத்தருகின்றோம்.
- நம்பிக்கையும் நாணயமும் சலுகையும் ஒரே இடத்தில் -
இந்தியா செல்வதற்கான விசாவினைப் பெறுவதற்குரிய ஒழுங்குகளும் செய்து தரப்படும்
தொடர்புகளுக்கு:
BCN Travels // Consulting Network (TBW) UG // Inh. Rasan Sivalingam // Adler Str. 30, 44137 Dortmund
Tel.: 0231-10876361, 0231-98539416 // Fax: 0231-10876362 // Mobile: 0163-8714369
Öffnungszeiten: Mo-Sa 10:00-20:00 Uhr // Email: bcntravels@hotmail.de, Web: www.bcnugonline.com

எமது இன்னுமொரு சேவை!
நீங்கள் வீடு கட்ட
அல்லது வீடு வாங்க
முடிவெடுத்து விட்டீர்களா ?
உங்களுடைய காப்புறுதிகள்
அனைத்தும் அதி உச்ச நலன்களை
தருபவையாகச் செய்துள்ளீர்களா ?
கூடிய கடனா ? அதிகளவு வட்டியா ?
அல்லது இரண்டுமா ?
கேள்விகள் உண்டா ?
தொடர்புகளுக்கு: Tel.: 0231-10876361
0231-58988630


அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

உங்கள் பெரும் அபிமானத்தைப் பெற்ற "ஓம் நமஸ்த்தே" புதிய இடத்தில் புதிய பொலிவுடன்

# Om Namaste

## Indisch Srilankische Restaurant

உங்கள் இல்லக் கொண்டாட்டங்களுக்கு 100 இருக்கைகளுடன் ஓம் நமஸ்த்தே!

**Schüler menü**

பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த விலையில் Schüler Menu 5,90 Euro

1xHauptgericht
1xGetränk
1x Nachtisch



இந்திய இலங்கை (Sweets) இனிப்புப் பண்டங்களுக்கு ஓம் நமஸ்த்தே!












Service (Kellner) தேவை!
உடன் தொடர்புகொள்ளவும்.

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**Offnungszeit: 11.00 -24.00 Mittagsbuffet 11.00-15.00 : 6.00€ - Abendbuffet: 17.00-22.00 : 9.90 €**

www.om-namaste.com facebook om Namaste

**Brückstr 33 - 44135 Dortmund - Germany Tel: 0176 30 56 61 10**

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



# "அறளை பெயர்தல்"



Dr. புஷ்பா கனகரட்ணம்
Ph.D., C. Psych.
Clinical Psychologist

## வயதும் அறிகை சார் மாற்றமும் - DEMENTIA

DEMENTIA என்றால் என்ன?

வயதோடு கூட வரும் அறிகை சார் (cognitive) மாற்ற நிலையை Dementia என்பார்கள். இதனை தான் பேச்சு வழக்கில் தமிழில் "அறளை பெயர்தல்" என்றும் ஆங்கிலத்தில் "senile" என்றும் சொல்வோம். Dementia வின் பல அறிகுறிகளில் முக்கியமானது ஞாபகசக்தி சார்ந்தது. இத்தோடு, மொழி, கணிப்பிடும் தன்மை, திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கவனம், பிரச்சனைகளை தீர்க்கும் திறன், இடம் சார்ந்த அறிவு போன்றவற்றுள் ஒன்றிலாவது சிக்கல் இருக்கும் எனில், அது Dementia ஆகும். ஒருவரின் முன்னைய நிலையோடு ஒப்பிடும் போது, இந்த அறிகை சார் குறைபாடுகள் பெரிய மாற்றமாக இருக்கும் வேளை, அந்த நபரின் நாளாந்த வாழ்க்கையிலும், பாரிய சிக்கல்களை உருவாக்கும்.

ALZHEIMER'S DISEASE (AD) ஒரு நோய். அதன் அறிகுறிகள் தாம் Dementia. அதாவது, Dementia வை காய்ச்சலுக்கு ஒப்பிடலாம். காய்ச்சலுக்கு பல காரணங்கள் இருக்கலாம். உதாரணமாக, ஒரு நோய்நிலையால் காய்ச்சல் வருகிறதெனில், அந்த காய்ச்சல் தான் நோயின் அறிகுறி. அதுபோல், ALZHEIMER நோயின் அறிகுறிதான் Dementia, அல்லது அறிகை சார் மாற்றங்கள். வயதோடு, AD யின் சாத்தியக்கூறும் அதிகரிக்கிறது. 85 அல்லது 85 வயதிற்கும் அதிகமானவர்களில் கிட்டத்தட்ட 50% த்தினருக்கு, AD இருக்கிறது. ஆனாலும் AD வயதுமுதிர்ச்சிகுரிய இயல்பான ஒரு நிலை அல்ல. Dementia வின் முக்கிய காரணம், AD யாகும். வேறு நோய் காரணங்களும் இருக்கலாம் (Vascular Dementia அல்லது Multi-infarct Dementia, Frontotemporal Dementia, Lewy Body disease, Chronic traumatic encepha lopathy).

**DEMENTIA ஏன் ஏற்படுகிறது?**

AD யினை திட்டவட்டமாக அடையாளம் காணுவது ஒருவர் இறந்தபின் செய்யும் பரிசோதனைகள் மூலமே சாத்தியமாகிறது. இதன் காரணங்கள் பற்றியும் ஆய்வுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. ஒரு சாரார், மூளையின் நரம்பணுக்களில் வயர protein பின்னிக் கொள்வதால், மூளை கலங்களின் செயல்பாடு தடைப்படுகிறது என கருதுகிறார்கள். மற்றைய சாரார், beta-amyloid protein நச்சுத்தன்மை வாய்ந்தது என்றும், இதன் காறை படிவுகள் மூளையின் நரம்பணுக்களுக்கு இடையிலான கடத்தலை குழப்புவதாலேயே Dementia ஏற்படுகிறது என்றும் நம்புகிறார்கள்.

### அதீத சுத்தமும், ஆபத்தானதே!

AD இற்கு மூளை உயிரியல் சார்ந்த காரணங்களோடு, சூழல் காரணங்களும் முன்வைக் கப்படுகின்றன. Evolution, Medicine, & Public Health என்ற ஆய்விதழில் Fox, Knapp, Andrews மற்றும் Fincher, அதீத சுத்தம், AD ஏற்படும் சாத்தியக்கூறை அதிகரிக்கிறது என்கிறார்கள். அதாவது, தற்கால நகரமயமாக்கலால் (உதாரணமாக, antibiotics, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், அழுத்தமாக்கப்பட்ட தரைகள்), மக்களின் இயல்பு வாழ்வில் அதீத சுத்தம், நுண்ணுயிர்களில் இருந்து பாதுகாப்பு, போன்ற காரணங்களால், நவீன மயமான நகர பகுதிகளில், அபிவிருத்தி அடைந்த நாடுகளில், AD சாத்தியக்கூறு அதிகரித்திருக்கிறது என்பது இவர்கள் கருத்து.

தீவிரமற்ற அறிகை குறைபாடுகள் 65 வயதிற்கு மேற்பட்ட பலருக்கும் ஞாபகமறதி என்பது சாதாரணம் தான். வயதோடு கூடிய மூளை சுருக்கத்தால் எம் கிரகிக்கும் வேகம், கவனம், உடனடி ஞாபக சக்தி போன்றவற்றில் மாறு பாடுகள் ஏற்படும். இது அனேகமாக முக்கியமற்ற விடயங்கள் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், வெறும் அசௌகரியத்தையே கொடுக்கும். வேறு நோய்நிலைகள், தொற்றுதல், metabolic பிரச்சனைகள், அதிகூடிய மருந்து, மது அல்லது போதைபொருள் பாவனை, மற்றும் ஆழமான உளநிலை காரணிகளும் அறிகை மாற்றங்களை கொண்டுவரலாம்.

எனவே, AD யின் ஆரம்ப அறிகுறிகளுக்கும், இயல்பான அல்லது வேறு காரணம் சார்ந்த அறிகை மாற்ற அறிகுறி களுக்கும் வேறுபாடை கண்டுகொள்வது அவசியம். உதாரணமாக, திறப்பை தேடுவது இயல்பான மறதி என்றால், முக்கியமான பொருட்களை இடம்மாறி வைப்பது, (அதாவது திறப்பை Fridge இற்குள் அல்லது பணப்பையை washing machine க்குள்..) கவனிக்கவேண்டிய ஒன்றாகும். அதேபோல், தற்செயலான சொற்களை அல்லது பெயர்களை மறந்து யோசிப்பது என்றால் இயல்பான மறதியாக இருக்கலாம்.

அதுவே, குடும்பத்தினர் பேரை மறப்பது, வழக்கத்தில் உள்ள பொருட்களின் பெயரை மறப்பது, அல்லது, பொருத்தமற்ற சொற்களை பாவிப்பது, Dementia விற்கான அறிகுறியாக இருக்கலாம். ஒரு சம்பாஷனையின் விபரங்களை மறப்பது சாதாரணம். அதுவே, கலந்துரையாடல்களை அடிக்கடி, முழுமையாக மறந்துவிடுவது பிரச்சனைக்கான அறிகுறியாக இருக்கலாம்.

மறதி மற்றும் அறிகை குறைபாடுகள் நாளாந்த வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தாதவரை, அது தீவிரம் அற்றதாகவே கருதப்படும். இதனை MILD COGNITIVE IMPAIRMENT (MCI) என்பார்கள். வயதோடு MCI அதிகரிக்கிறது. உலகளாவிய ரீதியில், வயது முதிர்ந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்க, MCI இனால் பாதிக்கப்படுபவர்கள் எண்ணிக்கையும் அதிகரிக் கத்தான் செய்யும். இவர்களில் 3%-17% மானவர்கள் நாளடைவில், Dementia நிலைக்கு செல்கிறார்கள். Dementia வை தள்ளிப்போட சில மருந்துகள் பரிந்துரைக்கப் பட்டிருக்கின்றன.

ஆனால் இப்படியான மருந்துகள் [e.g., donepezil (ARICEPT), rivastigmine (EXELON), galantamine (REMINYL), memantine (EBIXA)] சமிபாட்டு தொகுதியில் ஆபத்தான விளைவுகளை கொடுக்குமே ஒழிய, அறிகை குறைபாடுகளை நிவர்த்தி செய்யாது என்கிறார்கள் கனேடிய ஆய்வாளர்கள்.

உளநல மருத்துவர் Dr. Paul Verhoeff (Behavioural Neurology Memory Disorders Clinic, Baycrest Health Sciences in Toronto) கருத்துப்படி, MCI உள்ளவர்கள் நினைவாற்றலை அதிகரிக்க தமக்கு ஏற்கனவே தெரிந்த பெயர்களோடு பெயர்களை இணைத்துப் பார்த்து ஞாபகப்படுத்தலாம். சம்பவங்களை படமாக நினைவுபடுத்த முயற்சி செய்யலாம்.

தொடர்ச்சி 26ம் பக்கம்



அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## "அறளை பெயர்தல்"

25ம் பக்கத் தொடர்ச்சி

செய்ய வேண்டியவற்றை ஒரு நாளேட்டிலோ (அந்த நாளேட்டை ஒரே இடத்தில் வைக்க வேண்டும்)அல்லது எண்ணியல் சாதனங்களை (digital devices)பாவித்தோ நினைவில் வைக்க வேண்டும். இருதய நோய், பக்கவாதம், AD போன்றவற்றுக்கான பொதுவான அபாய அறிகுறிகளான இரத்த அழுத்தம், உடல் கொழுப்பு, நீரிழிவு, உடல் பருமன் போன்றவற்றில் கவனமாக இருப்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்துகிறார்.

இளமையில் DEMENTIA: அபாய அடையாளம் 65 வயதிற்கு முதல் ஏற்படும் Dementia வினை Young Onset Dementia (YOD) என வகைப் படுத்துகிறார்கள். முன்கூட்டியே ஏற்படும் இந்த நோய்நிலையால், தொழில், சமூக மற்றும் குடும்ப பங்களிப்பில் பெரும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இவர்களுக்கு ஆரம்ப அறிகுறிகள் நோய்நிலை அடையாளம் காணலை கடினமாக்குகிறது.

பிந்திய காலத்தில் ஏற்படும் Dementia போல் அல்லாது, YOD இற்கும் பரம்பரை மற்றும் மரபணு திரிபுகளுக்கும் தொடர்பு இருப்பதாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. பிந்திய காலத்தில் ஏற்படும் Dementia விற்கு, ஒருவரின் இயல்பான அறிகை தொழில்பாட்டில் குறைவு இருப்பது ஒரு அபாய அறிகுறியாக அடையாளம் காணப்படுகிறது. உயர் கல்வியும், உடல்பயிற்சி, மற்றும் சமூக ஈடுபாடு போன்றவை Dementia விற்கான அபாயத்தை குறைப்பதாகவும் கருதப் படுகிறது. இது எவ்வளவு தூரம் YOD க்கு பொருந்துகிறது என்பது இன்னும் அறியப் படவில்லை.

JAMA Internal Medicine என்ற ஆய்விதழில் Nordstrom மற்றும் அவரோடு இணைந்த ஆய்வாளர்கள் YOD யுடன் இணைந்த 9 அபாய காரணங்களை முன்வைக்கிறார்கள்:

1) அதீத மது 2) மற்றும் போதைப்பொருள் பாவனை 3) பக்க வாதம் 4) இரத்த அழுத்தம் 5) குறைந்த அறிகை தொழிற்பாடு 6) உயரக் குறைவு 7) தந்தைக்கு Dementia 8) மன அழுத்தம், மற்றும் 9) யதார்த்த பிறழ்வு நோய்க்கான மருந்து (neuroleptics) பாவனை. 68% மான YOD க்களுக்கு மேல்குறிப்பிட்டவை காரணமாக இருக்கின்றன. இத்தகைய காரணங்கள் பலவும் இளமைகால வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் தவிர்க்க கூடியனவாக இருக்கின்றன. இதனால் விரைவாக ஏற்படக்கூடிய இறப்பு சாத்தியத்தையும் குறைக்கலாம்.

**வருமுன் காத்தல்**

ஹுநஅநவெயை, நாளடைவில் தீவிரமாகும் ஒரு நிலை. தனிப்பட்ட காரணங்களை பொறுத்து, பொதுவாக, ஆரம்ப நிலையில் இருந்து கிட்டத்தட்ட 10 வருடங்களுக்குள் அறிகுறிகள் தீவிரம் அடைகின்றன. இதுவரையில், சிகிச்சை என்பது சம்பந்தப்பட்டவருக்கும் அவர் குடும்பத் திற்கும் நாளாந்த வாழ்வை இலகுவாக்கவும், ஆலோசனை வழங்கவுமே உதவுகிறது. அதனால், வருமுன் காப்பது என்பது முக்கியமாகிறது. எப்படி மனதையும் மூளையையும் கூர்மையாக வைத்திருக்கலாம்?

துறை வல்லுநர்கள் (Alzheimer's Association International Conference, Boston/Steven Arnold, director of the University of Pennsylvania's Penn Memory Center) கருத்துப்படி, துரதிஷ்டசாலிகளான சிலருக்கு மரபியல் ஏதுநிலை AD வரும் சாத்தியக்கூறை அதிகரிக்கிறது, ஆனால் மற்றவர்கள் ஆரம்ப கால வாழ்க்கை முறை மூலம் மூளையின் திறனை பேண முடியும் என்கிறார். Dementia வின் ஆரம்பநிலையில் கூட ஒழுங்கான aerobic உடல்பயிற்சி வாழ்க் கைத்தரத்தை உயர்த்துகிறது. எப்பொழுது ஆரம்பித்தாலும் நன்மை இருக்கிறது.

இவர்கள் பரிந்துரைப்பது பின்வரும் ஆதாரத்தோடு கூடிய வழிமுறைகளை தான்:

1) உடல்பயிற்சி - வாரத்திற்கு மூன்று முறை, 40 நிமிட aerobic உடல்பயிற்சி. இந்த பயிற்சியால் உடல் வியர்க்கவேண்டும். இதயத்துடிப்பு அதிகரிக்க வேண்டும்.

2) உறக்கம் - சாதாரணமாக, 7-9 மணிநேர நித்திரை. மருந்து பாவனை, மது, அல்லது பிந்திய இரவில் உடல்பயிற்சி செய்வது நல்ல நித்திரைக்கு பாதிப்பாக இருக்கும்.

3) உணவு - மத்தியதரை (Mediterranean) உணவு (தாவர அடிப்படையிலான உணவு, அதாவது, மரக்கறிகள், பழவகை, தானியங்கள், ஆரோக்கியமான olive oil போன்ற கொழுப்புகள், குறைந்த அளவு இனிப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு)

4) மூளை கூர்மை - குறுக்கெழுத்து (crossword puzzles) மட்டுமல்ல. மூளைக்கு சவாலான, உங்களுக்கு பழக்கமற்ற விடயங்களை கற்றுகொள்வது (நடனம், இசை, புது மொழியை கற்றல்...இப்படி). இணையத்தள மூளை பயிற்சிகளும், அடிக்கடி செய்துவந்தால், உபயோக மாக இருக்கும்.

5) உளநலம்.்.மன நெருக்கடி - ஓரளவு ளவசநளள மூளைக்கு நல்லதே. ஆனால், இதுவே அதிகமாகக்கூடாது. சிகிச்சைத் தேவை உடைய மன அழுத்தம் (depression) AD ஏற்படும் சாத்தியக்கூறை அதிகரிக்கிறது என்று நிரூபிக்கப் பட்டிருக்கிறது (American Journal of Geriatric Psychiatry Gracia-Garcia et al.) மன அமைதிக்கான யோகாசனம், தியானம் போன்றவை பரிந்துரைக்கப் படுகின்றன.

ஓய்வடையும் வயதை நீடிப்பது AD ஏற்படும் சாத்தியக்கூறை குறைக்கலாம் என்கிறது பாரிய அளவில் France நாட்டில் நடாத்தப்பட்ட ஒரு ஆய்வு (INSERM). ஒவ்வொரு அதிகப்படியான வேலை ஆண்டும் Dementia வரும் சாத்தியக்கூறை 3.2 விகிதத்தால் குறைக்கிறது என சொல்லப்படுகிறது. ஏனென்றால், வேலை ஒருவரை உடலளவில் சுறுசுறுப்பாகவும், சமூக அளவில் ஈடுபாட்டோடும், மனதளவில் சவாலாகவும் வைத்திருக்கிறது. இது, மனத்திறனை நீடிக்கிறது. ஆனால், இந்த ஆய்வு முடிவுகளால் எல்லோரும் ஓய்வு பெறும் காலத்தை தள்ளிப்போடவேண்டும் என்றில்லை என்கிறார் Heather Snyder (Director of medical and scientific operations for the Alzheimer's Association). அறிகை சார்ந்த சுறுசுறுப்பும், சமூக ஈடுபாடும், உங்களுக்கு பிடித்தமான விடயங்களை தொடர்ந்து செய்வதுமே முக்கியம் என்கிறார்.

நேரத்தோடு அடையாளம் காணல்

எவ்வளவு சீக்கிரமாக AD/Dementia அடையாளம் காணப்படுகிறதோ, அவ்வளவுக்கு உளநல மற்றும் நடத்தை சார்ந்த சிக்கல்களை தவிர்க்க அல்லது தள்ளிப்போட முடியும் என்கிறன ஆய்வுகள். ஆரம்ப நிலையில் ஒருவருக்கு தேவையான கவனத்தையும் வழிகாட்டுதலையும் கொடுக்கும்போது, அவர்கள் சுதந்திரமாக வீட்டில் இருந்து நாளாந்த வாழ்க கையை சமாளிக்கும் திறன் நீடிக்கப்படுகிறது. நோயின் பின்னைய காலகட்டங்களிலும் இவர்கள் உளநல மற்றும் நடத்தை சார்ந்த அறிகுறிகளால் குறைந்த அளவே பாதிக்கப்பட்டிருந்தார்கள் என அறியப்பட்டிருக்கிறது (Hallikainen & Hänninen> University Of Eastern Finland.) சோதனைக்கூட, உடல் பரிசோதனைகள், மற்றும் சம்பந்தப்பட்டவர், அவர் குடும்பத்தினருடன் கலந்துரையாடல், உளவியல் கணிப்பீடுகள் மூலம், குடும்ப வைத்தியர், நரம்பியல் மருத்துவர், மற்றும் உளநல நிபுணர்கள் இணைந்து யுனு யை அடையாளம் காண்பார்கள். இதற்கென ஒரு தனிப்பட்ட வழிமுறை அல்லது பரிசோதனை இல்லை.






## அமரர் கே.எஸ் பாலச்சந்திரன்
# அன்றும் இன்றும் என்றும் வாழும் கலைஞன்!








அண்ணை ரைட் தனி நடிப்பின் மூலம் ஈழத்தமிழ் மக்கள் மனதில் தனி இடத்தினைப் பிடித்தவர் கே.எஸ் பாலச்சந்திரன். இவரது நடிப்பில் தணியததாகம் வானொலிநாடகம் அன்று அன்றாடம் மக்கள் தம்மவர்களில் ஒருவனாக அவரை எண்ணவைத்தது.
வாடைக்காற்று ஈழத்து திரைப்பட வரலாற்றைப் பதிவு செய்தது. சிறந்த நடிகர் படைப்பாளி என பலவற்றை தன்னகத்தே கொண்ட இனிய நண்பர் கே.எஸ் பாலச்சந்திரனின் மறைவையொட்டி இன்றும் எம்மைவிட்டகலாத அவரது கதாபத்திரம் ஒன்று உங்களுடன் பேசப்போகிறது.

அண்ணை றைற்" தனி நடிப்பு, எழுபதுகளில் ஆரம்பித்து எண்பதுகளின் நடுப்பகுதி வரை பாட சாலைகளிலும், கோயில் திருவிழாக்களிலும் ஒரு சிறப்பானதொரு படையலாகக் கே.எஸ். பாலச்சந்திரன் அவர்களால் பெருவாரியான ரசிகர் வட்டத்தை அவருக்கு வளர்த்துவிட்டது.

ஒரு பஸ் கொண்டக்ரர் தான் சந்திக்கும் மனிதர்களின் (தன்னையும் கூட) குணாதி சயங்களை நகைச்சுவையாகச் சொல்வதினூடே நம் தாயகத்து வெள்ளாந்தி மனிதரிகளின் சுபாவங்கள் எங்கோ கேட்ட, பார்த்த விஷயமாக இருக்கிறேதே என்று யோசித்தால், அது நமக்கும் நேர்ந்த அனுபவம் என்று தானாகவே உணரலாம். அதாவது நமது அன்றாட அசட்டுத் தனமான அல்லது வேடிக்கையான செயல்களை மற்றவர்கள் இன்னொருவரைக் குறிப்பொருளாகக் காட்டிச் சொல்லும் போது நமக்கு அது நகைச்சுவையாக இருக்கின்றது.

ஒரு பஸ்ஸில் வந்து போகும் பாத்திரங்கள் ஒன்றையும் தவறவிடாது அனைவரையும் இவர் விட்டுவைக்கவில்லை. கிழவியாகட்டும் , இளம் பெண்ணோ , இளம் பையனோவாகட்டும் அவர் களில் குரலாகவும் மாற்றி கே.எஸ்.பாலச்சந்திரன் நடித்திருப்பது இந்தத் தனி நடிப்பின் மகுடம்.

உங்கள் அபிமானத்துக்குரிய கலைஞர், தனி நடிப்புப் புகழ் கே.எஸ்.பாலச்சந்திரன் வழங்கும்

## "அண்ணை றைற்"

நெல்லியடி, அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர்,
நீர்வேலி கோப்பாய், யாழ்ப்பாணம் எல்லாம் ஏறு
அண்ணை கொஞ்சம் பின்னாலை எடுத்து விடுங்கோண்ணை.

அண்ணை றைற் அண்ணை றைற்
அவசரப்படாதேங்கோ எல்லாரையும் ஏத்திக் கொண்டுதான் போவன் ஒருத்தரையும் விட்டுட்டுப் போக மாட்டன்.
தம்பீ ஏன் அந்தப் பொம்பிளைப்பிள்ளையளுக்கை நுளையிறீர் கொஞ்சம் இஞ்சாலை வாருமன்.
நீர் என்ன அக்கா தங்கச்சியோட கூடப் பிறக் கேல்லையே?
நீர் என்னும் சரியான ஹொட்டல்லை சாப்பி டேல்லை போல கிடக்கு கொஞ்சம் இஞ்சாலை அரக்கி நில்லும்.

ஆச்சீ!! பொடியனுக்கு எத்தினை வயசு?
இருவத்தஞ்சு வயசிருக்கும், புட்போல் விளையார்ற வயசில இடுப்பிலை வச்சுக்கொண்டு நாரி முறிய முறிய நிக்கிறாய் டிக்கற் எடுக்கவேணும் எண்ட பயமோ? இறக்கிவிடணை பெடியனை
(ஆச்சி தனக்குள்) அறுவான்
என்ன சொன்னீ? அறுவானோ? பார்த்தியே? முன்னாலை போணை.

தம்பீ அதிலை என்ன எழுதியிருக்கு தெரியுமே?
புகைத்தல் விலக்கப்பட்டுள்ளது, ஆஆ ஆரோ காதல் விலக்கப்பட்டுள்ளது எண்டு மாத்திப்போட்டு போட்டான்.முந்தியிருந்தது புகைத்தல் விலக்கப் பட்டுள்ளது.
நீரென்ன சிமெந்து பக்ட்றி புகை போக்கி மாதிரி புக்கு புக்கெண்டு விட்டுக்கொண்டிருக்கிறீர்?
யன்னலுக்குள்ளால இறியும் கொள்ளிக்கட்டையை இல்லையெண்டால் நான் உம்மை எறிஞ்சுபோட்டு போடுவன் யன்னலுக்குள்ளாலை.

இந்தக்காலத்துப் பெடியள் பாருங்கோ வலு பொல்லாதவங்கள் கண்டபடி கொழுவக்கூடாது
அண்டைக்கு இப்பிடித்தான் பாருங்கோ ஒருத னோடை கொழுவிப் போட்டு நான் வந்து ஸ்ரைலா வந்து புட்போர்ட்டிலை நிண்டனான்.
அவன் இறங்கிப் போகேக்கை எட்டிக் குட்டிப் போட்டு ஓடீட்டான். அண்டையில இருந்து பாருங்கோ கொழுவிற நாட்கள்ள புட்போட்டிலை நிக்கிறதில்லை, புட்போட்டிலை நிக்கவேணு மெண்டால் நான் கொழுவிறதில்லை வலு அவதானம்.
அண்ணை எடுங்கோண்ணை, அண்ணை றைற்.....

ஒருத்தரும் புட்போட்டிலை நிக்கக்கூடாது,
எல்லாரும் உள்ளுக்கை ஏறுங்கோ அல்லாட்டா இறங்கோணும்
ஒருத்தரும் புட்போட்டிலை நிக்கவிடமாட்டன்
இண்டைக்கு முந்திப் பாருங்கோ இப்பிடிப் பு போட்டில கனபேர் நிண்டால் ஒரு வேலை செய்யிறனான் . இப்ப செய்யிறதில்லை

முந்திக் கனபேர் புட்போட்டிலை நிண்டால் ஒரு வேலை செய்யிறனான் என்னண்டாப் பாருங்கோ! எல்லாரும் உள்ளுக்கை ஏறவேணும் இல்லாட்டா இறங்கவேணும். இல்லாட்டா பஸ் போகாது எண்டு சொல்லிப் போட்டு நான் கீழ... நிலத்தில இறங்கி நிக்கிறனான்.
இப்ப அப்பிடிச் செய்றேல்லை
அண்டைக்கு இப்பிடித் தான் பாருங்கோ கனபேர் புட்போட்டிலை நிண்டாங்கள், நான் சொல்லி அலுத்துப் போய் கீழ இற்ங்கி நிலத்தில நிண்டண் உள்ளுக்கை நிண்ட படுபாவி ஆரோ மணி அடிச்சு விட்டுட்டான்.
மணியண்ணருக்குத் தெரியாது நான் கீழை இறங்கி நிண்ட விஷயம் ரண்டரைக் கட்டை தூரம் துரத்து துரத்தெண்டு துரத்திப் போய் ஒண்டரைக் கட்டை தூரம் ரக்சியில போயெல்லே பஸ்ஸைப் பிடிச்சனான்.
அண்டையில இருந்து உந்த விளையாட்டு விர்றேல்லை.

அப்பூ! அந்தக் கொட்டனை விட்டுட்டுப் போணை,
அது பத்திரமா நிற்கும், விழாது.
ஏதோ தூண் பிடிச்ச மாதிரி இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு நிக்கிறீர்.
தம்பீ! முன்னாலை இருக்கிற அய்யாவோட கோபமே? ஒட்டப் பயப்பிர்றீர். தள்ளி முன்னுக்கு கிட்டக் கிட்ட நில்லுங்கோ.

நான் சொன்னால் நம்ப மாட்டியள் முன்னால இரண்டு பேர் நிக்கினம் என்ன கதைக்கினம் எண்டு பாருங்கோ
வீட்டில சொல்லிப் போட்டுவாறது பள்ளிக் கூடத்துக்குப் போறன். படிக்கப் போறன் டியூசனுக்குப் போறன் எண்டு, என்ன கதைக்கினம் எண்டு பாருங்கோ
பெண்குரல் : "இஞ்சருங்கோ அண்டைக்கு வாறன் எண்டு சொல்லிப் போட்டுப் பிறகேன் வரேல்லை"
ஆண்: நான் எப்பிடி வாறது? நான் வரேக்கை உங்கட கொப்பர் கொட்டனோட நிக்கிறார்.
நான் பயத்திலை விட்டுட்டு ஓடியந்துட்டன்
பெண்குரல்: என்ன சொன்னாலும் உங்களுக்கு என்னிலை விருப்பமில்லை என்ன?
தம்பீ கொஞ்சம் முன்னாலை அரக்கி நில்லும்,
தங்கச்சி கொஞ்சம் இஞ்சாலை அரக்கி வாணை.
அண்ணை கொஞ்சம் இறுக்கிப் பிடியண்ணை,
இது வலு ஆபத்தா வரும் போல கிடக்கு.

தொடர்ச்சி 29ம் பக்கம்

ஸ்ரீ வீராட் விஸ்வ குலபிரமனே நமக! வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை
E.S.T.M Jewellery & Schmuck
நவீன உயர்தர டிசைன்களில் நகைகள், திருமண ஆபரணங்கள், ஓடர் நகைகள், திருத்த வேலைகள், யாவும் செய்து கொடுக்கப்படும். தாலிக்குப் பொன்னுருக்குதல், காது மூக்குக்குத்துதல் போன்ற நல்ல காரியங்களும் செய்து கொடுக்கப்படும். பழைய நகைகளுக்குப் பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.
உரிமையாளர்:
சின்னத்துரை தயாகரன்
Rheinische Str.73
44137 Dortmund
Handy:01633642642




Tel:0231 1899023
அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

சேவைகளுக்கான விபரங்கள்!!!

# பாதுகாப்பில்லா பாதுகாப்பு படை!

## யேர்மனியில் தோட்டாக்கள் மாயம்!



கீர்த்தி

ஜெர்மனி கூட்டாட்சி பாதுகாப்பு படையான Bundeswehr ரிடமிருந்து 32,000 தோட்டாக்கள் திருட்டு போய் உள்ளது - இது 30 ஆண்டுகளில் நடந்திராத மிக பெரிய திருட்டாகும்! ஜெர்மன் பாதுகாப்பின் கீழ்தரமான பாதுகாப்பை இது பரைசாற்றுகிறது.
மோசமாக பாதுகாக்கப்பட்ட Bundeswehr ரிலிருந்து இதுவரை 2002 - 2013 ஆண்டுகளுக்குள், 524 அத்துமீறல்கள், 294 வன்முறைக்கிளர்ச்சிகள், 55 தீ வைப்புகள் மற்றும் 460 திருட்டு நடந்தேறியுள்ளன", என்று The Welt பத்திரிகை தெரிவித்துள்ளது. ஆயுதங்கள் 30 முறையும், ஏவுகணை 14 முறையும் திருட்டு போயிருப்பதாக அப்பத்திரிகை கூறியுள்ளது.

பிப்ரவரி 7 ம் தேதி 600 கிலோ எடையுள்ள பல்வேறு வகையை சேர்ந்த 32,981 தோட்டாக்கள் Seedorf paratrooper ராணுவ குடியிருப்பிலிருந்து களவு போய் உள்ளது.

உள்ளூர் போலீஸ், அரசாங்க பாதுகாப்பு சேவை, ஜேர்மன் படைவீரர்கள் மற்றும் இராணுவ பாதுகாப்பு சேவை இத்திருட்டை விசாரணை செய்தனர்.
தோட்டாக்களின் இழப்பு கண்டறியப்பட்ட உடனேயே ராணுவ குடியிருப்பு மூடப்பட்டு விட்டன. வளாகத்தை சுற்றியுள்ள வேலியில் ஒரு துவாரம் வெட்டப்பட்டிருப்பதும் கண்டுபிடிக் கப்பட் டிருக்கிறது! வெடிபொருட்களை எடுத்து செல்ல ஒரு வாகனமும் பயன்படுத்தப்பட்டிருப் பதாக ஒரு இரகசிய அறிக்கை கூறுகிறது. மேலும், தோட்டாக்கள் சேமிக்கப்படும் ஆயுத பதுங்குக்குழி போதிய தொழில்நுட்ப பாதுகாப்பு இல்லாமலும் இருந்திருக்கிறது.

2006-லேயே ஆலோசனை கமிஷன், பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட வேண்டும் என்று செய்த பரிந்துரையை யாரும் செவிமடுக்கவில்லை. குறிப்பாக, Seedorf ஆயுத பதுங்கு குழியில் கூடுதல் வேலி பாதுகாப்பும் கொள்ளை அலாரங்களும் பொருத்தப்பட வேண்டும் என்றும் ஏற்கனவே அந்த பரிந்துரை எச்சரிக்கை மணி அடித்துள்ளது. திருநெல்வேலிக்கே அல்வா!!


ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்



தினசரி மாலை 6.00 மணிக்குப் பூஜை உண்டு
துர்க்கா பூஜா துரந்தரர் சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304/ 16721
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Robert koch Str.5
58239 Schwerte

HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
உங்கள் தாய் மொழியில்....



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.
பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF ASP இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

லூட்ஸ் மாதா கோவில் புனிதப் பயணம்
April june july Aug மாதங்களில்
உணவு, தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.



எம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யேர்மனி Dortmund நகரில் இருந்தும்.Frankfurt நகரில் இருந்தும்,பல தடவைகள் லூட்ஸ் மாதா கோவிலுக்கு பஸ் மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
தொடர்புகள்: இத்தாலிக்கும் செல்லலாம்.
K.முருகா : 02972 7754 Handy: 0175 850 14 89

Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com






Bielefeld நகரில்....
Sahanan Video
Video& Foto
Full HD& Blu-ray
உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கலகரமான நிகழ்வுகளையும் மிகத் துல்லியமாகவும் அழகாகவும் படம்பிடித்து தருகின்றோம்.
K.Ravi
Tel:0521 42 86 528
Möbil:0177-191 21 28
e-mail:sahananvideo@hotmail.de



சிவகாமி மணவறைச் சோடினை
யோகன், யோகி:
02823/6838
Handy: 152 138 22 350

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

உதார் மணியடிச்சது?
அப்பூ ! உதென்ன குடை கொழுவுற கம்பியெண்டு இனைச்சீரே?
மணியடிக்கிற கம்பீல குடையைக் கொழுவிப் போட்டு தொங்கிப்பிடிச்சுக்கொண்டு நிக்கிறார்
கழட்டும் காணும் குடையை
என்னது மான் மார்க் குடையோ? ஓம் மான் மார்க் குடை எ எ என்ன என்ன என்ன? ஒழுகாதோ?
இப்ப மணியடிக்கிற கம்பீல குடையைக் கொழுவிப் போட்டு மான் மார்க் குடை ஒழுகாது எண்டு சொல்லிக்கொண்டு நிக்கிறீர் கழட்டும் காணும் குடையை.
அண்ணை எடுங் கோண்ணை......அண்ணை றைற்

இன்னுமொரு புதினம் பாருங்கோ.
பஸ்ஸுக்குள்ள தங்கச்சிமார் கனபேர் இருந்தால் தம்பிமார் மிச்சம் கேளாயினம். இருபத்தைஞ்சு அம்பேசம் மிச்சம் கேளாயினம் வெட்கத்திலை.
தூர இருந்துகொண்டு மெல்லிசாக் கையைக் காட்டிக் கொண்டே கேட்பினம்" அண்ணோய், ருவன்றி பைப் சென்ற்ஸ்""" அண்ணோய், ருவன்றி பைப் சென்ற்ஸ்"
நான் அந்தப் பக்கம் திரும்பியும் பார்க்கமாட்டன்.

அண்ணை எடுங்கோண்ணை......அண்ணை றைற்

தம்பி கொஞ்சம் அரக்கி நில்லுங்கோவன். எல்லாரும் கொஞ்சம் முன்னுக்குப் போங்கோவன்.
உங்களுக்குச் சொன்னா என்னப் பாருங்கோ
இந்த உலகத்திலை எல்லாரும் முன்னுக்குப் போகவேணுமெண்டு நினைக்கிற ஒரெயொரு சீவன் நான் தான்.
அண்ணை கோல்ட் ஓன்.

அண்டைக்கு இப்பிடித் தான் ஒருத்தர் இன்ரவியூவுக்குப் போகவெண்டு என்ர பஸ்ஸில வந்தார்.
படுபாவிக்கு ரை கட்டத் தெரியேல்லை.
ஆராவது தெரிஞ்சாளைக் கேட்டுக் கட்டியிருக்கலாம். இவன் தானே ரை கட்டிப் பழகியிருக்கிறான், சுருகு தளமாக் கட்டி.
சுருகுதளமாக் கட்டிக்கொண்டு இவர் வலு ஸ்ரைலா வந்து நிண்டார் பஸ்ஸுக்குள்ள.

**தலை நிறையப் பூ வச்சு, சாந்துப் பொட்டுக் கம கமக்க சாறி சர சரக்க மணியண்ணையின்ரை சீற்றுக்குப் பின்னால்**
**சீற்றில வந்து இருக்க வேணும்.**
**மணியண்ணன் சாடையாக் கண்ணாடி யைத் துடைச்சுப் போட்டு ஒரு பார்வை பார்த்துப் போட்டு ஓடுவார் பாருங்கோ ஓட்டம்.**



பக்கத்திலை ஒரு கட்டைக் கிழவன் நிண்டது.
மணியண்ணன் மாடொன்றைக் கண்டுட்டுச் சடன் பிறேக் போட, பக்கத்திலை நிண்ட கட்டைக் கிழவன் பார்த்திருக்கு எல்லா பாறிலயும் ஒவ்வொருதனும் தொங்கீனம், நான் பிடிக்க ஒரு பாறில்லையே எண்டு ஏங்கின கிழவன், இவற்றை ரைடயைக் கண்டிட்டுது.
பாஞ்செட்டி ரையைப் பிடிக்க சுருகுதளம் இறுகு அவர் இப்பிடி நிக்கிறார் மேலை.
எமலோகத்துக்கு இன்ரவியூவுக்குப் போக ஆயித்தம்.
நான் பக்கத்திலை இருந்த மனிசனிட்ட நல்ல காலம் சின்ன வில்லுகத்தியொண்டு இருந்த படியால் டக்கெண்டு வேண்டி ரையை அறுத்திருக் காவிட்டால் அவர் மேலை எமலோகத்துக்குப் போய் இன்ரவியூவுக்கு நிண்டிருப்பார்.
அண்டைக்கொரு பெடியன் கைநிறையப் புத்தகத் தோட வந்து பஸ்ஸுக்க நிண்டான்.
நான் கேட்டன், "தம்பி எப்பிடி நீர் நல்ல கெட்டிக்காரனோ" எண்டு".
ஓம் எண்டு சொன்னான்.
நான் உடன கேட்டன், சரித்திரத்தில ஒரு கேள்வி.
தம்பீ? கண்டி மன்னன், கடைசி மன்னன் விக்கிரமராசசிங்கனுக்கு கடைசியில ஏற்பட்ட கதி என்ன?டக்கெண்டு நான் கேட்டன். பொடியனும் உடன டக்கெண்டு மறுமொழி சொல்லிப்போட்டான். பொடியன் உடன சொன்னான்."அதோ கதி தான் " எண்டு.பெடியள் வலு விண்ணன்கள்.

மணியண்ணர் ஓடுறார் பாருங்கோ ஓட்டம், என்ன மணியண்ணனுக்கு சந்தோஷம் வரவேணும் பாருங்கோ
சந்தோஷம் எப்பிடி வரவேணும் எண்டு கேட்கிறியள்?
தலை நிறையப் பூ வச்சு, சாந்துப் பொட்டுக் கம கமக்க
காஞ்சிபுரம் சாறி சர சரக்க மணியண்ணையின்ரை சீற்றுக்குப் பின்னால்
சீற்றில வந்து இருக்க வேணும்.
மணியண்ணன் சாடையாக் கண்ணாடி யைத் துடைச்சுப் போட்டு ஒரு பார்வை பார்த்துப் போட்டு ஓடுவார் பாருங்கோ ஓட்டம்.
அண்டைக்கு இப்பிடித் தான் பாருங்கோ ஒரு சந்தோஷம் வந்து மணி யண்ணற்ற சீற்றுக்குப் பின்னால இருந்திது.

மணியண்ணர் கண்ணடியில பார்த்துப் போட்டு ஓட்டினார் பாருங்கோ ஓட்டம்
றோட்டில சனம் சாதியில்லை. ஞாயிற்றுக்கிழமை இல்லை, நல்ல வேர்க்கிங் டே. றோட்டில சனம் சாதியில்லை. சைக்கிள்ள வந்த வேலாயுதச் சட்டம்பியார் சைக்கிளைக் கானுக்கிள்ள போட்டுட்டு மதிலாலை ஏறிக்குதிச்சிட்டார். அந்தளவு ஓட்டம்
மாலி சந்தையடியில வரேக்க பாருங்கோ மாடொண்டு குறுக்கை வந்துது மணியண்ணர் வெட்டினார் ஒரு வெட்டு
பஸ் எங்கை நிண்டது தெரியுமே?
பக்கத்து பாண் பேக்கரிக்கை நிக்குது.
மணியண்ணரைக் காணேல்லை. "ஐயோ மணியண்ணை,
இருபது இருபத்தஞ்சு வருசம் என்னோட வேலைசெய்த மணியண்ணை எங்கையண்ணை போட்டியள்" எண்டு நான் கத்தி, விசிலடிச்சுக் கூக்காட்டிப் போட்டுப் பார்க்கிறன்.
மணியண்ணன் பேக்கரிக் கூரேல்லை நிண்டு ரற்றா காட்டுறார்.
நான் எங்கை இருந்தனான் எண்டு கேக்கேல்லை?
பெரியாஸ்பத்திரியில வேலை செய்யிற பெரிய சைஸ் நேர்சம்மா ஓராள் இருந்தவ, அவோன்ர மடியில பத்திரமா பக்குவமா இருந்தன்.
அண்ணை கோல்ட் ஓன்.
யாழ்ப்பாணம் வந்ததும் தெரியேல்லை. நான் கதைச்சுக் கொண்டு நிண்டிட்டன்.
அண்ணை கொஞ்சம் பின்னாலை அடிச்சு விடுங்கோண்ணை
நான் ஒருக்கா ரைம் கீப்பரிட்டை போட்டுவாறன்.
அண்ணை றைற்.....அண்ணை றைற்..... அண்ணை கோல்ட் ஓன்.
நன்றி: கானா பிரபா (மடத்துவாசல் பிள்ளையாரடி)


முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்
முகநாடி, கைரேகை ஜோதிடர்
அனுபவமுள்ள எண்கணிப்பு ஜாதக ஜோதிடர்

பண்டித் விநாயக்
அனைத்து மதத்தினரும் வரலாம்
விசேடமாக தண்ணீரில் ஜோதிடம் பார்க்கப்படும்
ஆலோசனைகள் மற்றும் தீர்வுகள்
வியாபாரம் - எதிரிகள் - உடல்நிலை வேலை குழந்தையின்மை
திருமணம் - பணம் - குடிபோதை காதல் - விசா விவாகரத்து
வழக்குகள் - கண்திருஷ்டி குடும்ப ஒற்றுமை படிப்பு
வாகனப்பொருத்தம் - லாட்டறி புதையல் - மற்றும் பல
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்.
பேசும் மொழிகள் - ஆங்கிலம் கிந்தி மற்றும் தமிழ்
கிழமை 7 நாட்களும் 09.00 முதல் 20.00 மணி வரை வரலாம்
0152 10 55 1178
0152 18 69 40 99
Langestr.98- 44137 Dortmund

வெற்றிமணி
இலவசம்!
ஆனால் இலகுவில் கிடைக்காது!
பிரதிக்கு என்றும் முந்தவும்




யேர்மனியில் பிராங்பேட் நகரில்...
Jaffna Basar
உரிமையாளர் நடராஜா சுதன்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்க குறைந்த விலையில்
விமான பயணச்சீட்டுக்கள் மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும்
Jaffna Basar Jewellery
Kaiserstr.64 (Laden Nr.22)
60329 Frankfurt am Main
Tel: 069 25 62 63 53


அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்









பாலிவுட்டில் கங்கனா ரனாட் நடித்து சமீபத்தில் வெளிவந்துள்ள Queen திரைப்படம் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது...காரணம் அதனுடைய மிகவும் வத்தியாசமான, துணிச்சலான ஆனால் எளிமையான கதையம்சம்.

அதாவது திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, வருங்கால கணவன் தன்னை மணக்க இயலாது என்று கூற, ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட தேனிலவிற்கு தனியாக செல்ல முடிவு செய்யும், ஒரு சிறிய நகரத்தை சேர்ந்த இந்திய பெண்ணின் கதை! அந்த பயணத்தில், அப்பெண் பெறும் சுய உணர்தலும் அனுபவிக்கும் சுதந்திரமே திரைக்கதை.

மார்ச் 7 ம் தேதி வெளியிடப்பட்ட இந்த படம் விமர்சகர்கள் மற்றும் பார்வையாளர்களின் அமோக வரவேற்பை பெற்றுள்ளது. நல்ல முயற்சி அல்லவா? இயக்குனர் விகாஸ் பாஹ்ல்க்கு ஒரு வாழ்த்து!



## குடும்பத்தில் பெண்களின் முக்கியத்துவம்

-ரஜினி

**மகளிடம் அன்பு வேண்டுகோள்!**

இன்னும் ஐஸ்வர்யா, சவுந்தர்யா நிறைய படங்கள் பண்ணவேணும். அதே நேரத்தில், குடும்பத்தில் பெண்களுக்கு முக்கியத் துவம் அளித்தால் மட்டுமே நல்ல குடிமக் களை உருவாக்க முடியும் என்பது எனது கருத்து. குழந்தைகளுக்கு 10, 12 வயசு ஆகும் வரைக்கும் நல்லா பார்த்து வளர்த்துவிட்டு, அதற்கு பிறகு என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

'கோச்சடையான்" பெரும் வெற்றி பெறும் பிறகு நிறைய பேர் இயக்கச் சொல்லி சவுந்தர்யாவைக் கேட்பார்கள் 2 குழந்தை களை பெற்றுக் கொடுத்துட்டு அதற்கு பிறகு நீங்க என்ன வேண்டுமானாலும் செய்யுங்க அப்படி நான் சொல்லிக்கறேன்.

## 4ம் ஆண்டு நினைவு அஞ்சலி

## அமரர்: வல்லி-சிவலிங்கம்

மலர்வு: 09.10.1946: உதிர்வு: 31.03.2010



அமரர்: வல்லி-சிவலிங்கம்
(வைத்தியசாலைவீதி, சங்கானை, யாழ்.)

எம் குடும்ப குலவிளக்காய் ஒளிவீசி
எம்மையெல்லாம் வளர்த்தெடுத்த
பண்பில் நிறைந்த பெருமகனே!
ஆண்டுகள் நான்கு கடந்திட்ட போதும்
இன்றுபோல் நினைவுகள் எம்முன்னே...
ஆறாத உங்கள் நினைவோடு
இதயக் கோவிலில் பூசிக்கின்றோம்.
என்றும் உங்கள் நினைவோடுஇ
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
தகவல்: சி. சசிக்குமார் கும்மர்ஸ்பாக் (யேர்மனி)
0177 51 94 231

Milin Impex GmbH
Asiatische Lebensmittel Groß und Einzelhandel

யேர்மனியில் தலைமுறை,
தலைமுறையாக
தரமான ஆசிய, ஆபிரிக்க
உணவுப் பொருட்களின்
இறக்குமதியாளர்களும், மொத்த,
சில்லறை விநியோகஸ்தர்களும்.

வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எங்கள்
இனிய தமிழ்ப்
புத்தாண்டு வாழ்த்துக்கள்



Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen

மேலதிக விபரங்களுக்கு எமது இணையத்தளத்தை நாடுங்கள்.
Web :www.milinimpex.de






Milin Impex
Dortmund நகரில்
Westendorf Str.41
44287 Dortmund
Tel: 0231 45 96 17 /28
Fax: 0231 18 15 288

Mail:info@milinimpex.de

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# திரை உலகம்







சூப்பர்ஸ்டார் ரஜினியுடன் நடித்தால் கவுரவம் என்பதாலேயே எனது கதாபாத்திரத்தைக் கூட விசாரிக்காமல் கோச்சடையான் படத்தில் நடிக்க ஒப்பு கொண்டேன் எனத் தெரிவித்துள்ளார் ஹிந்தி நடிகை தீபிகா படுகொனே. ஓம் சாந்தி ஓம் படத்தின் மூலம் ஷாருக்கான் ஜோடியாக பாலிவுட்டில் அறிமுகமானார் நடிகை தீபிகா படுகோனே.

**ரஜினிக்காக மட்டுமே !கோச்சடையான் படத்தில் நடித்தேன்- தீபிகா படுகோனே**

# மறைந்தும் மறையாத மாபெரும் கலைஞன் நாகேஷ்

## கோச்சடையானில் ஒரு கதாபத்திரத்தில் நடித்துள்ளார்!





மீண்டும் நாகேஷ்...

முதல் படமே அவருக்கு முன்னணி நடிகை அந்தஸ்தைப் பெற்றுத் தந்தது. தற்போது அதிக வருமானம் வாங்கும் வெற்றிப்பட நாயகிகளில் ஒருவராக திரை உலகில் பிரகாசிக்கிறார் தீபிகா. இந்நிலையில், கோச்சடையான் படத்தில் நடிகர் ரஜினிகாந்த் உடன் இணைந்து நடித்துள்ளார் தீபிகா. அப்பட அனுபவம் குறித்துச்செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்துள்ள பேட்டியில் அவர் கூறியதாவது :-

ரஜினிக்காக மட்டும்... நடிகர் ரஜினிகாந்தின் மகளும், பட இயக்குனருமான சவுந்தர்யா இந்த படத்தில் நடிப்பதற்காக என்னை அணுகியபோது, கதையம்சம், திரைக்கதை அல்லது தீபிகாவின் கதாபாத்திரம் என எதனையும் நான் கேட்கவில்லை. உடனே நடிக்க ஒப்பு கொண்டேன்.

கௌரவம்.... காரணம் நடிகர் ரஜினிகாந்த் உடன் ஒன்றாக நடிப்பது என்பது எனக்கு மிக பெரிய கௌரவம் எனக் கருதினேன். மேலும், அவருடன் பேசுவதற்கும், அவருடன் சினிமா குறித்து விவாதிப்பதற்கும் கிடைத்த பெரிய வாய்ப்பாகவே இப்பட வாய்ப்பை உணர்ந்தேன்" என இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மோசன் கேப்சர்.... இந்தியாவிலேயே முதல்முறையாக 'மோசன் கேப்சர்" தொழில் நுட்பத்தில் உருவாகியுள்ள கோச்சடையான் படம் வரும் ஏப்ரல் 11ம் தேதி வெளியாக உள்ளது.

இப்படத்தில் ரஜினி மற்றும் தீபிகா படுகோனேவுடன் நடிகர்கள் ஜாக்கி ஷெராப் மற்றும் ஆர். சரத்குமார் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்துள்ளனர். மேலும் மறைந்த நடிகர் நாகே"ம் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருப்பது போல் காட்சிகள் தொகுக்கப் பட்டுள்ளன. ஒருவர் மறைவுக்குப்பின்னும் ஒரு படத்தில் நடிப்பது இதுவே முதல் தடைவை. நாஷே ஒரு படத்தில் பிணமாகக்கூட நடித்திருந்தார். தற்போது மரணத்தின்பின் உயிரோடு நடிக்கின்றார். நாகேஷ் போன்று ஒரு பிறவிக்கலைஞனைத் திரையுலகம் காண்பது அரிதே!





பாரதிராஜாவுக்கு ஜோடியாக ஸ்ரீதேவி.

ஜீவி பிரகாஷ் ஹீரோவாக நடிக்கும் இரண்டாவது படத்தில் பாரதிராஜாவுக்கு ஜோடியாக நடிக்கிறார் ஸ்ரீதேவி. பதினாறு வயதினிலே படத்தில் பாரதிராஜாவால் முன்னணி நடிகையாக உயர்ந்தவர் ஸ்ரீதேவி. அந்தப் படத்தில் மயிலுவாக வந்து மக்கள் மனங்களில் அமர்ந்தார்.

அதன் பிறகு இந்தியத் திரையுலகில் இணையற்ற நட்சத்திரமாக வலம் வந்தார். பாரதிராஜா ஜோடியாகிறார் மயிலு ஸ்ரீதேவி! திருமணம் முடிந்து இப்போது அவரது இரு மகள்களும் நடிப்பு மாடலிங் என்று களமிறங்கியுள்ள நிலையில், மீண்டும் முழுவீச்சில் நடிக்கக் கிளம்பிவிட்டார் ஸ்ரீதேவி.

அவரது மறுபிரவேசப் படமான இங்கிலீஷ் விங்கிலீஷ் நல்ல வெற்றியைப் பெற்றது.

தொடர்ந்து நல்ல வாய்ப்புகளை மட்டும் ஏற்றுக் கொள்கிறார் ஸ்ரீதேவி. தமிழில் ஜீவி பிரகாஷ் ஹீரோவாக நடிக்கும் த்ரிஷா இல்லன்னா நயன்தாரா படத்தில் இயக்குநர் பாரதிராஜா முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார் என்பதை ஏற்கெனவே தெரிவித்திருந்தோம். இப்படத்தில் பாரதிராஜாவுக்கு ஜோடியாக நடிக்கப் போகிறவர் மயிலு ஸ்ரீதேவிதான். இயக்குநர் பாரதிராஜா ஏற்கெனவே சில படங்களில் நடித்திருந்தாலும், சமீபத்தில் வெளியான பாண்டிய நாடு மூலம் மிகச் சிறந்த நடிகர் என்ற பாராட்டைப் பெற்றுள்ளார்.

## ரஜினி வழியில் நயன்தாரா: காவியுடன் இமயமலை பயணம்







ரஜினிகாந்த் வழியில் நடிகை நயன்தாராவும், காவி உடை, கழுத்தில் ருத்திராட்சமாலை சகிதமாக இமயமலைக்கு திடீர் பயணம் மேற்கொண்டார். அங்குள்ள கோவில்களில் வழிபாடு நடத்தினார்.உதயநிதி ஜோடியாக நண்பேன்டா படத்திலும் ஜெயம்ரவி ஜோடியாக பெயரிடப்படாத படமொன்றிலும் நயன்தாரா நடித்து வருகிறார். நண்பேன்டா படப்பிடிப்பு கும்பகோணத்தில் முடிவடைந்தது. ஜெயம் ரவியுடன் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு டெராடூனில் துவங்கியுள்ளது. அங்கு தான் நடிக்க வேண்டிய காட்சிகளை முடித்து கொடுத்து விட்டு நேராக இமயமலை சென்றார்.

அங்கு கழுத்தில் ருத்ராட்ச மாலை அணிந்தார். உடம்பில் காவி துண்டை போர்த்திக் கொண்டார். நெற்றியில் சந்தனத்தால் சூலாயுதம் வரைந்தார். பிறகு ஹரித்வார், ரிஷிகேஷ் பகுதிகளுக்கு ஆன்மீக பயணம் மேற்கொண்டார். சப்தரிஷி ஆசிரமத்துக்கு சென்று தியானம் செய்தார். நீலகண்ட மகாதேவர், சப்தசரோவர், லட்சுமணன் சூலம், ரெமிமேபர், கோவில்களுக்கு சென்று சாமி கும்பிட்டார். கார் செல்ல முடியாத இடங்களில் நடந்தே சென்று வழிபட்டார். நயன்தாரா இந்து மதத்தில் தீவிர நம்பிக்கையுள்ளவராக மாறியுள்ளார். மூன்று வருடங்களுக்கு முன்பு சென்னையில் உள்ள ஆர்ய சமாஜத்துக்கு சென்று இந்து மதத்துக்கு மாறினார். அதன் பிறகு இந்து கோவில்களுக்கு சென்று சிறப்பு பூஜை வழிபாடுகள் செய்வதை வழக்கமாக வைத்துள்ளார். எந்த ஊருக்கு படப்பிடிப்புக்கு போனாலும் அங்குள்ள கோவில்கள் பற்றி தெரிந்து கொண்டு நேரில் போய் சாமி கும்பிட்டு வருகிறார்.நயன்தாரா சமீபத்தில் நடித்த ராஜா ராணி, ஆரம்பம், இது கதிர்வேல் காதல் படங்கள் வெற்றிகரமாக ஓடின. அடுத்து தமிழ், தெலுங்கில் தயாரான அனாமிகா படம் வருகிறது. இது இந்தியில் பரபரப்பாக ஓடிய கஹானி படத்தின் ரீமேக் ஆகும்.

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்


# Rathy Jewellers Ltd
The Leading Jewellery store in London with the largest selections
அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
அதிக தேர்வுடன் கூடிய, லண்டனில் முன்னணியில் திகழும் நகைமாளிகை ரதி!

28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063

எப்பொழுதும்
நியாயவிலை
புத்தம் புதுநகைகள்!

Opening Hours
Mon-Sat 10.00 am to 6.30 pm
Sun 12.00 to 6.30 pm

209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233

# Logan Accountants Ltd
மிகக்குறைந்த கட்டணம் மனம் நிறைந்த சேவை

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

Mob: 0795771 4850

Milton Keynes Business centre,
Suite 115 Foxhunter Drive
Linford wood
Milton Keynes
MK14 6GD
U.K

jeya@loganltd.co.uk




# விமான விபத்து! இதோ சில உண்மைகள்!

விமான விபத்து - இதோ சில உண்மைகள்!

திடிரென விமானங்கள் நாடு வானில் காணமல் போய் விபத்துக்குளாகும் காரணத்திற்கான உண்மைகள்.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் ல் 18 ஆண்டுகள் PILOT டாக பணியாற்றிய நண்பர் ஒருவர் தெரிவித்த தகவல்களை இங்கு தொகுத்து தந்துள்ளோம்.

1. விமானங்களுக்கும் கப்பலுக்கும் வானத்திலும் கடலிலும் ஒவொரு மார்கதிற்க்கும் வாகனங் களுக்கான சாலை மார்க்கம் தடம் போல் நிரந்தர ஆகாய பாதை விமானதிர்ற்கும் நிரந்தர கடல் வழி கப்பலுக்கு கடலில் நிரந்தர வழியும் உண்டு. சர்வதேச விமான கட்டுபாட்டு துறையும் கப்பல் கட்டுபாட்டு துறையும் வகுத்துள்ள நிரந்தர வழிகளில் மட்டுமே விமானத்தையும் கப்பலையும் செலுத்தவேண்டும்.

பறந்து விரிந்த ஆகாயம் தானே என விமானத்தையும் , விரிந்து கிடக்கும் கடல்தானே என கப்பலையும் விருப்பம் போல் ஓட்ட முடியாது.

3. உலகில் 7 ஆயிரத்திற்கு மேற்பட்ட பகுதியில் நடு கடல் பகுதியில் புவி ஈர்ப்பு விசை (கோஸ்ட் பிளேஸ் )அதிகமாக உள்ள இடங்கள் என கண்டறிய பட்டுள்ளது. அந்த இடங்களில் மட்டும் சுமார் 60அயிரம் அடிவரை இந்த புவி ஈர்ப்பு விசை இருக்கும் . இதன் மேல் எந்த பொருள் பூமிக்கு மேல் சென்றலும் அதை கீழே இழுத்து விடும் சக்தி கொண்டது. அத்தகைய இடங்களில் விமானமும் கப்பலும் செல்ல தடை உள்ளது. முக்கியமாக இந்தோனேசியா கடல் பகுதியிலும், வங்காள விரிகுடா அந்தமான் பகுதியிலும், வடக்கு கனடா,

பசிபிக் மற்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் அதிக இடங்களில் இந்த கோஸ்ட் place என கூற படும் பகுதிகள் உள்ளது. இதுபற்றி அந்ந்தந்த விமான வழி தடங்களில் செயல்படும் விமானிகளுக்கு பயிற்சி கொடுக்க பட்டிருக்கும்.

4. வானில் 30 ஆயிரம் அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டு இருக்கும் போது அந்த விமானம் வானவெளியில் பறக்க குறைந்தபட்ச காற்று அழுத்தம் தேவை. அப்போது தான் வானவெளி அந்தரத்தில் எஞ்சின் கட்டுப்பாட்டில் அதை சீராக கீழே இறங்காமல் நேரே விமானத்தை முன்னோக்கி கொண்டு செல்லும்.

5. சில சமயங்களில் மழை புயல் காலங்களில் விமானம் பறக்கும் தடத்தில் VACCUM pocket எனப்படும் நெகடிவ் பிளேஸ் வெற்றிடம் 200 முதல் 500 கிலோமீட்டர் வரை இருக்கும். அதை முன்பே விமானகட்டுபாட்டு அரை கண்டு கொண்டு விமானத்தை வெற்றிடம் இல்லாத தடத்தில் இயக்க விமானிகளுக்கு அறிவுரை வஷங்கபடும். சில சமயங்களில் கட்டுபாட்டு அரை ராடாரில் சிறிய அளவிலான வெற்றிடம் தெரியாது.

இது போன்ற சிறிய அளவிலான வெற்றிடங் களுக்கு அருகில் விமானம் வரும் போது தான் விமானத்தின் ராடார் சாதனத்தில் மட்டும் இது தென்படும். அப்போது நீங்கள் விமானத்தில் இருக்கும் போது விமானி நீங்கள் சீட் பெல்ட் அணிந்திராவிடில் உங்களை சீட் பெல்ட் அணிய சொல்லி அதற்க்கான உங்கள் தலைக்கு மேல் உள்ள எச்சரிக்கை சின்ன விளக்கை எரிய விடிவார்.

அடுத்த ஓரிரு நிமிடங்களில் விமானம் குண்டும் குழியும் இருக்கும் சாலையில் பயணிப்பது போல் ஒரு உணர்வு நமக்கு தெரியும். பொதுவாக விமானம் ஆகாயத்தில் பறக்கும் போது ஒரு எஞ்சின் மட்டும்தான் இயங்கும். மற்றொரு எஞ்சின் ளியசந ராக எமெர்ஜென்சி க்கு பயன்படுத்த இருக்கும். வெற்றிடத்தில் விமானம் நுழையும் பொது இரு விமான எஞ்சின்களும் அதிகபட்ச RPM ல் மானுவலாக விமானி இயக்குவார். இது 20 முதல் 50 கிலோமீட்டர் தூரத்திற்கு வெற்றிடம் இருந்தால் மட்டும் விமானத்தை பாதுகாப்பாக செலுத்தி வெற்றிடத்தை தாண்டுவது சாத்தியம்.

6. இன்று நடந்த மலேசியன் விமான விபத்து கூட இந்த பாணியில் நடந்திருக்கும் என விமானி நண்பர் கூறுகிறார். முக்கியமாக ஒவொரு விமானத்திலும் இரண்டு விமானிகள் இருப்பார். நீண்ட தூரம் செல்லும் விமானத்தில் 2 மணி நேரத்திற்கு ஒருவர் என விமானத்தை ஒரு விமானி கட்டுபாட்டில் வைத்து விமானத்தை இயக்கு வார்கள். அப்போது ஒரு விமானி ஓய்வு எடுப்பார். சில சமயங்களில் விமானம் மேலே பறக்க துவங்கியவுடன் கட்டுபாட்டு அறையிலிருந்து அந்த விமான தடத்திர்கான நிலை குறித்து தகவல் வரும்.

வந்திருக்கும் காலநிலை அறிவித்தல் சாதாரணமாக இருந்தால் பல விமானங்களில் இரு விமானிகளும் AUTO BELT எனப்படும் தானியங்கி விமான இயக்க mode டை ஓட செய்து விட்டு கண்ணை மூடி தூங்கி விடுவார்கள்.

விமான தடத்தில் திடிரென சிறிய வெற்றிடம் வரும் போது திடிரென விமானம் கட்டுபாட்டை இழந்து சில நொடிகளில் கடலிலோ நிலத்திலோ விழும். இது போல் விபத்துக்கள் பெரும்பாலும் நள்ளிரவுக்கு பின் பறக்கும் விமானங்களில் நடக்கும்.

2008ம் ஆண்டு அதிகாலை நேரத்தில் 280 பயணிகளுடன் சென்னையிலிருந்து சிங்கப்பூர் வந்த இந்தியன் airline விமானமும் வங்காள விரிகுடாவில் பறந்து கொண்டு இருக்கும் போது இதுபோல் ஒரு காற்று இல்லா வெற்றிடத்தில் சிக்கி திடிரென விமானம் இருபத்து ஐந்தாயிரம் அடிக்கு கீழே செங்குத்தாக கீழே இறங்க கடலை தொடும் தருவாயில் விமானியின் சமயோசித தனத்தால் திரும்பவும் விமானத்தை கட்டுபாட்டுக்கு கொண்டு வந்து விபத்தை தவிர்த்தார் என்பது குறிப்பிடதக்கது .

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்